# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 சித்திரை 06 புதன்கிழமை (19.04.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :143


# தனியார் ஹெலி வசதியை புலிகள் ஏற்கமாட்டார்கள்

## உடனடியாக அமைதிப் பேச்சுகள் நடைபெறும் சாத்தியமும் குறைவு

கொழும்பு, ஏப்ரல்19

விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாணத் தளபதிகள் வன்னி சென்று திரும்புவதற்கு தனியார் ஹெலிகொப்டர் வசதியை வழங்கும் யோசனையைப் புலிகள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என நம்பகரமாக அறியவருகின்றது.

அதேசமயம், அடுத்த சுற்று அமைதிப் பேச்சுகள் விரைவில் நடைபெறுவதற்கான சாத்தியங்கள் மிகக் குறைவு என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கிழக்குத் தளபதிகளின் போக்குவரத்துக்குத் தனியார் நிறுவன ஹெலிகொப்டரைப் பயன்படுத்தலாம் என்ற யோசனைத் திட்டம் நோர்வே அனுசரணைத் தரப்பு ஊடாக விடுதலைப் புலிகளுக்குத் தெரியப்படுத்தப்பட்டிருப்பதாக அறியவருகிறது.

இந்த யோசனைத் திட்டத்தை புலிகளின் தலைமை ஆராய்ந்து வருகின்றது. ஆனாலும், இந்த யோசனையைப் புலிகளின் தலைமை பெரும்பாலும் ஏற்காது என்பதைச் சம்பந்தப்

(14ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.நகரில் இளைஞர் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், ஏப்.19

யாழ்ப்பாணம் கொய்யாத்தோட்டப்பகுதியில் நேற்றுப் பிற்பகல் 4 மணிக்கு இளைஞர் ஒருவர் ஆயுததாரிகளால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

கொய்யாத்தோட்டம், புது வீதியைச் சேர்ந்த பாலச்சந்திரன் றெஜினோல்ட் றொஷான் (வயது 26) என்பவரே சுட்டுக் கொலை செய்யப்பட்டவராவார்.

தனது பேர்த்தியாரின் வீட்டில் இவர் ரி.வி.

(14ஆம் பக்கம் பார்க்க)

**நாளைய கல்விச்சுடரில்**

பௌதீகவியல் வினாத்தாள் வெளிவரும்.

## அச்சுவேலியில் சடலம் மீட்பு

அச்சுவேலி, ஏப்.19

அச்சுவேலி தெற்கு முழக்கன் சுடலைக்கு அருகில் உள்ள பற்றைக்குள் உருக்குலைந்த நிலையில் ஆணின் சடலம் ஒன்று நேற்று மாலை 5 மணியளவில் பொதுமக்களினால் கண்டுபிடிக்கப்பட்டது.

மக்கள் நடமாட்டம் குறைவான பகுதியில் வீசிய துர்நாற்றத்தையடுத்து பற்றைக்கு அருகே சென்றவர்கள் சடலத்தை அவதானித்தனர். சாரம், சேட் அணிந்த நிலையில் உறுப்புகள் சிலவற்றை நாய்கள் கடித்து குதறிய நிலையில் காணப்படும் சடலத்தின் தலையில் மண்டை ஓடு பிளந்த நிலையில் பலத்த காயமும் காணப்பட்டதாக கூறப்பட்டது.(3-11)

## யாழ்ப்பாண நகரப் பகுதியை இராணுவம் அதியுயர் பாதுகாப்பு வலயமாக்க முயற்சி?

### உள்நுழையும் வீதிகளில் சோதனைச்சாவடிகள் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 19

யாழ்ப்பாண நகரத்தை இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயமாக மாற்றும் முயற்சிகளில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர் என செய்தி ஏஜென்ஸிகள் சில தகவல் வெளியிட்டுள்ளன.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தற்போது நிலவிவரும் அசாதாரண சூழ்நிலையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தியே இராணுவத்தினர் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கின்றனர் எனக் குற்றம் சுமத்தப்படுகின்றது.

யாழ்ப்பாண நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கான சகல வீதிகளையும் வழிமறித்து வீதித் தடைகளையும், சோதனைச் சாவடிகளையும் அமைத்து அங்கு இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கான குறியீட்டுப் பலகைகளையும் இராணுவத்தினர் தொங்கவிட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சோதனைச் சாவடிகளில் நின்றவாறு நகருக்குள் பிரவேசிப்பவர்கள் மீது கடுமையான சோதனைக் கெடுபிடிகளை மேற்கொண்ட பின்னரே அவர்களை மேற்கொண்டு செல்லப் படையினர் அனுமதிக்கின்றனர். அதுமட்டுமின்றி இராணுவ அடையாள அட்டை இல்லாதவர்களை நகருக்குள் பிரவேசிக்கவிடாது தடுக்கும் நடவடிக்கைகளிலும் இராணுவம் ஈடுபடுவதாகக் கூறப்படுகின்றது.

காவலரண்கள் உள்ள வீதிகளின் குறுக்கே ஆழமாகக் குழி வெட்டி இராணுவத்தினர் வேகத்தடைகளை அமைத்துள்ளனர். இதனால் வீதிகளில் பயணிப்போரும், வாகனச் சாரதி

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஊடுருவ முயன்ற கருணா குழுமீது புலிகள் தாக்குதல்; மூவர் பலி!

### ஒருவர் பிடிபட்டார் எனத் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஏப். 19

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான பெண்டுகள் சேனைக்குள் ஊடுருவித் தாக்குதலொன்றை நடத்த முயன்ற கருணா குழுவினர் மீது புலிகள் நடத்திய தாக்குதலில் மூன்று பேர் கொல்லப்பட்டனர். கருணா குழுவின் மற்றுமொரு உறுப்பினர் புலிகளினால் கைது செய்யப்பட்டார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## உகந்த சூழ்நிலை ஏற்பட்டாலேயே ஜெனீவாப் பேச்சுக்குச் செல்வோம்

### புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 19

''எமது மக்கள் கொல்லப்படுகிறார்கள். எமது மக்களுக்குச் சொந்தமான கடைகள், வியாபார நிலையங்கள் சூறையாடப்படுகின்றன. இப்படியான ஒரு சூழ்நிலையில் ஜெனீவாப் பேச்சுக்கு நாங்கள் எப்படிப் போக முடியும்? தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும். இவையெல்லாம் ஒருங்கே அமைந்த 'உகந்த சூழ்நிலை'யொன்று உருவாக வேண்டும். அப்பொழுதே நாங்கள் ஜெனீவாப் பேச்சுக்குப் போவோம்'' - என்று விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தின் செயலாளர் நாயகமான எஸ். புலித்தேவன் 'ரொய்ட்டர்' செய்தி நிறுவனத்துக்கு நேற்று வழங்கிய

(13ஆம் பக்கம் பார்க்க)

## வந்தார் போவர்; நாளை வன்னிக்கு!

கொழும்பு, ஏப். 19

அமைதி முயற்சிகள் நெருக்கடிக்கட்டத்தை அடைந்து மீண்டுமொரு போர் வெடிக்கும் சூழல் ஏற்பட்டிருப்பதையடுத்து நேற்று அவசர விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வந்த நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் ஜோன் ஹன்ஸன் போவர், நாளை வியாழக்கிழமை வன்னியில் விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் பேச்சு நடத்தவுள்ளார்.

இன்று கொழும்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அரச சமாதான செயலகத்தினருடனும் போவர் தனித்தனி பேச்சுக்களை நடத்தவுள்ளார். இந்தப் பேச்சுகளின் போது ஆராயப்படவுள்ள விடயங்களை நாளை கிளிநொச்சிச் சந்திப்பின்போது அவர் முன்வைத்து புலிகளுடன் கலந்துரையாடுவாரென கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

கிளிநொச்சியிலிருந்து திரும்பியவுடன் போவர் நாளை மீண்டும் ஜனாதிபதியை சந்திக்கவுள்ளார். இன்றையதினம் தேசியப் பத்தி

(14ஆம் பக்கம் பார்க்க)

## கிளைமோர் தாக்குதல்களுக்கு விடுதலைப் புலிகளே காரணம்

### குற்றம் சுமத்துகின்றார் கண்காணிப்புக் குழுத் தலைவர்

வடக்கு - கிழக்கில் இடம்பெற்றுவரும் பல கிளைமோர் தாக்குதல்களுக்கு விடுதலைப் புலிகளே காரணகர்த்தாக்களென்று இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவர் உல்வ் ஹென்றிக்ஸன் நேற்று குற்றஞ்சாட்டியுள்ளார்.

வெளிநாட்டு செய்தி நிறுவனமொன்றிற்கு பேட்டியளித்த அவர், இவ்வாறான தாக்குதல்கள் அமைதி முயற்சியைப் பெரிதும் பாதிக்குமென்றும் குறிப்பிட்டார் எனத் தெரிகின்றது.

வடக்கு - கிழக்கில் இடம்பெற்றுவரும் கிளைமோர்த் தாக்குதல்களை நோக்குகையில் அவ்வாறான தாக்குதல்களை விடுதலைப் புலிகளால்தான் மேற்கொள்ள முடியுமென்று

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இப்படியும் நடக்கிறது

யாழ்ப்பாணம்,ஏப்.19

உதவிசெய்யச் சென்றவர் உபத்திரங்களுக்கு இலக்கானார்.

நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நகரப் பகுதியில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவத்தில் காயமடைந்தவர்களை காப்பாற்றுவதற்கு உதவி செய்த இளைஞர் படையினரால் அழைத்துச்செல்லப்பட்டு விசாரித்தபின்னர் மாலை சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில் வைத்து விடுவிக்கப்பட்டார்.

சம்பவத்தில் காயமடைந்த இருவருக்கும் உதவியாகச் செல்வதற்காக அம்புலன்ஸ் வாகனத்தில் ஏறியிருந்த வேளையில் படையினரால் அழைத்துச்செல்லப்பட்டதாகவும் பின்னர் மாலை இவரது பெற்றோர் சாவகச்சேரி பொலீஸ் நிலையத்திற்கு வரவழைக்கப்பட்டு விடுவிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி பெருங்குளம் சந்தியைச் சேர்ந்த கிறிஸ்தோப்பர் விஜயரூபன் (வயது 28) என்பவருக்கே இந்த அனுபவம் கிடைத்தது. (33)

# சாவகச்சேரி குண்டுத் தாக்குதலை கண்டிக்கிறது மாணவர் ஒன்றியம்

யாழ்ப்பாணம்,ஏப்.19

சாவகச்சேரியில் மாணவர் ஒருவர் உட்பட இருவர் உயிரிழக்கக் காரணமான குண்டுத் தாக்குதலை தமிழ் மாணவர் ஒன்றியம் கண்டித்திருக்கிறது.

இத்தாக்குதல் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் என்று மாணவர் ஒன்றியம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஸ்ரீலங்காவின் பேரினவாத ஆட்சியாளரும் படைத்தரப்பும் மீண்டும் தமிழின அழிப்பை திட்டமிட்டு நடத்தத் தொடங்கிவிட்டன. இதனைப் பொறுக்கமுடியாமல் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் மன்னிப்புக் கோரும் பொங்கியெழும் மக்கள்படையும் இராணுவத்திற்கெதிராக தாக்கத் தொடங்கிவிட்டது.

இந்நிலையில், தமது கொலைவெறியை அப்பாவி மாணவர் மீதும் மக்கள் மீதும் ஸ்ரீலங்காப் படைகள் கட்டவிழ்த்து விட்டுள்ளன. இதன் ஒரு கட்டமாக 17.4.2006 அன்று சாவகச்சேரியில் மாணவர்களை பணயக் கைதிகளாக பயன்படுத்திய ஸ்ரீலங்கா ஆக்கிரமிப்பு இராணுவம் கிளைமோர் குண்டை செயலிழக்க செய்ய மாணவர்களைப் பயன்படுத்தியதன்மூலம் குண்டுவெடித்து சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவன் அற்புதராசா சுரேஸ்குமார் கொலைசெய்யப்பட்டுள்ளார். படையினரின் இத்தகைய காட்டுமிராண்டித்தனத்தை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அத்துடன் இறந்த மாணவனுக்கும் பொதுமக்களுக்கும் அஞ்சலிகளைத் தெரிவிப்பதோடு, இத்தகைய இராணுவ கெடுபிடிகளில் இருந்து விடுபட்டு எமது தாயகத்தை மீட்டெடுக்க அனைத்து மாணவர்களையும் அணிதிரளுமாறு அன்பாக வேண்டுகிறோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ) (33)

# பெரியமடு காட்டில் வேட்டைக்குச் சென்ற மூவர் நேற்று சடலங்களாக மீட்கப்பட்டனர்!

## ஆழ ஊடுருவும் படையினரால் கொல்லப்பட்டனரா?

புளியங்குளம்,ஏப்.19

வவுனியா வடக்கு பெரியமடு காட்டுப் பகுதிக்கு கடந்த 13ஆம் திகதி வேட்டைக்காகச் சென்ற மூவர் வெட்டுக் காயங்களுடன் சடலங்களாக நேற்று மீட்கப்பட்டுள்ளனர்.

பெரியமடுவைச் சேர்ந்த தியாகராசா குகனேஸ்வரன் (வயது 36), சிவசம்பு நகுலேந்திரராஜா (வயது 46), சிவகுரு திரவியம் (வயது 32) ஆகியோரே சடலமாக மீட்கப்பட்டவர்களாவர்.

பிரஸ்தாப நபர்கள் மூவரும் தமது நாய்களுடன் வேட்டைக்காக பெரியமடு காட்டுப் பகுதிக்குச் சென்றிருந்த பின்னர் காணாமற் போயிருந்தனர்.

இவர்கள் தொடர்பான தகவலைப் பெற்றுத்தருமாறு அவர்களது உறவினர்கள் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடமும் விடுதலைப் புலிகளிடமும் கோரியிருந்தனர்.

பின்னர் நேற்று இவர்களைத் தேடிச் சென்ற உறவினர்கள் காட்டுப்பகுதியில் சடலங்கள் கிடப்பதைக் கண்டுபிடித்தனர்.

சடலங்களில் வெட்டுக்காயங்களும் குத்துக்காயங்களும் காணப்பட்டன.

கண்காணிப்புக் குழுவினரும் தமிழீழ காவல்துறையினரும் சடலங்களைப் பார்வையிட்டனர். பின்னர் சடலங்கள் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டன.

இந்தக் காட்டுப் பகுதிக்குள் ஸ்ரீலங்கா இராணுவத்தின் ஆழ ஊடுருவும் படையினர் ஊடுருவி மறைந்திருந்து இக்கொலைகளைப் புரிந்துள்ளனர் என்று உறவினர்கள் கண்காணிப்புக் குழுவிடம் சந்தேகம் தெரிவித்துள்ளனர். (ஐ-3-14-355)(33)

## பாடசாலைகள் திங்கள் மீள ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஏப்.19

முதலாம் தவணை விடுமுறைக்காக மூடப்பட்ட பாடசாலைகள்யாவும் திட்டமிட்டபடி எதிர்வரும் 24ஆம் திகதி திறக்கப் படவுள்ளன என யாழ். கல்வி வலய அதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை, மேமாதம் 22ஆம் திகதி நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்காக நான்கு நாள்கள் முன்னதாக 19ஆம் திகதி மீண்டும் பாடசாலைகள் மூடப்படும்.

இரண்டாம் தவணைக்காக ஓகஸ்ட் மாதம் 22ஆம் திகதி பாடசாலைகள் திறக்கப்படும். (3-7)(33)

## திருமலை நகரப்பகுதி வழமைக்குத் திரும்பவில்லை

திருகோணமலை,ஏப்.19

திருகோணமலை நகர் இன்னமும் வழமை நிலைக்குத் திரும்பவில்லை.

நேற்றுக்காலை சில கடைகள் திறக்கப்பட்டபோதும் அவை நண்பகலுடன் மூடப்பட்டன. வாகனப் போக்குவரத்துக்கள் மந்தமாக இருந்தன. நேற்றுமாலை 6 மணிமுதல் இன்று காலை 6 மணிவரை ஊரடங்கு நடைமுறையில் இருந்தது. (3-151) (33)

## வர்த்தகப் பிரிவு மாணவருக்கு வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஏப்.19

யாழ். நகர்மைய றோட்டறக்ட் கழகத்தினர் உயர்தர மாணவர்களின் பரீட்சையை நோக்கமாகக் கொண்டு எதிர்வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் வர்த்தகப் பிரிவு மாணவர்களுக்கு இலவச வழிகாட்டல் கருத்தரங்கு ஒன்றை நடத்தவுள்ளனர்.

காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணிவரை இக்கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

கணக்கியல், பொருளியல், வணிகக்கல்வி ஆகிய பாடங்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்குகளே பிரபல ஆசிரியர்களால் நடத்தப் படவுள்ளன.

இக்கருத்தரங்கிற்குச் சமுகமளிக்கும் அனைத்து மாணவர்களுக்கும் பரீட்சையை முன்னோக்கிய மாதிரி வினாத்தாள்கள், அதற்கான விடைகள் மற்றும் பாடக்குறிப்புகள் என்பன இலவசமாக வழங்கப்படவுள்ளன.

2007ஆம் ஆண்டு உயர்தரப்பிரிவு மாணவர்களும் இக்கருத்தரங்கில் பங்குபற்ற முடியும் - என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-203) (33)

## வினாடி வினாப் போட்டி பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,ஏப்.19

மொரட்டுவ பல்கலைக்கழகத் தமிழ் இலக்கிய மன்றத்தினரால் மாணவர்களுக்கிடையே நடத்தப்படவிருந்த வினாடிவினாப் போட்டி பிற்போடப்பட்டுள்ளது.

இப்போட்டி எதிர்வரும் 21, 22ஆம் திகதிகளில் யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடத்துவதற்கு ஏற்பாடாகியிருந்தது. தவிர்க்கமுடியாத காரணத்தால் போட்டி பிற்போடப்பட்டுள்ளது என்றும் - போட்டிகள் நடைபெறும் திகதி பின்னர் பாடசாலைகளுக்கு அறிவிக்கப்படும் என்றும் - தமிழ் இலக்கிய மன்றத்தினர் தெரிவித்தனர்.(3-14)(33)

# மாவடிவேம்பில் திங்கள் இரவு குடும்பஸ்தர் சுட்டுக்கொலை!

ஏறாவூர், ஏப். 19

ஏறாவூர் பொலீஸ் பிரிவிற்குட்பட்ட மாவடிவேம்பு பிரதேசத்தில் வைத்து நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு தமிழ் இளைஞர் ஒருவர் இனம் தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

ஏறாவூர் பொலீஸ் பிரிவில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற இரண்டாவது துப்பாக்கிச் சூட்டுக் கொலைச் சம்பவம் இதுவாகும்.

திங்கட்கிழமை பிற்பகல் வேளையில் சந்திவெளியில் வைத்து இளம் குடும்பஸ்தர் ஒருவர் இனம்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொலை செய்யப்பட்டிருந்தார்.

அதன்பின்னர் மாவடிவேம்பு முதலாம் குறிச்சியைச் சேர்ந்த தியாகராசா குட்டி (வயது - 33) என்பவர் நேற்றுமுன்தினம் இரவு சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார். இரவு 11.00 மணியளவில் இவரது வீட்டுக்கு வந்த ஆயுதபாணிகள் இவரை வெளியே அழைத்து இவரைச் சுட்டுக்கொலை செய்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் கடந்த ஒருவாரகாலத்தில் ஏழுபேர் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் இரண்டு பேர் முஸ்லிம்கள். ஐவர் தமிழர்கள்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மாவடிவேம்பு கொலைச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைத் தாம் மேற்கொண்டு வருகின்றனர் என ஏறாவூர் பொலீஸார் தெரிவித்தனர். (க-3)

## தமிழ் இளைஞர்கள் வெடிபொருள்களுடன் நுரைச்சோலையில் கைது!

புத்தளம், ஏப். 19

புத்தளம் நுரைச்சோலைப் பகுதியில் ஒரு தொகை வெடிமருந்துப் பொருள்களுடன் தமிழ் இளைஞர்கள் இருவர் பொலீஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இரகசியத் தகவலொன்றையடுத்து நுரைச்சோலை மீனவர் வாடியை கற்பிட்டிப் பொலீஸார் திடீரெனச் சோதனையிட்டனர். இதன் போது 550 கிராம் வெடி மருந்துப் பொருள்கள், தொலைநோக்குக் கருவி மற்றும் கைக்குண்டு தயாரிக்கப் பயன்படும் பொருள்கள் என்பன கைப்பற்றப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் மீனவர் வாடியில் தங்கியிருந்த தமிழ் இளைஞர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர். கற்பிட்டிப் பொலீஸார் அவர்களிடம் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (க-3)

## கன்னியாவில் கிளைமோர் மீட்பு

திருமலை, ஏப். 19

திருகோணமலை, கன்னியாவிலிருந்து கிளைமோர் குண்டொன்றை இராணுவத்தினர் நேற்று மீட்டிருக்கின்றனர்.

திருகோணமலை - அனுராதபுரம் வீதியில் நேற்றுக்காலை 10.30 மணியளவில் படையினர் மேற்கொண்ட வீதிச் சோதனையின் போதே எட்டுக்கிலோ எடைகொண்ட இந்தக் குண்டு கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிளைமோர் மீட்கப்பட்ட பகுதியில் படையினர் பின்னர் தேடுதல் நடவடிக்கையொன்றையும் மேற்கொண்டனர். (க-3)



வவுனியாவில் கொல்லப்பட்ட இளைஞனின் சடலத்தை வவுனியா நீதிவான் எம்.இளஞ்செழியன பார்வையிட்டு விசாரணை செய்வதை படத்தில் காணலாம்.

## பயிற்சிப் பட்டறை பிற்போடப்பட்டுள்ளது

தென்மராட்சி,ஏப்.19

யாழ். செயலகத்தினால் தென்மராட்சி பிரதேச கிராம அலுவலர்களுக்கு இன்று தொடக்கம் மூன்று நாள்களுக்கு நடத்தவிருந்த மத்தியஸ்தர் பயிற்சிப் பட்டறை தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளதாக யாழ். செயலக மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி தெரிவித்துள்ளார். (3-117)



கொய்யாத்தோட்டம் பகுதியில் நேற்றுச் சுட்டுக்கொல்லப்பட்டவர். (படங்கள்:பிரபா)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஏப்.19

யாழ். மாவட்ட கல்வி வலயங்களில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையேயான 19, 17 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் அரையிறுதியாட்டங்கள் இன்று காலை 8.30 மணியளவில் யாழ். மத்திய கல்லூரி, யாழ். பொது விளையாட்டு மைதானங்களில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு:-

**19 வயதுப் பிரிவு**

* காலை 8.30 மணி - யாழ். பொது விளையாட்டு மைதானம் - புனித ஹென்றியரசர் கல்லூரி எதிர் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி.
* யாழ். மத்திய கல்லூரி மைதானம் - மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் கல்லூரி.

**17 வயதுப் பிரிவு**

* காலை 8.30 மணி - யாழ். மத்திய கல்லூரி மைதானம் - உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி எதிர் சென். ஜேம்ஸ் கல்லூரி.

பொது விளையாட்டு மைதானம் - மகாஜனக் கல்லூரி எதிர் அருணோதயக் கல்லூரி.

மேற்படி ஆட்டங்களில் வெற்றிபெறும் அணிகளுக்கான இறுதியாட்டங்கள் பிற்பகல் ஒரு மணியளவில் இடம்பெறும். (3-190)(33)

## விசேட வழிபாடுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.19

சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தின் 25ஆவது அகவை நிறைவை முன்னிட்டு கொழும்பு ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணிய சுவாமிகள் ஆலயத்தில் நாளை வியாழக்கிழமை காலை 8 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தின் கொழும்புப் பிராந்திய முகாமைச் சபை, புனர்வாழ்வுக் கல்வி அபிவிருத்தி நிதியம், சமூக முன்னேற்றக்கழகங்களின் சமாசம் ஆகியவற்றின் அனுசரணையுடன் இவ்வழிபாட்டு நிகழ்வுகளை நடத்துவதற்கு ஒழுங்கு செய்துள்ளது.

இவ்வழிபாட்டு நிகழ்வில் விசேடமாக சண்முகப் பெருமானுக்கு விசேட அபிஷேகமும் சண்முக அர்ச்சனையும் கூட்டுப் பிரார்த்தனையும் நடத்தப்படவுள்ளன. (203)(33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# ஒட்டுப்படை அரசியலால் அமைதி முயற்சிகளுக்கு வேட்டு

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் 'ஒட்டுக்குழு அரசியல்' இலங்கைத் தீவை போரை நோக்கிய திசையில் தடம் பதிக்கச் செய்கின்றது என்று விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ சஞ்சிகையான 'விடுதலைப் புலிகள்" இதழ் தனது பத்தியில் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

ஒட்டுக்குழுவை வைத்துக்கொண்டு மஹிந்த அரசால் புலிகளுடன் போரும் செய்யமுடியாது, சமாதானமும் செய்யமுடியாது என்பதை சர்வதேச சமூகம் புரிந்துகொள்ளவேண்டும் எனவும் புலிகள் கோரியிருக்கின்றார்கள்.

போரைநிறுத்தி, பேச்சு மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண உலக நாடுகள் முற்படும் இந்த வேளையில், ஒட்டுக்குழு அரசியல் மூலம் இலங்கைத் தீவில் இரத்த ஆறு ஓட மஹிந்த அரசு வழிவகைகளைச் செய்கின்றது என்பதைப் புலிகளின் இச்சஞ்சிகை தெளிவாக எடுத்துரைக்கின்றது.

*"ஒட்டுக்குழுவை வைத்துக்கொண்டு மஹிந்த அரசால் புலிகளுடன் போரும் செய்யமுடியாது; சமாதானமும் செய்யமுடியாது.*

*"இந்த ஒட்டுக்குழுக்களை ஏவிவிட்டு தமிழர் தாயகத்தில் கொலைகளையும், வன்முறைகளையுமே மஹிந்த அரசால் செய்யமுடியும்.*

*"அரச படைகளால் அல்லது அரச படைகளின் ஆதரவுடன் இயங்கும் ஒட்டுக்குழுக்களால் தமிழ் மக்கள் துன்புறுத்தப்படும்போது அதை வெறுமனே பார்த்துக்கொண்டு புலிகள் இயக்கம் இருக்கமாட்டாது.*

*"மொத்தத்தில் மஹிந்தவின் ஒட்டுக்குழு அரசியல் பெரும் இரத்தக்களரிமிக்க போரை நோக்கியே நாட்டை இட்டுச்செல்கிறது"* - என்று விடுதலைப் புலிகள் கூறியிருக்கின்றமை இந்தக் கட்டத்தில் மிக முக்கியத்துவம் பெறுகின்றது.

கிழக்கிலிருந்து விடுதலைப் புலிகளின் தளபதிகளும் போராளி களும் வன்னி வந்து செல்வதற்கான பயண ஏற்பாட்டு ஒழுங்கு இழுபறிக்கு உள்ளாகியிருக்கும் இந்தச் சூழ்நிலையில் -

அதனால் அடுத்த சுற்று அமைதிப்பேச்சு நடைபெறுவதற்கான வாய்ப்புகள் அருகிவரும் ஏது நிலையில் -

ஒட்டுப்படைகளை அரவணைத்துக் கட்டி வளர்க்கும் ஜனாதிபதி மஹிந்தரின் அரசியல் திட்டம் பெரும் இரத்தக் களரிமிக்க போரை நோக்கியே நாட்டை நகர்த்தப்போகின்றது என்ற எச்சரிக்கை சம்பந்தப்பட்ட எதிர்த்தரப்பான புலிகளிடமிருந்து வருவது கவனிக்கத்தக்க மிகமுக்கியமான அம்சமாகும்.

புலிகளின் கிழக்குத் தளபதிகளின் வன்னிப் பயணத்துக்கான ஏற்பாடுகளை கெடுபிடி, தடைகளைப் போட்டு, காலத்தை இழுத்தடித்து, இலங்கை அரசுத் தரப்புக் குழப்புமானால் முன்னரைப் போன்று தமது சொந்தப் பயணத்தைப் புலிகளே ஏற்பாடு செய்வார்கள் என்று அறிவித்திருக்கும் விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், அந்தப் பயணத்தை வழி மறித்து இடையூறு செய்ய இலங்கை அரச கடற்படை எத்தனிக்குமாக இருந்தால், அது பாரிய யுத்தநிறுத்த மீறலாகவே அமையும் என்றும் எச்சரித்திருக்கின்றார்.

அத்துடன் அவ்வாறான நிலைமை ஏற்படுமாக இருந்தால் அது எதிர்காலத்தில் ஸ்ரீலங்காக் கடற்படைக்கும் அதே நிலைமையைத்தான் ஏற்படுத்தும் என்பதோடு, அந்நிலைமை யுத்த நிறுத்த முறிவுக்கே இட்டுச் செல்லும் என்றும் அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றமை மிக சிக்கலான எதிர்காலத்தை நோக்கி நாடு நகருகின்றது என்பதைத் தெளிவுபடுத்துகின்றது.

புலிகளின் கிழக்குத் தளபதிகளின் வன்னிப் பயணத்துக்கு கெடுபிடி - குழப்பம் - அற்ற ஒழுங்குகளை இலங்கை அரசுத் தரப்புச் செய்யத் தவறி, அதன் காரணமாக தங்களின் சொந்தக் கடல் வழிப் பயணத்தைப் புலிகள் ஏற்பாடு செய்வார்களாயின் -

அதை இலங்கைக் கடற்படை வழிமறிக்க - அல்லது தடுத்து இடைஞ்சல் பண்ண - முயற்சிக்குமானால் -

அது பெரும் போர் வெடிக்கக் காரணமாகி விடும் என்பது உறுதி.

அத்தகைய நிலைமை ஏற்பட்டால் -

யுத்தநிறுத்தத்திலிருந்து அரசு - புலிகள் ஆகிய இரு தரப்புகளில் எந்தத் தரப்பு விலகுவதானாலும் அது குறித்து 14 நாள்கள் முன்னறிவித்தல் கொடுக்க வேண்டும் என்ற யுத்தநிறுத்த ஒழுங்கு விதி கடைப் பிடிக்கப்படாமலேயே யுத்தம் வெடித்துவிடும்.

முன்னறிவித்தல் கொடுக்காமல் திடீர் யுத்தம் ஒன்று வெடிப்பதற்கான வாய்ப்பை - சந்தர்ப்பத்தை - இலங்கை அரசுத் தரப்பு தற்போதைய தனது கெடுபிடி நடவடிக்கைகள் மூலம் ஏற்படுத்திக்கொடுப்பதாகவே படுகின்றது.

இது தனது தலையில் தானே மண் அள்ளிப் போடுவதற்கு ஒப்பானது என்பதை இலங்கை அரசுத் தரப்பு உணர்ந்து கொள்வது நல்லது.

# சத்தியக் கடதாசி மற்றும் உறுதிகளுக்கு மீண்டும் முத்திரை ஒட்டும் நடைமுறை

யாழ்ப்பாணம்,ஏப்.19

சத்தியக் கடதாசி மற்றும் குத்தகை, வாடகை உறுதிகளுக்கு மத்திய அரசாங்க முத்திரை ஒட்டும் நடைமுறை மீண்டும் மேற்கொள்ளப்படவுள்ளது என வடக்கு வலய உதவிப் பதிவாளர் நாயகம் என்.சதாசிவஐயர் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நிதித் திட்டமிடல் அமைச்சால் வெளியிடப்பட்ட 2006ஆம் ஆண்டு முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9ஆம் பிரிவில் மாகாண சபை ஒன்று ஸ்தாபிக்கப்படும் காலம் வரை ஆணையாளர் தலைமை அதிபதியினால் விதிக்கப்படும் வங்கி ஒன்றுக்கு அறுதி நன்கொடை உறுதிகள் தொடர்பான கட்டணங்கள் செலுத்தப்படவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கான விசேட வர்த்தமானி அறிவித்தல் நிதி அமைச்சினால் விரைவில் வெளியிடப்படவுள்ளது.

இதற்கமைய சத்தியக் கடதாசிக்கு நூறு ரூபா முத்திரையும், குத்தகை மற்றும் வாடகை உறுதிகளுக்கு பெறுமதிக்கேற்ப மத்திய அரசாங்கத்தின் முத்திரையும் ஒட்டப்படவேண்டும். இதுதவிர பணக் கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமான பற்றுச் சீட்டுக்களுக்கு பணத் தொகையின் பெறுமதிக்கு ஏற்ற முத்திரைகள் ஒட்டப்பட வேண்டும் - என்றார் அவர்.

2002 ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி முதல் முத்திரை ஒட்டும் நடைமுறை நிறுத்தப்பட்டது. தற்போது 2002 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்கச் சட்டத்தின் 3ஆம் பாகம் நீக்கப்பட்டு மீண்டும் முத்திரை ஒட்டும் நடைமுறை அமுலுக்கு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ஓ-204-202)

# பிறப்பை உடன் பதிவுசெய்யாவிடில் ரூபா ஆயிரம் அபராதம் கட்ட நேரிடும்

யாழ்ப்பாணம்,ஏப்.19

பிறப்பு ஒன்றை உரிய காலத்தில் பதிவு செய்யத் தவறியவர்களுக்கு ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கும் நடைமுறை பின்பற்றப்படவுள்ளது என வடக்கு வலய உதவிப் பதிவாளர் நாயகம் என்.சதாசிவஐயர் தெரிவித்தார்.

பிறப்பு ஒன்று பற்றி தகவல் தெரிந்திருந்தும் அதனைப் பதிவு செய்யாதவர்கள் மீது 100 ரூபா அபராதம் விதிக்கும் நடைமுறை இருந்து வந்தபோதும் இது தீவிரமாக நடைமுறைப்படுத்தப்படவில்லை.

பிறப்புக்களை பதிவு செய்யும் நடவடிக்கையை ஊக்குவிக்கும் முகமாக, 100 ரூபா தண்டப் பணத்தை ஆயிரம் ரூபாவாக உயர்த்தி கடுமையாக அதனை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் எதிர் காலத்தில் பிறப்புக்களை பொதுமக்கள் உடனடியாக பதிவதில் ஆர்வம் காட்டுவர் என்று நம்புவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(ஓ-202-204)

## உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள

# காங்கேசன் எரிபொருள் களஞ்சியம் செல்வதில் அதிகாரிகளுக்குச் சிரமம்

யாழ்ப்பாணம்,ஏப்.19

காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் அமைந்துள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் களஞ்சியத்திற்கு கடமையின் நிமித்தம் செல்லும்போது தாம் சிரமங்களை எதிர்நோக்க நேரிடுவதாக பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் யாழ்.பிராந்திய அதிகாரிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் அதிகாரிகள் போக்குவரத்தில் ஈடுபடுவதற்கு குறிப்பிட்ட ஒரு வாகனம் மட்டுமே பயன் படுத்தப்படுகின்றது.

அந்த வாகனத்தை உயர்பாதுகாப்பு வலயமான காங்கேசன்துறைப் பகுதியை விட்டு வேறிடத்துக்கு எடுத்துச் செல்லக்கூடாது என்று கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

இதனால் பிராந்திய அலுவலகத்தில் இருந்து காங்கேசன்துறைக்குச் செல்லும் அதிகாரிகள் தமது சொந்த வாகனத்தில் சென்று காங்கேசன்துறை சோதனைச் சாவடிக்கு அருகில் அதனை நிறுத்தி விட்டு உயர் பாதுகாப்பு வலயப் போக்குவரத்துக்கென ஒதுக்கப்பட்ட வாகனத்தில் பயணிக்கின்றனர்.

இதனால் போக்குவரத்தில் கால தாமதம் ஏற்படுவதுடன் பணிகள் முடக்கப்படுகின்றன என்றும் அதிகாரிகள் கூறுகின்றனர்.

(ஓ-14)

# சோதனை நடவடிக்கைகளால் வெயிலில் வாடும் தீவகப் பயணிகள்

தீவகத்துக்கும் யாழ். நகரத்துக்குமிடையே பகல் வேளையில் பயணம் மேற்கொள்பவர்கள் கடற்படையினரின் சோதனை நடவடிக்கை காரணமாக கொளுத்தும் வெயிலில் வாடவேண்டியுள்ளனர் என்று கூறப்படுகிறது.

தீவகத்தில் இருந்து யாழ். நோக்கி செல்லும் பயணிகளும், யாழ்ப்பாணத்தில் இருந்து தீவகம் நோக்கிச் செல்லும் பயணிகளும் கடற்படையினரால் கடும் சோதனைகளுக்குட்படுத்தப்பட்டு வருகின்றார்கள்.

மடத்துவெளி, குறிகட்டுவான், அல்லைப்பிட்டி, பண்ணை போன்ற பகுதிகளில் பயணிகள் மட்டுமன்றி வாகனங்களும் கடும் சோதனைக்குட்படுத்தப்படுகின்றன.

இத்தகைய சோதனை இடம்பெறும்போது கொளுத்தும் வெயிலில் நோயாளர்களும் குழந்தைகள் உட்பட அனைவரும் நீண்ட நேரம் காத்திருக்க நேரிடுவதாகப் பொதுமக்கள் கூறுகின்றனர்.

இதேவேளை, புங்குடுதீவுப் பகுதியில் படையினர் புதிய காவலரண்கள் அமைத்தும் மண் அணைகட்டியும் முகாம்களைப் பலப்படுத்தி வருகின்றார்கள்.

(ஓ-188)

## நாளை

சித்திரை 07
வியாழக்கிழமை
20.04.2006
திதி: ஷப்தமி
முன்னிரவு : 07.22 வரை
நட்சத்திரம் : பூராடம்
பிற்பகல் : 12.51 வரை
சுபநேரம் : 07.32 - 09.02
ராகுகாலம் : 1.32 - 03.02

## உதயவாக்கு

*தனக்குக் கிட்டும் ஊதியத்தின் மதிப்பை விட தனது உழைப்பின் மதிப்பை உயர்த்திக் காட்டும் மனிதனே சமூகத்தில் முன்னேற முடியும்.*

*- ஓர் அறிஞர்.*


# கரவெட்டியில் காலங்கடந்த பதிவுகள் நாளை

யாழ்ப்பாணம்,ஏப்.19

இறப்பு,பிறப்புகளை காலம் கடந்து பதிவு செய்வதற்கான நடமாடும் சேவை நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கரவெட்டி பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

கரவெட்டி பிரதேச செயலகர் ஆர். வரதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வடக்கு வலய உதவிப் பதிவாளர் நாயகம் என்.சதாசிவ ஐயர் தலைமையில் அதிகாரிகள் குழுவினர் கலந்துகொண்டு பதிவுகளை மேற்கொள்வர். இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாதவர்கள் இதில் கலந்துகொண்டு பயனடையமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஓ-204-202)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## மணமகள் தேவை

இந்து கௌரவ, 33 வயதுடைய, சுயமாகத் தொழில் செய்யும் மணமகனிற்கு செவ்வாய்க் குற்றமுள்ள மணமகள் தேவை. தொலைபேசி இலக்கத்துடன் தெளிவான விவரங்களுடன் தொடர்புகொள்ளவும். தொடர்பிற்கு: விளம்பர இல. 2851, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (49408)

யாழ்.இந்து கௌரவ குடும்பம், கனடாவில் பிரஜாவுரிமைபெற்ற, 1961 ஆம் ஆண்டு, திருவாதிரை நட்சத்திரம், விவாகரத்துப் பெற்ற மணமகனுக்கு, 35-37 வயதை அண்மித்த A/L வரை படித்த அழகிய மணமகளை சகோதரன் தேடுகின்றார். (விவாகரத்துப் பெற்றவர்களும் விரும்பத்தக்கது). தொடர்பு விளம்பர இல. 2855 மே/பா உதயன், யாழ்ப்பாணம். (49582)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 33 வயது, கார்த்திகை நட்சத்திரம் கிரகபாவம் 24, B.Sc. படித்து லண்டனில் தொழில் புரியும் மணமகனுக்கு லண்டன், கனடா, பிரான்ஸ், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் குடியுரி மையுடைய படித்த, அழகிய மணமகள் தேவை. மே/பா உதயன் இல. 2853. (49569)

யாழ்.இந்து கௌரவ, 40 வயது, ஆயிலியம், தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் மணமகனுக்கு மணமகள் தேவை. தொடர்பு விளம்பர இல. 2854 மே/பா. உதயன். (49577)

## விற்பனைக்கு

NPMA தொடர் இலக்கம் கொண்ட கீரோ ஹொண்டா மோட்டார் சைக்கிளும் WPHJ தொடர் இலக்கம் கொண்ட 14.5 அடி நீளம் கொண்ட ஹன்ரர் (இசுஸ்) [4.6 டிஜிற்றல், முழு அலுமினிய பிற்றிங் (body)] வாகனமும் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஞா.கஜீபன், சோடாத் தொழிற்சாலை வீதி, மல்லாகம். T.P.: 077 6170247 (49552)

## தவறிவிட்டது

15.04.2006 சனிக்கிழமை அன்று பலாலி வீதி, கோண்டாவில் சந்திக்கு அருகில் கையடக்கத் தொலைபேசி ஒன்று தவறிவிட்டது. (NO-0776915125 நொக்கியா 3300) கண்டெடுத்தவர்கள் இராசன் சதீஸ்கரன், 'முருகன் இல்லம்', கோண்டாவில் வடக்கு என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். T.P.: 0779773038, 0716015845. (49570)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டுமுறை தடுப்பு மருந்து போடப்பட்ட No.1 Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 24.04.2006 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை, நெல்லியடிக் கிளைகளிலும், சுட்டிபாம் - வட்டுக்கோட்டை, கரன் - ஆலடி, உடுவில், ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர், 19 முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி/48916)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை) தொடர்பு: நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19,முகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி/48991)

## தேவை

ஆண்டு 1 இல் கல்வி கற்கும் மாணவி ஒருவருக்கு வீட்டில் வந்து ஆங்கிலம் கற்பிக்க ஆசிரியை ஒருவர் தேவை.

தொடர்பு:- விளம்பர இல. 2856 மே/பா உதயன், யாழ்ப்பாணம். (49584)(22)

# சட்டத்துறை நடத்திய செயலமர்வு

வலி.கிழக்கு,ஏப்.19

யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் நீதியை நாடும் திட்டத்துடன் இணைந்து சமீபத்தில் செயலமர்வை நடத்தியது.

யாழ். பொதுநூலக கேட்போர் கூடத்தில் யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் மகாலிங்கம் சுதர்சன் தலைமையில் இச்செயலமர்வு இடம்பெற்றது.

காலை அமர்வில் 'குற்றவியல் சட்டத்தின் அண்மைய வளர்ச்சி' என்ற தலைப்பில் கணனிக்குற்றங்கள் மற்றும் புலமைச் சொத்துக் குற்றங்கள் தொடர்பாக சிரேஷ்ட சட்டத்தரணி காலிங்க இன்திஸ்ஸ உரையாற்றினார்.

பிற்பகல் அமர்வில் சிரேஷ்ட சட்டத்தரணி காலிங்கஇன்திஸ்ஸ மனித உரிமைகள் என்ற தலைப்பில் நுகர்வோர் சுதந்திரம் மற்றும் பொது நலவழக்குகள் என்பன போன்ற விடயதானங்களில் உரை நிகழ்த்தினார்.

இந்த அமர்வுகளில் யாழ். பல்கலைக் கழக பேராசிரியர்கள், சட்டத்துறை மாணவர்கள், சட்டத்தரணிகள், அலுவலர்கள் எனப் பலரும் பங்கேற்றனர்.

இந்தச் செயலமர்வுக்கு யாழ். றோட்டறிக் கழகமும் அனுசரணை வழங்கியிருந்தது. (ஒ-180)

## எய்ட்ஸ் தடுப்பு பயிற்சி நெறி

யாழ்ப்பாணம்,ஏப்.19

'சொண்ட்' நிறுவனத்துடன் இணைந்து செயற்படும் மாதர் சங்கங்கள் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் சி.க.கூ. சங்கங்கள் எனப் பல்வேறுபட்ட கிராமமட்ட அமைப்புகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 20 நிர்வாகிகளுக்கு எய்ட்ஸ் நோய்த் தாக்கமும் அதனைத் தடுப்பதற்கான விழிப்புணர்வு நடவடிக்கைகளும் என்னும் தலைப்பின் கீழ் இன்று காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை பயிற்சிநெறியொன்று 60, அரசடி வீதி,யாழ்ப்பாணத்தில் இயங்கும் மேற்படி நிறுவனத்தின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

## கண்ணீரில் கரைந்த ஐந்தாம் நாள் நினைவுகள்



தோற்றம் 01 - 07 - 1978   மறைவு 15 - 04 - 2006

### தேவராசா மரியதாஸ் (கண்ணன்)

15.04.06 சனிக்கிழமை அகாலமரணமடைந்த எமது குடும்ப குலவிளக்கின் 5ஆம் நாள் நினைவை முன்னிட்டு அன்னாரின் இல்லத்தில் இன்று (19.04.06) புதன்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தேவராசா (தந்தை), தங்கம்(தாய்)
ஜீவன், மோகன், றீசன், நிக்சன்(சகோதரர்கள்), பவி(சகோதரி)
சித்திரா, லவா, பாப்பா(அண்ணிமார்கள்)
நமிதா, அஸ்வினா, மதுசா, சோபினா, சௌமியா, றமியா றதின்சலா(பெறாமக்கள்).

மணல் ஒழுங்கை, பருத்தித்துறை. (49586)(22-11-15)

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்துரை நாகலிங்கம்

(ஓய்வுபெற்ற கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்)

திருநெல்வேலி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது கனடாவில் வாழ்ந்து வந்தவருமான சின்னத்துரை நாகலிங்கம் அவர்கள் 2006.04.16 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை, நல்லமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நன்மலரின் அன்புக் கணவரும் திரு. திருமதி சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மருமகனும் அமரர்களான புஸ்பகாந்தி, மகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் லவியின் பாசமிகு தந்தையும் விஜயநாதனின் அன்பு மாமனும் ராம், கிருஷ்ணா, திருமதி நிர்மலாராம் ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(2006.04.19) புதன்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தாலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Mrs.L.Vijayanathan,
5039 Finph Avenue East,
Apartment PH 12,
Scarborough,
M1 F5 L6,
Ontario, Canada. (49588)(22-11-15)

தகவல்:
செல்வி கமலா செல்லத்துரை
(உறவினர்)
பலாலி வீதி,
திருநெல்வேலி வடக்கு.

## திருமதி சுப்பிரமணியம் அன்னலட்சுமி



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் ஆவரங்காலை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் அன்னலட்சுமி அவர்கள் 17.04.2006 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கனகசபை(இராசா பரியாரியார்) - செல்வரத்தினம் தம்பதியரின் மூத்த புதல்வியும் பண்டிதர் சரவணமுத்து சுப்பிரமணியம் (ஆவரங்கால்) அவர்களின் அன்பு மனைவியும் இராஜேஸ்வரி,வல்லிபுரநாதன், இராமநாதன், ஸ்ரீரங்கநாதன்,மகாலட்சுமி ஆகியோரின் சகோதரியும் புனிதவதி(கொழும்பு),திலகவதி(யாழ்ப்பாணம்), சிவராமலிங்கம்(சுவிற்ஸர்லாந்து), நடராசலிங்கம்(சுவிற்ஸர்லாந்து), கமலவதி(கனடா) முத்துராசலிங்கம்(கனடா),சௌந்தரியவதி (கொழும்பு), திருவாதரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் மனோகரநேரு(கொழும்பு), கணேசபிள்ளை, தெய்வநாயகி (சுவிற்ஸர்லாந்து), ஜெயராணி(சுவிஸ்ஸர்லாந்து), சேந்திவாசன் (கனடா), சந்திரவதனா(கனடா), நந்தகுமார்(கொழும்பு), பாப்னா (கனடா) ஆகியோரின் பாசமுள்ள மாமியும் பிரணவன், உமேசன், சாரங்கன், பிரசன்னா, சுதர்சன், நர்த்தனன், மாதங்கி, ஜனனி, சிந்தூரி, சுவேதா, ஸ்ரீராம், சரண்யா,குமாரசரண், பார்கவி, ஹரிப்பிரகாஷ், ஹைரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.04.2006) வியாழக்கிழமை காலை 9 மணிக்கு 134, இராசாவின்தோட்ட வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆவரங்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

134,இராசாவின் தோட்ட வீதி,
யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 222 5145 (49593)(22-11-15)

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்



மண் மகிழ 04 - 04 - 1970   மனம் நெகிழ 13 - 05 - 2001

### அமரர் சுப்பிரமணியம் சதீஸ்குமார்

திதி: 19.04.2006 அபர ஷஷ்டி

நெஞ்சினிலே நினைவு முகம்
நினைவில் தெரிவது ஆசை முகம்
ஒருயிர் என்று வாழ்ந்தவன் நீ!
ஓடி ஒழிந்தது தெரியவில்லை
இன்னுயிர் என்று வாழ்ந்தவனே - உன்துயர்
ஐந்தாண்டு சென்றும் மாறவில்லை
புத்துயிர் மூலம் ஒரு வாரிசாக நீ
வந்திங்கே பிறக்காயோ.

உங்கள் பிரிவால் துயருறும்:

அப்பா : வி.சுப்பிரமணியம்
அம்மா : சு.சித்திரா
தங்கைமார் : த.சதீஸ்வரி, ஈ.சதீஸ்கலா(சுவிஸ்), சு.சதீஸ்குமாரி
தம்பி : சு.சதீஸ்வரன்(பேராதனை பல்கலைக்கழகம்)
அத்தான்மார் : ஆ.தங்கராசா, இ.ஈஸ்வரன்(சுவிஸ்),த.சுகுணன்
மருமக்கள் : த.சபிதா, ச.சதீஸ்குமார், அச்சவரா

வல்லியாவத்தை, கரணவாய் மேற்கு
கரவெட்டி. (49568)(22-11-15)

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 1944 - 01 - 15   மறைவு 2003 - 04 - 19

### திருமதி கந்தசாமி சிவநாயகி

எமது அன்புத் தாயே! எம்மை அரவணைத்த தாயே!
நாம் உயர வழிவகுத்த தாயே! அம்மா!
விண்ணுலகை நீ நோக்கி ஆண்டுகள் மூன்று சென்றாலும்
உங்கள் நினைவுகள் மட்டும் எங்களைவிட்டு
அகலவே அகலாது.

செங்குந்த வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். (49584)(22-11-15)

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
குடும்பத்தினர்.

## நல்லைக் குமரன் மலருக்கு ஆக்கங்கள்

யாழ்ப்பாணம்,ஏப்.19

வருடந்தோறும் நல்லைக்கந்தனின் வருடாந்த பெருந்திருவிழாவை ஒட்டி யாழ். மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினால் வெளியிடப்பட்டுவரும் நல்லைக்குமரன் மலருக்கு ஆக்கங்கள் அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜூன் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் ஆக்கங்களை அனுப்பிவைக்குமாறு துறைசார்ந்த அறிஞர்கள், சைவப்பெரியார்கள் மற்றும் கல்விமான்களை சைவசமய விவகாரக் குழு கேட்டுள்ளது. (3-203) (24)

## லயன்ஸ் கழகங்களுக்கு மூக்குக்கண்ணாடிகள்

சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்ட ஆளுநர் வட மாகாணத்தில் உள்ள 20 லயன்ஸ் கழகங்களுக்கு மூக்குக் கண்ணாடிகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் கூட்டுறவுக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற நிகழ்வில் இவை வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மாவட்ட ஆளுநர் லயன் சரத் குணசேகரா, லயன் நிமால் ராஜபக்ஷ ஆகியோர் லயன்ஸ் கழகங்களின் தலைவர்களிடம் மூக்குக்கண்ணாடிகள் அடங்கிய பொதிகளைக் கையளித்தனர். (3-117) (24)

## பெயர் மாற்றம்

7ஆம் வட்டாரம் வேலணைமேற்கு,
வேலணையைச் சேர்ந்த
சுப்பையா சின்னையா
ஆகிய நான் எனது பெயரை
சுப்பையா நடேசு
என மாற்றிக் கொள்வதுடன், சகல தேவைகளுக்கும் இந்தப் பெயரையே பயன்படுத்துவேன் என அறிவித்துக்கொள்கிறேன்.

சு.நடேசு.

(49591)(30-11-15)

## வேலையாள் தேவை

தோட்டவேலைகளுக்கும் அது சார்ந்த வேலைகளுக்கும், சோடாப் போத்தல் கழுவுவதற்கும் ஆள் தேவை. இருபாலாரும் வயது கூடியவர்களும் உடன் விண்ணப்பிக்கவும். நேரில் சமுகமளிக்கலாம்.

தொடர்பு:
[illegible]
131/2 பலாலி வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (49600)(22-11-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுப்பற்றாளர் அன்னை பூபதி நினைவுதினம் இன்று

## பூகம்பத்துக்குப் புதுப்பெயர்



அகராதியில்
அழித்தெழுதிக் கொள்ளுங்கள்,
'பூபதி' அம்மா......
ஒரு பெண்ணின் பெயரல்ல.....
பூகம்பத்துக்குப் புதுப்பெயர்.
இவள்,
காலக்குரலுக்கு
சேலைகட்டிய தோற்றம்.
ஊரெங்கும் ஓநாய்கள்,
ஊளையிட்ட போது,
தன்னந்தனியனாகத் தடியெடுத்து
விரட்டியவள்,
எமது சுற்றுப்புறச் சூழலை
அந்நியக்காற்று அசுத்தப்படுத்திய போது,
ஊத்தைக்காற்றின் உரிமையாளர் மீது,
வழக்குத் தொடுத்து வாதிட்டவள்.
இங்கு அதிகமானோர்
மௌனித்திருந்தபோது,
''புலிகள் எங்கள் பிள்ளைகள்
அவர்களே எங்கள் பாதுகாவலர்கள்''
என்று,
வாய்திறந்து பாடிய விடுதலைக்குயில்.
சக்தி,
வலுப்பொருள் -
விஞ்ஞானம் இப்படி விதந்துரைக்கிறது,
சக்தி,
தாய்மையின் வடிவம் -
மெஞ்ஞானம் இப்படி முழக்கமிடுகின்றது.
எப்படிப் பார்த்தாலும்
பூபதி அம்மா, பூரண வடிவம்!

**- புதுவை இரத்தினதுரை.**

## எழுச்சி

பொறிகக்கும் விழியோடு புறப்பட்டு விட்டோம்!
போராட நாள் குறித்தோம்!
எறிகுண்டு பாய்ந்தாலும் இருகைகொண்டேற்போம்!
எதற்கும் நாம் துணிந்துவிட்டோம்!
நெறிகெட்ட பகைவரின் முறைகெட்ட வாழ்வால்
நெருப்பாக மாறிவிட்டோம்!
வெறிகொண்டு தாவினோம்! வீரத்தின் மடியில்
விளையாடத் தொடங்கிவிட்டோம்!
திசையெட்டும் அதிரயாம் பறைகொட்டி நின்றோம்!
தெய்வத்தை வணங்கி வந்தோம்!
தசையெலாம் முறுக்கேறி நின்றோம்! எழுந்தோம்!
தாயின் மேல் ஆணையிட்டோம்!
வசைகெட்டு வாழாத வரலாறு கொண்டோம்!
வல்லமை நூறு கொண்டோம்!
இசை பெற்று மிளிர்கின்ற எதிர்காலம் ஒன்றை
இப்போதே செய்து வைப்போம்!
கடல் பொங்கினாற்போல் உடல்பொங்கி வந்தோம்
களத்திலே ஆட வந்தோம்!
படைகொண்டு மானத்தின் நடைகொண்டு வந்தோம்.
பழி தீர்க்க ஓடி வந்தோம்!
திடல் பள்ளமாகத் திசைகள் நடுங்கத்
திடுதிடுமென்ன வந்தோம்!
தடைகளை வெல்வோம்! விடுதலை கொள்வோம்!
தமிழர் யாம் ஓயமாட்டோம்!
மறங்கொண்டு விளையாடும் திறங்கொண்ட தமிழர்
மலைகொண்ட தோள்கள் கொண்டோம்!
முறங்கொண்டு பலியோடு மோதினோம் அந்த
மூச்சோடு போராடுவோம்!
புறம்கொண்டு வாழ்வெலாம் புகழ்கொண்டு நின்றோம்!
புதியதோர் ஏடு செய்வோம்!
அறங்கொண்டு நின்றவர் அனல்கொண்டெழுந்தோம்!
அன்னையை வாழ வைப்போம்!

**- காசி ஆனந்தன்.**

## நாவண்ணனுக்கு 'நாட்டுப்பற்றாளர்' மதிப்பளிப்பு

மறைந்த கவிஞர் நாவண்ணனுக்கு 'நாட்டுப் பற்றாளர்' மதிப்பை தமிழீழ விடுதலைப் புலிகள் அளித்துள்ளனர்.

இது தொடர்பில் விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:-

உயரிய இலட்சியத்துடன் நடைதளர்ந்த பின்பும் மனம் குன்றாமல் வாழ்ந்த எங்கள் மதிப்பிற்குரிய மருசலின் சூசைநாயகம் (கவிஞர் நாவண்ணன்) அவர்கள் 15.04.2006 அன்று காலமாகிவிட்டார்.

எமது போராளிகள், மக்கள் செய்த தியாகங்களை - அர்ப்பணிப்புக்களை - சாதனைகளை - அவர்கள் சந்தித்த இழப்புக்களைப் பதிவுகளுள் செலுத்த வேண்டுமென்பதில் துடியாகத் துடித்தவர் இவர்.

எமது தேசத்தின் வாழ்வோடு ஒன்றிணைந்திருந்த இவரது குடும்பத்தில் ஐந்து பெண்பிள்ளைகளுக்கு ஒரேயொரு ஆண் மகனாக இருந்த சூசைநாயகம் கிங்சிலி உதயன் (இரண்டாம் லெப். கவியழகன்) இத் தேசத்தின் பயணத்தில் இணைந்து இறுதிவரை களமாடி மாவீரரானார்.



அதனாலும் மனம் தளராது வீர மறவனைப் பெற்றெடுத்தேன் - அவனை வீரபுத்திரனாய் மண்ணிற்குள் விதைத்தேன் என்ற தன் உயிர்பிரிவின் உணர்வை இலக்கியமாகப் படைத்தார்.

இறுதியில் இயற்கையின் சீற்றத்தால் அழிந்துபோன எம் உறவுகளை நினைந்துருகி ஆழிப் பேரலையின் சுவடுகள் என்னும் அரிய நூல் ஒன்றையும் எழுதினார். இவ்வாறு ஒவ்வொரு நிகழ்வுகளையும் பதிவிற்குள் கொண்டுவரத் துடிக்கும் இவரின் இழப்பு பேரிழப்பாகும்.

இம் மண்ணில் ஒரு படைப்பாளியாக நின்று மகத்தான பல பதிவுகளைச் செய்த கவிஞர் நாவண்ணன் அவர்களுக்கு நாட்டுப்பற்றாளர் என்னும் எமது தேசத்தின் சார்பான மதிப்பினை வழங்குவதோடு, அவரது பிரிவால் பிரிவுத்துயரில் மூழ்கியிருக்கும் அவரது குடும்பத்தவர்களின் துயரத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளாகிய நாங்களும் பங்கேற்றுக்கொள்கிறோம்.

- இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

### கூடைப்பந்தாட்டம் - பெண்கள் பிரிவு

## கொக்குவில், பமிலியன்ஸ் அணிகள் இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றன

யாழ்ப்பாணம்,ஏப்.19

யாழ். மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சங்கம் ஆண், பெண் இருபாலாருக்குமிடையே நடத்திவரும் லீக் முறையிலான கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் பெண்களுக்கான போட்டியில் கே.ஸி.ஸி.ஸி. வி.க., பமிலியன்ஸ் வி.க. ஆகியன இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றன.

யாழ். பல்கலைக்கழகக் கூடைபந்தாட்டத் திடலில் இடம்பெற்ற அரை இறுதியாட்டத்தில் முதலில் இடம்பெற்ற போட்டியில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பட்டபிளை விளையாட்டுக்கழக அணி மோதியது.

கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழக அணி 27:24 என்ற புள்ளி அடிப்படையில் பட்டபிளை விளையாட்டுக்கழக அணியை வெற்றி கொண்டது.

தொடர்ந்து இடம்பெற்ற மற்றோர் ஆட்டத்தில் பமிலியன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக அணி மோதியது.

பமிலியன்ஸ் விளையாட்டுக்கழக அணி 27:24 என்ற புள்ளி அடிப்படையில் யாழ். பல்கலைக்கழக அணியை வெற்றிகொண்டது.

(3-190) (24)

## வை.எம்.சி.ஏயின் உள்ளக விளையாட்டு

யாழ்ப்பாணம்,ஏப்.19

யாழ். வை.எம்.சி.ஏ. அங்கத்தவர்களுக்கு இடையே நடத்தவிருக்கும் உள்ளக விளையாட்டுப் போட்டிக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

மேற்படி உள்ளக விளையாட்டுப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் அங்கத்தவர்கள் விண்ணப்பப் படிவங்களைக் காரியாலயத்தில் பெற்று, அதனைப் பூரணப்படுத்தி எதிர் வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு வை.எம்.சி.ஏயின் செயலாளர் கேட்டுள்ளார்.

(3-190) (24)

## பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகளின் விவரம்

யாழ். வலயக் கல்வி அலுவலகத்தால் யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்டுவரும் விளையாட்டுப்போட்டிகளின் நிகழ்ச்சி நிரல் வெளியாகியுள்ளது.

கடந்த 12 ஆம் திகதி இந்தப் போட்டிகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

அடுத்த மாதம் 19ஆம் திகதி வரை இந்தப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இன்றுமுதல் மே 19ஆம் திகதிவரை நடைபெறவுள்ள போட்டிகளின் விவரம் வருமாறு:-

| திகதி | போட்டிகள் | பிரிவுகள் | மைதானங்கள் |
|---|---|---|---|
| 19.04.2006 | மேசைப்பந்தாட்டம் | 19 வயது ஆண், பெண் | யாழ். மத்திய கல்லூரி |
| 20,21.04.2006 | கிரிக்கெட் | 19 வயது ஆண் | யாழ். மத்திய கல்லூரி |
| 20,21,22.04.2006 | கூடைப்பந்தாட்டம் | 19 வயது ஆண், பெண் | வேம்படி மகளிர் கல்லூரி |
| 29,30.04.2006 | வலைப்பந்து | 15,17,19 வயதுப் பெண் | முத்துத்தம்பி ம.வி. |
| 6,7,.05.2006 | கரபந்து | 15,17,19 வயது ஆண் | முத்துத்தம்பி ம.வி. |
| 10,11.05.2006 | கரபந்து | 15,17 வயதுப் பெண் | வேம்படி மகளிர் கல்லூரி |
| 13.05.2006 | சதுரங்கம் | 19 வய்து ஆண், பெண் | வேம்படி மகளிர் கல்லூரி |
| 14.05.2006 | சதுரங்கம் | 15 வயது ஆண், பெண் | வேம்படி மகளிர் கல்லூரி |
| 15,16,17.05.2006 | தடகளப்போட்டி | 11,13,15,17,19, 21 வயது ஆண், பெண் | யாழ். பல்கலைக்கழகம் |
| 19.05.2006 | உடற்பயிற்சி | 19 வயது ஆண், பெண் | முத்துத்தம்பி ம.வி. |

## திலீபன் ஞாபகார்த்தமாக சதுரங்கச் சுற்றுப்போட்டி

கிளிநொச்சி,ஏப்.19

இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தால் லெப்.கேணல் திலீபன் ஞாபகார்த்தமாக சதுரங்கச் சுற்றுப்போட்டி நடத்தப்பட்டு வருகின்றது.

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் ஆரம்பமான இந்தச் சுற்றுப்போட்டியின் முதற் சுற்றுப்போட்டியில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த போட்டியாளர்கள் பங்குபற்றினர்.

ஆரம்ப நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் எழில்வேந்தன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து அன்னை பூபதியின் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரை இளையோர் செயற்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் விஜியும் பொதுச்சுடரை மத்திய கல்லூரி அதிபர் இ.இராஜமகேந்திரன், இளையோர் செயற்பாட்டு நிறுவனச் செயலாளர் அ.அன்ரன் அன்பழகன், மத்திய கல்லூரி ஆசிரியர் சிவரூபன் ஆகியோரும் ஏற்றிவைத்தனர்.

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் எனப் போட்டிகள் இடம்பெற்றன.




## நிரல் ஒழுங்கு தயாரிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.19

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெறவுள்ள ஆண்கள், பெண்கள் இருபாலாருக்குமான வலைப்பந்தாட்ட, கரபந்தாட்டப் போட்டிகளுக்கான நிரல் ஒழுங்கு தயாரித்தல் எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

வலைபந்தாட்டப் போட்டிக்கான நிரல் ஒழுங்கு முற்பகல் 10 மணிக்கும் -

கரபந்தாட்டப் போட்டிக்கான நிரல் ஒழுங்கு முற்பகல் 11 மணிக்கும் - இடம் பெறுமெனவும்

இதில் பாடசாலைகளின் விளையாட்டுத் துறைப் பொறுப்பாசிரியர்களை சமுகங் கொடுக்குமாறும் - யாழ். மாவட்டப் பாடசாலைகளின் விள்ளயர்ட்டுக் குழு செயலாளர் க.குமாரசாமி கேட்டுள்ளார்.

(3-190)(24)

## அராலியில் நடக்கும் ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஏப்.19

'ஸ்கை' எலக்ரோனிக்ஸ் நிறுவனத்தின் ஆதரவுடன் அராலி பாரதி விளையாட்டுக் கழகம் மறைந்த கழக வீரர்களின் ஞாபகார்த்தமாக நடத்திவரும் - 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான - உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்றும் நாளையும் அராலி இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

**இன்று** ✱ பிற்பகல் 4 மணி - றேட் றேஞ்சர்ஸ் வி.க. எதிர் வட்டு சிவன் வி.க. ✱ மாலை - 5 மணி - யங்கென்றீஸ் வி. க. எதிர் ஏ.எல். வி.க.

**நாளை** ✱ பிற்பகல் 4 மணி - சென்.பீற்றர் வி.க. (பி) எதிர் கலைஒளி வி.க. ✱ பிற்பகல் 5 மணி - அளவெட்டி விநாயகர் வி.க. எதிர் அராலி ஜேம்ஸ் வி.க. (பி) (3-190) (24)

## இறுதியாட்டங்கள் இன்று

யாழ்ப்பாணம்,ஏப்.19

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்திவரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டங்கள் இன்று பிற்பகல் 3 மணிமுதல் யாழ்.ப்ல்கலைக்கழக கூடைப்பந்தாட்ட ஆடுகளத்தில் நடைபெறவுள்ளன.

இன்றைய நிகழ்வுக்கு ஈ.எஸ்.பேரம்பலம் நிறுவன உரிமையாளர் ஈ.எஸ். பேரம்பலம் பிரதம விருந்தினராகவும் யாழ். பல்கலைக்கழக உடற் பயிற்சிப் பிரிவு இணைப்பாளர் திருமதி ஜே. சரவணபவ ஐயர் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

இன்றைய இறுதியாட்டங்களில் மோதும் அணிகள் வருமாறு:-

✱ பிற்பகல் 3 மணி - பெண்கள் - கே.ஸி.ஸி.ஸி. வி.க. எதிர் பமிலியன்ஸ் வி.க.

✱ பிற்பகல் 4.30 மணி - சென்றலைட்ஸ் வி.க. எதிர் பற்றீஸியன்ஸ் வி.க.

(3-190) (24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறு குறிஞ்சா இலை தேவை

சிறுகுறிஞ்சா இலை வெட்டியவுடன் உலராமல் fresh ஆகத் தேவை. 'சிறு குறிஞ்சா வைத்திருப்பவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு:
BIO TEC INTERNATIONAL Ltd.
131/2, PALALY ROAD,
THIRUNELVELY, JAFFNA.
Telephone: 021 4590907
விவசாயப் பண்ணைக்கு அருகில்.
(9500)
(24-45-15)


## பறங்கியர் சங்கம் அங்குரார்ப்பணம்

குருநகர்,ஏப்.19

யாழ்.நகரப் பகுதியில் வசிக்கும் பறங்கியர் சமூகத்தினர் தங்களுக்கென 'பறங்கியர் சங்கம்' எனும் அமைப்பை அண்மையில் உருவாக்கியுள்ளார்கள்.

யாழ்.பிரதான வீதியில் அமைந்துள்ள முன்னைய டாக்டர் தர்மலிங்கம் விடுதியில் இச்சங்கம் எஸ்.வின்சன்ற் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.
(3-51)(19)

## நேர்முகப் பரீட்சை நடந்தும் நியமனம் இல்லை

நல்லூர்,ஏப்.19

நெடுந்தீவுப் படகுச் சேவையில் உள்ள வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு 2004 ஆம் ஆண்டில் யாழ். வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஊழியர்களுக்கான நேர்முகப் பரீட்சையை நடத்தியது. எனினும், ஒன்றரை வருடங்களுக்கு மேலாகியும் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு நியமனம் வழங்கப்படவில்லை எனக் கூறப்படுகின்றது.

படகில் சில பதவிகளுக்கான வெற்றிடங்கள் இருக்கும் நிலையில் தற்சமயம் ஐந்து ஊழியர்கள் மட்டுமே பணியில் உள்ளதாகவும் தெரிவுசெய்யப்பட்டவர்கள் நியமனங்களுக்காகக் காத்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.
(3-111) (24)

## இசற் புள்ளி விவரம் இரு வாரங்களில் வெளியாகும்

கொழும்பு,ஏப்.19

கடந்த ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையின் 'இசற்' புள்ளிகள் இன்னும் இரண்டு வாரங்களில் வெளியிடப்படும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதுதொடர்பாகக் கல்வி அமைச்சிடம் பேச்சு வார்த்தை நடத்திவருவதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

முதலில் வெளியான பெறுபேறுகள் மற்றும் திருத்தப்பட்ட பெறுபேறுகளின் அடிப்படையில் நியாயமான முறையில் மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதிகள் வழங்கப்படும் என்றும் - மானியங்கள் ஆணைக்குழு மேலும் தெரிவித்தது.

இதேவேளை, கடந்த ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையின் பெறுபேறுகள் இந்த மாத இறுதிப்பகுதியில் வெளியிடப்படும்என்று பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.(3-13)

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் முன்னாள் பொது முகாமையாளரின்
தாய்
திருமதி கந்தையா – சிங்காரம்
அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம்.
அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அங்கத்தவர்கள்,
பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்.
வடமராட்சி கிழக்கு
ப.நெ.வ.அ.கூ. சங்கம்
மருதங்கேணி.
(சி.48987)(23-45-15-24)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




பிரான்ஸில் வசிக்கும் இதயன்- ரகுதா தம்பதியரின் செல்வப் புதல்வி
எழிதினி



தனது முதலாவது பிறந்தநாளை இன்று (19.04.2006) புதன்கிழமை பிரான்ஸிலுள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.
எழிதினியை அப்பா இதயன், அம்மா ரகுதா, மாமாமார், மாமிமார், ஐயா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பா, சித்திமார், மச்சான் மற்றும் உற்றார், உறவினர்கள் நீடூழி வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

அரசடி,
தொண்டைமானாறு.
மாமா - ரதன்.
(49664)
(89-46-16-243)

## ஊர்காவற்றுறை ப.நோ.கூ. சங்கம்
### வாக்காளர் இடாப்பு மூடுதல்

31.03.2006 முடிவடைந்த காலப்பகுதிக்கான வாக்காளர் இடாப்பு மூடப்பட்டுள்ளது. இவ் இடாப்புக்கள் அங்கத்தவர்களின் ஆட்சேபனைகளைப் பெறுவதற்காக 21.04.2006 தொடக்கம் 05.05.2006 வரை கிளைகளில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.
மேற்படி கிளை. 3 இற்கான வாக்காளர் பட்டியல் கிளை. 4இலும்
கிளை. 5இற்கான வாக்காளர் பட்டியல் தலைமை அலுவலகத்திலும்
கிளை.11 இற்கான வாக்காளர் பட்டியல் கிளை.10இலும்
கிளை.12 இற்கான வாக்காளர் பட்டியல் கிளை. 6இலும்
பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது என்பதையும் அறியத்தருகின்றோம்

அங்கத்தவர்கள் ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் 05.05.2006 இற்கு முன் எழுத்துமூலம் தலைமை அலவலகத்திற்கு தெரியப்படுத்தி வாக்காளர் இடாப்பைப் பூர்த்திசெய்ய உதவும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்

செயலாளர்,
ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்.
(சி.48988)(23-45-15-24)

## 5ஆம் ஆண்டு நினைவுகளில்...

மலர்வு 07 - 04 - 1964



உதிர்வு 13 - 05 - 2001

திருமதி அருளம்மா நடராசா
திதி :- சஷ்டி கரஅபரம் [19.04.2006]

ஐந்தாண்டுகள் கரைந்தாலும் அழியாத நின் நினைவை
சுமந்து நிற்கும் இதயங்கள் ஏங்குதம்மா - உம் பிரிவால்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

காரணவாய் தெற்கு,
கரவெட்டி.
மகன், மகள்,
மருமகன், பேர்த்தி.
(49870)
(24-45-15-24)

## 10ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 03 - 10 - 1933



உதிர்வு 19 - 04 - 1996

Dr.A.இராசநாயகம்
(Retired Divisional R.M.O., Anurathapura)

மாண்டோர் மீளா மாநிலத்தில் அறிந்தும்
பாசமிகு நெஞ்சங்கள் ஏற்பதில்லை.
உங்கள் ஆத்மசாந்திக்காக இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

பாணாவெட்டி,
தொல்புரம்
பாசமிகு குடும்பத்தினர்.
(49107)(24-45-15)


வெளிவந்துவிட்டது.!!!
ஏப்ரல் மாத இதழ்

இலங்கையின் ஒரேயொரு மாதாந்த
தகவல் தொழில் நுட்ப சஞ்சிகை

தமிழ் சஞ்சிகை உலகில்
புதிய பிரவேசம்




தமிழ் PCTIMES
தகவல் தொழில்நுட்ப சஞ்சிகை

2006 மார்ச் முதல் மாதாந்தம் வெளிவருகிறது.
இலங்கையின் சகல பாகங்களிலும் கிடைக்கும் !

புதிய
- தகவல்கள்
- செய்திகள்
- மென்பொருள் (SoftWare)
- வன்பொருள் (HardWare)
- செய்முறைகள்
- செயற்பாடுகள்

இன்னும் பல சுவையான அம்சங்களுடன்...

பதிப்பகத்தாரின் மற்றுமோர் வெளியீடு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலையைப் பாதுகாக்கும் தார்மீகப் பொறுப்பு நெருங்குகிறது

தமிழர் தாயகத்தின் தலைநகரமான திருகோணமலையைக் காக்க வேண்டிய பொறுப்பிற்கான - கடைசி முடிவை அடைவதற்கான - கால எல்லை எங்களை நோக்கி நகர்கிறது என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ வானொலியான புலிகளின் குரல் அரசியல் அரங்கம் நிகழ்வில் சனிக்கிழமை (15.04.2006) அவர் ஆற்றிய உரையின் எழுத்து வடிவம் இது.

நாங்கள் சென்றமுறை திருமலையினுடைய சம்பவங்களையும் இனப்படுகொலையையும் அடிச்சூட்சுமங்களோடு தொடர்புபடுத்தி உரையாடினோம்.

இம்முறை அதன் விரிவாக்கம் நடப்பதனை நீங்கள் காண்கின்றீர்கள்

அண்மைக்கால நிகழ்வுகள் அதுவும் கடந்த இரண்டு மூன்று நாள்களாக நடந்தேறும் நிகழ்வுகள் எங்களுக்கு மிகத் தெளிவாகக் காலத்தைக் காட்டும் கண்ணாடி போல - மிகப் பிரதிபலிப்பான - செய்திகளை அறுத்து உறுத்திக் கூறுகின்றன.

மகிந்தரும் அவருடைய கொம்பனியும் அதாவது, ஜே.வி.பி., ஹெல உறுமய போன்றவர்கள் கடந்த தேர்தலின்போது கக்கிய இனவாதத் தீயினுடைய செயற்பாட்டுக் காலங்களை இப்போது நாம் திருமலையில் காண்கின்றோம்.

அப்படி கக்கப்பட்ட இனவாதம் எந்த வகையில் தன்னுடைய கொடூரங்களை தமிழ் மக்கள் மீது பாய்ச்சுகின்றது என்பதும் புற்றுக்குள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கின்ற நாகம் அடிக்கடி வெளியில் வந்து தீண்டுவது போல திருமலை மக்கள் நாளாந்தம் தொடர்கின்ற வன்முறைக்குள் தீண்டப்படுகின்ற அந்த அவலத்தை இப்போது நாம் காண்கின்றோம்.



ஜெனீவாவினுடைய முதல் பேச்சுக்குப் பின்னர் இரண்டாவது பேச்சு நடந்தால் என்ன நடக்காது விட்டால் என்ன இந்தப் பேச்சுக்களானது களநிலைக்கும் அரசியல் பேச்சுக்களுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்றாகிவிட்டது.

பேச்சுக்கள் ஒரு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படாது ஓர் அழுத்தத்திற்கு மட்டும் அல்லது ஒரு நடிப்புக்காக செய்யப்படுகின்ற பேச்சுவார்த்தை போன்று நிலைப்பாடு எடுப்பதற்கான ஒரு சூழலை சிங்கள அரசாங்கம் தானே எடுத்துவிட்டதால் இந்த முறை பேச்சுக்கள் தொடர்பாக எவருக்கும் பெரிதாக ஆர்வம் இருப்பதாகத் தெரியவில்லை.

சம்பந்தப்பட்ட இருதரப்பும் பேச்சுக்களுக்கு ஊடாக தீர்வைக்காண முடியும் என்கின்ற - சாதாரண நடைமுறைத் தீர்வைக் கூட காணமுடியும் என்கின்ற - அந்த எண்ணத்தைக் கூட இழந்துவிட்ட நிலை ஏற்பட்டுள்ளது.

## திருமலையில் தமிழரசுக் கட்சியின் வெற்றி

திருமலையில் இப்படியான நிலைப்பாட்டை சிங்களப் பெருந்தேசியவாதம் எடுப்பதற்கு பிரதான காரணமாக அமைந்தது, திருமலை நகர சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏறத்தாழ 75.6 விழுக்காடு வாக்குகளைப் பெற்று தமிழர்களுடைய தாயகம் திருமலை என்கின்ற அந்த நிலைப்பாட்டை உறுதிப்படுத்தியதுதான்

அதிலிருந்தே இந்தப் பிரச்சினைகள் தொடங்கின.

திருகோணமலையும் பட்டணமும் சூழலும் அது அமைந்த பிரதேசமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்டுப்பாட்டில் வந்தன.

ஜே.வி.பி. நான்கு விழுக்காடுக்குட்பட்ட வாக்குகளைப் பெற தமிழ்த் தேசியம் நிரூபிக்கப்பட்டமையும் சிங்களவருடைய பெருந்தேசியவாதத்துக்கு தீனி போட்டது என்பது தெளிவான செய்தியாக இருக்கின்றது.

இந்த நிலையில் திருமலை தொடர்பான சில முக்கியமான குறிப்புக்களை திருப்பி நாம் மனங்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது.

எங்கள் தமிழீழ மக்களுடைய விடுதலைக்காக திருமலையில் வாழ்கின்ற மக்கள் இன்று பணயக் கைதிகளாக வைக்கப்பட்டு பலி எடுக்கப்படுவதும் விரட்டப்படுவதுமான துயரம் தோய்ந்த நிலை உருவாகி உள்ளது. அந்த மக்களுக்கான ஆறுதலை நாங்கள் கொடுக்க வேண்டிய அவசியம் எங்களுக்கு இருக்கின்றது.

அந்த மக்களுடைய வாழ்நிலை பற்றி சிந்திக்க வேண்டிய தேவை இருக்கின்றது. அதனை மாற்றுவது, பாதுகாப்பது தொடர்பாக எல்லாவற்றையும் சிந்திக்க வேண்டியதற்கான பாரிய தார்மீகப் பொறுப்பு தமிழீழ மக்கள் அனைவருக்கும் இருக்கிறது.

## வரலாற்றுச் சம்பவங்கள்

திருமலை என்பது எங்களுடைய பாரம்பரிய பூமி.

ஒவ்வொருமுறை இனக்கலவரத்தின் போதும் திருமலையில் நடத்தப்பட்ட - அரங்கேற்றப்பட்ட கொடுமைகளை அறிய வேண்டிய அவசியம் நமக்கு இருக்கின்றது.

1956ஆம் ஆண்டு அம்பாறையில் குடியேற்றப்பட்ட சிங்களவர்களுடைய வன்முறைக் கலகம் தமிழ் மககள் மீது குறிப்பாக மலையக மக்கள் மீதும் வெடித்து எழுந்தது.

1958ஆம் ஆண்டு கலவரத்தின்போது, பதவியாவில் 'சிங்கள மக்கள் படை' என்ற ஒரு படையை உரு வாக்கிப் பதவியாவில் குடியேற்றப்பட்ட சிங்களக் குடியேற்ற வாசிகள் செய்த அட்டூழியங்கள், அதனைத் தொடர்ந்து 1977, 1981ஆம் ஆண்டுகளில் குறிப்பாக 1983 ஜூலை இல் நடந்த அட்டூழியங்களில் 600இற்கும் மேற்பட்ட வீடுகள் எரிக்கப்பட்டு 100இற்கும் மேற்பட்ட வர்த்தக நிலையங்கள் கொள்ளையடிக்கப்பட்டு - முற்றிலுமாக அழிக்கப்பட்டு - 6 பிரதான ஆலயங்களும் அழிக்கப்பட்டன.

1983இல் அழிக்கப்பட்ட ஆலயம் மீண்டும் கட்டப்பட்டு ஒருசில காலத்துக்குள் மீண்டும் இன்று அழிக்கப்பட்டிருக்கும் வரலாறு நடந்துள்ளது.

கன்னியாவில் உள்ள அந்த புகழ் வாய்ந்த நடேசர் ஆலயம் மீண்டும் எரியூட்டப்பட்டிருக்கின்றது. இந்த ஆலயம் 1983ஆம் ஆண்டு கலவரத்தில் முற்றிலுமாக அழிக்கப்பட்டது. மீண்டும் 2004ஆம் ஆண்டு புனரமைக்கப்பட்டது.

ஆகவே, திருமலை நகரத்தைச் சுற்றி இருக்கக்கூடிய அனைத்துத் தமிழ் வாழ் இடங்களும் படிப்படியாக மிகப் பெரிய நெருக்குவாரத்துக்கு உட்படுகின்றன.

திருமலையில் 1956ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 16ஆம் நாள் தமிழ் மக்களுடைய அனைத்துப் பிரதிநிதிகளும் ஒன்றுகூடி நிறைவேற்றிய அந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானம் -

அந்தத் தீர்மானத்துக்கு முன்னர் திருக்கோவிலில் இருந்தும் காங்கேசன்துறையிலிருந்தும் ஒழுங்குசெய்யப்பட்ட தமிழ் மக்களுடைய பிரதிநிதிகள் அடங்கிய அந்தப் பாதயாத்திரை - காங்கேசன்துறையிலிருந்து மாங்குளம் வரை சென்று மாங்குளத்திலிருந்து திரும்பி ஒட்டுசுட்டான், முள்ளியவளை, தண்ணீரூற்று, முல்லைத்தீவு நகரத்து அளம்பில், தென்னமரவடி, கொக்குத்தொடுவாய், கொக்கிளாய், திரியாய், புல்மோட்டை, குச்சவெளி, நிலாவெளி என்று ஆயிரக்கணக்கான தொண்டர்களுடன் நடந்தது. அப்போது நிலாவெளியில் பதவியாவிலிருந்து திரட்டப்பட்ட குண்டர்கள் பாதயாத்திரைத் தொண்டர்கள் மீது நடத்திய தாக்குதல் தொடர்பாக எங்களுடைய மதிப்புக்குரிய நவரட்ணம் அவர்கள், தன்னுடைய தமிழ் இராச்சியத்தினுடைய வீழ்ச்சியும் எழுச்சியும் என்கின்ற நூலில் கூறியிருக்கின்றார்.

அந்தச் சம்பவங்களை நாங்கள் காணும் போது அளம்பிலுக்கு அப்பால் உள்ள அந்தப்பகுதி எத்தகைய அழகு வாய்ந்த வளத்தோடு வெளிநாடுகளிலிருந்து வரக் கூடிய



பறவைகள் அனைத்தும் தங்கக்கூடிய அற்புதமான ஒரு சரணாலயமாகத் தோற்றமளித்த வரலாறு தொடர்பாகக் கூறப்படும் போதும் எங்களுடைய நெஞ்சங்களில் விடுதலைத் தீ பற்றி எரிவதனை யாராலும் தடுக்க முடியாது.

அதனைப் போலவே - அறப்போர் அரியநாயகம் அவர்கள், திருக்கோவிலிருந்து பாதயாத்திரைக்கு ஊடாக வந்து சந்தித்த அந்தச் சங்கமத்தினுடைய மையமான திருமலையின் புள்ளியில் இன்று நடக்கின்ற விடயங்களைக் காணும்போது அனைவருக்கும் இந்த வரலாற்றின் பின் பரிமாணம் நன்றாகப் புரியும்.

1921ஆம் ஆண்டு மூன்று விழுக்காட்டுக்கும் குறைவாக இருந்த சிங்களக் குடியேற்றவாசிகளினுடைய அந்த எண்ணிக்கை என்பது இப்போது எந்தளவு அதிகரித்திருக்கின்றது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

இந்த அதிகரிப்பை மேலும் அதிகரிப்பதற்காக செய்யப்பட்டிருக்கின்ற, செய்யப்படப் போகின்றவற்றை நாம் எண்ணும் போது எங்களுக்கு மிக விரைவில் ஒரு பிரதானமான கடமை இருக்கிறது.

தமிழ்த் தேசியத்தினுடைய தாயகத்தைக் காக்க வேண்டிய பொறுப்பிற்காக நாங்கள் என்ன செய்யவேண்டும் என்கின்ற அந்தக் கடைசி முடிவை அடைவதற்கான கால எல்லை எங்களை நோக்கி நகர்கிறது.

தமிழீழத்தினுடைய எண்ணக்கருவினை அழிப்பதற்காக -

திருமலை மாவட்டத்தினைத் துண்டாடுவதற்காக -

அந்த மாவட்டத்தினுடைய இனப்பரம்பலை முற்றாக மாற்றியமைப்பதற்காக -

திருகோணமலை மாவட்டத்தைப் பிற மாவட்டங்களிலிருந்து முற்றாகத் துண்டிப் பதற்காக -

செய்யப்பட்ட அனைத்துத் திட்டங்களையும் நாம் பார்க்க வேண்டும்.

1950களில் தொடங்கப்பட்ட திட்டங்களுக்கு ஊடாக முற்றிலுமாக பெயர் மாற்றப்பட்ட மொரவெவ, கோமரங்கடவெல, கல்மெட்டியாவ, மகாதிவுல்வெவ, வானெல என்கிற திட்டம் 1950, 60, 80 களில் என்று படிப்படியாக செய்யப்பட்டு 1980களில் கடைசியாக யான் ஓயா என்ற திட்டத்தையும் செய்து முற்றிலுமாக எங்களுடைய தாயகத்தைத் துண்டாடினர்.

அதற்கு முன்னர் திருமலை நகரத்தினுடைய மையப்பகுதியில் மணிக்கூண்டுக் கோபுரம், பேருந்து நிலையம், சந்தைப்பகுதி அமைந்திருக்கும் கடற்கரைப்பகுதிகளில் 1950களிருந்தே சிங்கள மீனவக் குடியேற்றங்கள் நடத்தப்பட்டன. அந்தக் குடியேற்றம் படிப்படியாக கோட்டை வரை பரவியது.

திருமலை பேருந்து நிலையும், மரக்கறிச் சந்தை, மணிக்கூண்டுக் கோபுரம், வின்சென்ட் ஆகிய பகுதிகளில் இருந்து தான் இன்று தமிழ் மக்களின் படுகொலைகள் அரங்கேற்றப்படுகின்றன.

ஆகவே, 1983ஆம் ஆண்டு கலவரத்திற்குப் பின்னர் முற்றிலுமாக மாற்றியமைக்கப்பட்ட அதே களத்தை எவ்வளவு பக்குவமாக அரசாங்கத்தின் துணையோடு அவர்கள் நிறைவேற்றினார்கள் என்பது இங்கே தெளிவான செய்தியாக இருக்கிறது.

1953 ஆம் ஆண்டு பிரித்தானிய கடற்படைத் தளம் மூடப்பட்டதற்குப் பின்னர் சிறிலங்கா அரசு பாதுகாப்புக்கு என றொட்றிக்கோ, டொக்யாட் அல்லது பிளாண்டன் பொயின்ற், ஆண்டான்குளம் நீர் சுத்திகரிப்புப் பகுதி, விமான நிலையப் பகுதிகள் போன்றவை எடுத்துக்கொள்ளப்பட்டன.

மட்கோ, பாலம்போட்டாறு, சீனன்குடா என்கிற எங்கட பகுதிகள் அனைத்தையும் அரசாங்க அதிபருடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து காணி ஆணையாளரின் பரிந்துரையின் பேரில் காணிக் கச்சேரிகளை நடத்தி முற்றிலுமாக சனத்தொகைப் பரம்பலை துண்டாடி சிங்களக் குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டன.

இவை அனைத்தும் நம் கண்ணுக்கு முன்னால் நடந்தேறிய வரலாறு.

இத்தகைய குடியேற்றங்கள் காரணமாக நகரப்பகுதிகளில் மிகக்குறைந்தளவு துண்டுகள் 20, 40 துண்டுகளை சிங்கள, தமிழ் மக்களுக்குப் பிரித்துக் கொடுத்தது.

கிராமங்களில் 40 தொடக்கம் 2 ஏக்கர் காணிகளைப் பிரித்துக் கொடுத்து, மிக முக்கியமான திட்டமிட்ட ஒரு காணிப்பறிப்பை மிக இலாவகமாகச் செய்து முடித்தனர்.

இன்றும், எஞ்சி இருக்கக்கூடிய தமிழ் மக்களையும் அகற்றக்கூடிய ஒரு நிலைமையையும் உருவாக்குவதற்கான வாய்ப்பைத் தான் சிங்களம் இந்தப் பேச்சுவார்த்தையின் உடைய முடிவில் தனது இலக்காகக் கொண்டிருக்கிறது.


1956 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 19 ஆம் நாள் திருமலையில் தமிழீழத்தினுடைய அனைத்து மக்களின் பிரதிநிதிகளும் ஏறத்தாழ 5,000க்கும் மேற்பட்டவர்கள் ஒன்று கூடி எடுத்த தீர்மானத்தில் பிரதானமான ஒன்று -

"குடியேற்றங்களை உடனடியாக நிறுத்து" என்பதாகும்.

அந்தத் தீர்மானத்தினுடைய எண்ணக்கரு இன்றுவரை எங்கள் மனங்களில் எதிரொலிக்கிறது.

மற்றொன்று-

"சிங்கள யாப்பு முற்றிலுமாக மாற்றப்பட்டு தன்னாட்சியுள்ள தமிழ்ப் பகுதிகள்



உருவாக்கப்பட வேண்டும்" என்பது.

இம் மாதிரியான நிலப்பறிப்பு என்பது, இனப்படுகொலையின் இன்னொரு பக்கமாக இருப்பதால் அதுவும் உலகத்தினுடைய கண்ணுக்கு முன்னால் நாகரிகமான முறையில் நடக்கின்ற பேச்சுக் களுக்கு இடையில் இத்தகைய படுகொலைகளைச் செய்துள்ளனர்.

இப்படுகொலைக்குப் பின்னால் புலிகள் மீது தாக்குதலுக்கான முழுக்காரணத்தையும் போடுகின்றனர். அதனால் புலிகளை மிக மோசமான பயங்கவாதிகளாக கூறக்கூடிய நிலையை சிங்கள அரசு ஏற்படுத்துகிறது.

அப்படியானால் நாங்கள் எடுக்க வேண்டிய முடிவு தொடர்பான அழுத்தங்கள் எங்களுக்கு மேலும் அதிகரிக்கின்றது.

(நன்றி: புதினம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

| இவ்வுலகில் | இறையுலகில் |
|---|---|
| 02 - 10 - 1927 | 20 - 03 - 2006 |



### அமரர் செல்லப்பா தம்பியையா

20.03.2006 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் மறைவுச் செய்திகேட்டு நேரில் வந்தும், தொலைபேசி, மடல்கள் மூலமாகவும் அனுதாபம் தெரிவித்தும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டும் பல வகைகளில் உதவி புரிந்த கோப்பாய் வடக்கு, மத்தி விவசாய சம்மேளனம், கோப்பாய் வடக்கு சமூக சேவாசங்கம், பாலர் பகல் விடுதி என்பனவற்றிக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன், இன்று (19.04.2006) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும், மதியபோசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சரவணபவானந்தா வீதி,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.
(49501)(51-)

த. அழகம்மா (மனைவி)
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## வெளிநாட்டு வேலை வாய்ப்பு

I டோகா, கட்டார் நாட்டில் அரசாங்க முதன்மைக் கம்பனியில் வேலை வாய்ப்புகள் உள்ளன.

*பயணம் ஒரு மாதத்திற்குள்*

| தொழில்கள் | தொகை |
|---|---|
| *சிவில் இஞ்சினியர் | 20 |
| *தச்சுவேலை செய்வோர் | 100 |
| *கம்பி கட்டுபவர் | 50 |
| *மேசன் (கட்டுபவர்கள்) | 100 |
| *மேசன் (பூசுபவர்கள்) | 100 |
| *மேசன் (மாபிள் பதிப்பவர்கள்) | 50 |
| *அலுமினியம் பொருத்துபவர்கள் | 20 |
| *மின்சார வேலையாள்கள் (வீட்டு மின் இணைப்பு) | 20 |
| *வாகன மின்சார வேலை செய்பவர் | 10 |
| *பைப் பொருத்துபவர்கள் | 20 |
| *ஸ்பிறே பெயின்ரர்/ரிங்கர் (வாகனம்) | 20 |
| *பார வாகனம் ஓட்டுபவர்கள் (ரவர் ரெயின்கிறேடர், ஷவல் ஒப்பிறேட்டர், லோடர், ஸ்கவேட்டர், J.C.B ஒப்பிறேட்டர்) | 20 |
| *கைற்றொனிக் மெக்கானிக் | 10 |

கொண்டுவரவேண்டிய ஆவணங்கள்

பாஸ்போட்
பாஸ்போட் அளவு புகைப்படம்- 05
குறிப்பிட்ட தொழில்களுக்குரிய சான்றிதழ்கள் இருப்பின் கொண்டுவரவும்.

*தொடர்பு: மைக்கல் 0777 279813*

குறிப்பு: முற்பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது

II சவுதி:-

*சவுதி அரேபியாவில் முதன்மைக் கம்பனி (அரம்கோ) உடனடி வேலைவாய்ப்பு. 10 நாள்களில் பயணம். விசா கையிருப்பில் உண்டு.*

| தொழில்கள் | தொகை |
|---|---|
| *சிவில் இஞ்சினியர் | 8 |
| *கணக்காளர் | 4 |
| *பார வாகனச் சாரதி | 15 |
| *மேசன் | 20 |
| *தச்சுவேலை செய்வோர் | 20 |
| *பிளம்பர் (பைப் பொருத்துநர்) | 10 |
| *மின் இணைப்பாளர் | 10 |
| *பாரவாகன ஓட்டுநர் (ரவர் ரெயின், கிறேடர், ஷவல் ஒப்பிறேட்டர், லோடர், ஸ்கவேட்டர், J.C.B ஒப்பிறேட்டர்). | 15 |

கொண்டுவரவேண்டிய ஆவணங்கள்

பாஸ்போட்
பாஸ்போட் அளவு புகைப்படம்- 05
குறிப்பிட்ட தொழிலுக்குரிய சான்றிதழ் இருப்பின் கொண்டுவரவும்.

*தொடர்பு: மைக்கல் 0777 279813*
*குறிப்பு: முற்பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.*

III மலேசியாவில் வேலைவாய்ப்பு

*மலேசியா அரசாங்கத்தில் முக்கியமான காரியாலயங்களில் உடனடியாக வேலைபெற்றுச் செல்வதற்கு 3 வருட தொழில் விசா உண்டு. பயணம் 1½ மாதத்திற்குள்*

| தொழில்கள் | தொகை |
|---|---|
| வேலைத்தள உதவியாளர்கள் | |
| *நூடில்ஸ் கம்பனி | 30 |
| *கையுறைக் கம்பனி | 30 |
| *கூடைப்பந்துக் கம்பனி | 40 |
| *இலத்திரனியல் கம்பனி | 40 |
| *சொகுசு ஆசன கம்பனி (குசன்) | 75 |

கொண்டுவரவேண்டிய ஆவணங்கள்

சகல நாடுகளுக்கும் செல்லக்கூடிய கடவுச் சீட்டு, பாஸ்போட் அளவு படம் 15 (கலர்)

(49527)(51-)

*தொடர்பு: 0777 279813*
*மைக்கல்*

*குறிப்பு: முற்பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.*

## விளையாட்டு விழாவும் பரிசளிப்பு விழாவும்

காரைநகர், ஏப். 19

இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் அனுசரணையுடன் காரைநகர் சமுர்த்தி வங்கி நடத்தும் புத்தாண்டு தின கொண்டாட்டத்தின் இறுதிநாள் விளையாட்டு விழாவும் பரிசளிப்பு விழாவும் இன்று புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா ம.ம.வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

காரைநகர் உதவி அரசாங்க அதிபர்க. ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே. கணேசும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ. சிவசுவாமி, மேலதிக மாவட்டச் செயலர் (நிதி) க.சண்முகரட்ணம், வடக்கு- கிழக்கு வீடமைப்பு திட்ட யாழ்.மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் வே. சாம்பசிவம், யாழ் மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் எம். மகேஸ்வரகுமார் ஆகியோரும் கலந்து கொள்வர்.

அன்றைய தினம் காரைநகர் சமுர்த்தி வங்கியின் விசேட கருமபீடம் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இயங்க உள்ளதுடன், கொண்டாட்ட காலங்களில் ஐந்நூறு ரூபாவிற்கு மேல் வைப்பிலிட்ட வாடிக்கையாளர்களுக்கு சீட்டிழுப்பின் மூலம் பெறுமதி மிக்க பணப்பரிசில்களும் வழங்கப்பட உள்ளதாக காரைநகர் உதவி அரசாங்க அதிபர் க. ஸ்ரீமோகனன் தெரிவித்தார்.

(3-73)

## 20 லென்ஸ்கள் அன்பளிப்பு

வலி.தென்மேற்கு, ஏப். 19

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம், யாழ். போதனா வைத்தியசாலையில் கண் பூவிழிப்படல (கறறாக்ட்) சத்திர சிகிச்சையை மேற்கொள்ளும் வசதி குறைந்தவர்களுக்கு பொருத்துவதற்காக சுமார் 40 ஆயிரம் ரூபா பெறுமதிமிக்க 20 கண்வில்லை (INTRAOCULAR LENS) களை வழங்கியுள்ளது. யாழ். அரசினர் போதனா வைத்தியசாலை கண் வைத்திய நிபுணர் டாக்டர்.எஸ். குகதாசனிடம் இவை ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் வட்டுக்கோட்டை லயன்ஸ் கழக தலைவரும் ஓய்வுபெற்ற பிரதி நில அளவையாளர் நாயகமுமான லயன் ச. கனகரசன் தெரிவித்தார்.

(3-135)

## சுயதொழில் வாய்ப்புக்கு கடன் வழங்கும் திட்டம்

தென்.கிழக்கு, ஏப். 19

ஐ.நா.அபிவிருத்தித் திட்டத்தின் உதவியுடன் கடன் வழங்கும் திட்டமொன்றை கொடிகாமம் கிராமிய கூட்டுறவு வங்கி நடைமுறைப்படுத்தவிருக்கின்றது. இதன்படி ரூபா 25 ஆயிரம் கடனாக வழங்கப் படுமென்றும் கடன் பெற விரும்புவோர் கூட்டுறவுச்சங்க அங்கத்தவர்களாகவும் 55வயதுக்குட்டபட்டவராகவும் வறுமைக் கோட்டின் கீழ் இருப்பவராகவும் இருத்தல்வேண்டும்.

சுயதொழில் முயற்சிக்காகவே இக்கடன் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளதாகவும் கூட்டுறவுச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

உரிய விண்ணப்பப் படிவங்களை நகர மத்தியில் இயங்கும் சங்கத்தின தொலைபேசி நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(3-122)

### மனை முகாமைத்துவ பயிற்சி

சுழிபுரம், ஏப்.19

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் மனை முகாமைத்துவப் பயிற்சி நெறி முறைசாராக் கல்விப் பிரிவின் கீழ் நடத்தப்பட்டு வருகின்றது.

இலவசமாக நடைபெற்றுவரும் இப்பயிற்சிநெறியில் இணைந்து செயற்பட விரும்புவோர் கல்லூரி நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பயிற்சி நெறியில் கேக் ஐசிங், சிகையலங்காரம், அலங்காரப் பொருள்கள் தயாரித்தல் போன்றவை இடம்பெறுகின்றன.

(3-28)

## புதிய முகாமையாளர் தெரிவு

ஊர்காவற்றுறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய முகாமை யாளராக வேலன் கோகிலன் நிர்வாக சபை உறுப்பினர்களால் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் அடுத்த மாதம் முதலாம் திகதி தமது கடமையைப் பொறுப்பேற்கவுள்ளார் எனத் தெரியவந்தது.

(3-51)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 05 - 02 - 1952 | 20 - 03 - 2006 |



### அமரர் செல்லத்துரை செல்வசோதி

(முன்னாள் முகாமையாளர், Rio Grop of Company Colombo)

தலைவனை இழந்தே நாமும் இத்
தரணியில் எவ்விதம் வாழ்வோம் ஐயா?
வெம்பியே உள்ளம் வெடித்து நெட்டுயிர்த்து
வெறிதுமே உலவும் நடைப்பிணம் ஆனோமே
தாதாவும் நீர் தான் மாயமாய் மறைந்த தென்னே
வேதாவும் எழுதிய கணக்குமே தப்புத்தானோ?

இன்று (19.04.2006) புதன்கிழமை மு.ப 11 மணியளவில் நடைபெறவிருக்கும் வீட்டுக்கிருத்தியத்திலும் தொடர்ந்து நண் பகல் 12 மணியளவில் நடைபெறவிருக்கும் மதியபோசனத் திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். மரணச் சடங்கில் கலந்து கொண்ட அதிபர், ஆசிரியர், மாணவர், உற்றார், உறவினர் நண்பர்கள் யாவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

859/3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (49538)(51-)

மனைவி,
குடும்பத்தினர்.


## யாழ் மண்ணில்!

முழுமையான கணக்கியல் சார்
கணினிக் கற்கை நெறிகள் ஆரம்பமாகின்றது.
பல்கலைக்கழக மாணவர்கள்,
உயர்தொழிநுட்ப மாணவர்கள்,
A/L நிறைவு செய்திருக்கும் மாணவர்கள்,
மற்றும் கணக்கியல் துறையில்
ஆர்வமுள்ளவர்களுக்கு, முதன் முதலாக,

**Diploma in Office Management**

⇨ AccPac
⇨ MYOB
⇨ Tally
⇨ Quick Books Premier

பதிவுகளுக்கு முந்துங்கள்!

பிரிவு I 20.04.2006 காலை 8.30
பிரிவு II 20.04.2006 மாலை 6.30

**CICS Computer Technologies**
# 87, Palaly Road, Thirunelvely, Jaffna.
E-mail: cicsjaffna@gmail.com

புத்தாண்டையும் விடுமுறையினையும் பயனுள்ளதாக்க
CICS உடன் இன்றே இணையுங்கள்!

IIS CITY CAMPUS
Admissions For Academic Year 2006/2007

Date of Closing : 1st May 2006

Date of Selection Exam : 25th June 2006

IIS CITY CAMPUS
# 200, Sivanpannai Road
(Near Vaitheeswara Junction)
Jaffna
Tel : 021 222 8060
Fax : 021 222 6933
Email : iisc@sltnet.lk

BIT
Bachelor of Information Technology
University of Colombo School of Computing

கொழும்பு பல்கலைக்கழகத்தின்
தகவல் தொழில்நுட்பமானி பட்டக்கல்விக்கான
கல்வியாண்டு 2006/2007 இற்குரிய
விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

- விண்ணப்பதாரி 17 வயதிற்கு மேற்பட்டவராகவும் க.பொ.த (உ.த) பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவராகவும் இருத்தல் வேண்டும்.
- இவ்வாண்டு க.பொ.த (உ.த) பரீட்சைக்குத் தோற்றவுள்ளமாணவர்களும் விண்ணப்பிக்கலாம்

BIT பட்டப்படிப்புக்கு வடக்கு, கிழக்கிலேயே அதிகளவு மாணவர்கள் கல்வி கற்பதும், பரீட்சைகளில் சித்தியடைவதும் எமது நிறுவனத்திலேயே என்பது யாவரும் அறிந்ததே.

"Success Through Knowledge"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரைப் புத்தாண்டில் உங்கள் பலன் எப்படி?

## கும்பம்

அவிட்டம் 3, 4, சதயம், பூரட்டாதி 1, 2, 3

**கிருஷ்ண பகவானின் அருள்பார்வை பெற்ற கும்ப ராசி அன்பர்களே!**

புத்தாண்டில் எந்த செயலையும் எளிதாக கையாளும் திறமை பெறுவீர்கள். உங்களுக்கு பக்கத் துணையாக இருந்து செயல்பட நல்லோர்களின் ஆசியும், வழிகாட்டலும் உதவும். பணவரவுகள் தாராளமாகக் கிடைக்கும். பேசும் வார்த்தைகளை நிதானத்துடன் செயற்படுத்துவதால் வேண்டியவர்களின் அன்பும், பாசமும் கிடைக்கும். சமூகத்தில் விரும்பிய அந்தஸ்தை அடைவதற்கு தேவையான நற்செயல்களை மனமுவந்து செய்வீர்கள். இளைய சகோதரர்கள் ஆர்வமான செயற்பாடுகளால் சில சிரமங்களைச் சந்திக்கலாம். உங்களின் வழிகாட்டல் நல்வழிப்படுத்தும். வீடு போன்றவற்றில் தேவைப்படும் அபிவிருத்திப் பணிகளை சரியாகத் திட்டமிட்டு திருப்திகரமாக நிறைவேற்றுவீர்கள். தாயின் அன்பும் ஆலோசனைகளும் உங்கள் வாழ்வின் வளர்ச்சிக்கு தக்க உறுதுணையாக இருக்கும். புத்திரர்கள் நல்லவிதமாக நடந்துகொள்வதால் உங்களின் வெளிவட்டார செயற்பாடுகள் அதிகரிக்கும். குலதெய்வ அருளும், பூர்வ புண்ணிய நற்பலன்களும் தகுந்த துணையாகவே இருந்து வழி நடத்தும். பூர்வ சொத்துகளில் வருமானம் பெறுபவர்கள் அபிவிருத்தி நிலை அடைவார்கள். கடன், பிணி போன்ற தொந்தரவுகள் தானாக விலகிப் போகும். வழக்குத் தொடர்பான சிரமங்கள் இருப்பவர்களுக்கு அனுகூல பலன்கள் உண்டாகும். கணவன், மனைவி குடும்ப ஒற்றுமை சீராக இருக்கும்.

ராகு, கேது, குருபெயர்ச்சிக்குப் பின் தம்பதிகளுக்கு ஆன்மீகம் சார்ந்த அருள்பலம் அதிகரிக்கும். நண்பர்கள் உங்களுக்கு தேவைப்படும் சமயங்களில் தகுந்த உதவிபுரிவார்கள். உடல்நலம் சீராக இருக்கும். தந்தைவழி உறவினர்கள் ஆசானுக்கு உரிய குண நலன்களுடன் உங்களின் ஒவ்வொரு நடவடிக்கையையும் சிறப்பாக்க நல் ஆலோசனை தருவார்கள். சுக வாழ்க்கை வசதிகள் மனநிறைவு பெறும் வகையில் திருப்திகரமாக இருக்கும்.

தொழில், வியாபாரம், உத்தியோகம் சார்ந்தவற்றில் தேவைப்படும் அபிவிருத்தி பெறும் நல் மாற்றங்களை செயற்படுத்தி நன்னிலை பெறுவீர்கள். மூத்த சகோதரர்கள் முன்னேற்றமான வரழ்வு முறையை அமைத்துக்கொண்டு உங்களுக்கும் இயன்ற உதவி புரிவார்கள். வெளியூர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு, வியாபார தொடர்பு நல்ல முறையில் வளர்ச்சி பெறும். சுற்றுலா பயணங்கள் நல்ல அனுபவத்தையும் புதிய நபர்களின் அறிமுகத்தையும் பெற்றுத்தரும். புத்திரப்பேறு விரும்புபவர்களுக்கு அனுகூல பலன் உண்டு.

விவசாயம் சார்ந்த பொருள் தயார் செய்பவர்கள் உற்பத்தி உயர்வும் பொருளாதார வளமும் பெறுவார்கள். பூர்வ சொத்தில் வருமானம் அதிகரிக்கும்.

அரசு பணியாளர்கள் தங்கள் பணியில் இலகுவான மனநிலையில் செயற்பட்டு ஒவ்வொரு காரியங்களிலும் சிறப்பான வெற்றியைப் பெறுவார்கள். மருத்துவப்பணியாளர்கள் தங்கள் திறமைகளை ஒருமுகப்படுத்தி செயற்பட்டு புகழான வாழ்வுநிலை காண்பார்கள். சகோதரர்களால் உறுதுணை உண்டு.

தங்கநகை, துணி வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும் மிக உயர்வான காலகட்டம். விவசாய விளைபொருள்கள், எண்ணெய்வித்து, மாவு வியாபாரம், பழ வியாபாரம், வாசனை திரவியங்கள், இறைச்சி, பழச்சாறு, கட்டட கட்டுமானப் பொருள்கள், சித்த மருந்து, பூச்சிகொல்லி மருந்து, ரசாயன உரங்கள் வியாபாரம் செய்பவர்கள் விற்பனை அதிகரிப்பும், பணவரவும் பெறுவார்கள். மருத்துவ உபகரணங்கள், உடற்பயிற்சி கருவிகள், ஊறுகாய், வியாபாரிகள், தங்கள் தொழிலில் கூடுதல் பணவரவு பெறுவார்கள். வீடு, சந்தோஷ நிகழ்வுகள் உண்டாகும். புத்திரர்களின் யோகபலம் துணைநிற் கும். கணவன் மனைவி ஒற்றுமை சிறப்பாகும்.

**பெண்கள்:** அரசு மற்றும் தனியார் துறையில் பணிபுரியும் பெண்கள் தங்கள் பணிகளில் இருந்த நடைமுறைகளை நன்கு உணர்ந்து எளிதான வகையில் செயற்படுவார்கள். சக பணியாளர்கள் நட்பு நிறைந்த மனோபாவத்துடன் நடந்து கொள்வார்கள். பண உதவி கொடுப்பதிலும், பெறுவதிலும் தகுதிக்கு உட்பட்ட வகையில் செயற்படுவது நல்லது. குடும்ப நிர்வாகம் கவனிக்கும் பெண்கள் கடந்தகால படிப்பினைகளை கவனத்தில்கொண்டு மகிழ்ச்சி நிறைந்த நிலை பெற குடும்ப நிர்வாகம் நடத்துவார்கள். உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சியும் எதிர்கால செயற்திட்டங்களும் உருவாகும். சுயதொழில் மற்றும் கூட்டுத் தொழில் புரியும் பெண்கள் தங்கள் தொழில் சார்ந்தவர்கள் மூலம் புதிய வியாபார பரிவர்த்தனைகளை ஏற்படுத்துவார்கள். தொழில் சார்ந்த இடமாற்றம் அபிவிருத்தி செய்ய நினைப்பவர்கள் ராகு கேது, குரு பெயர்ச்சிக்குப் பின் நடத்துவது நல்லது.

**மாணவர்கள்:** தொல்பொருள் ஆராய்ச்சி, விவசாயத் துறை, கட்டடக்கலை, மருத்துவம், பொறியியல், கணனி, கிராமியக்கலை ஆராய்ச்சி, விளையாட்டு பயிற்சி, மோட்டார் வாகன பராமரிப்பு, சாலை உருவாக்கம் மற்றும் பராமரி ப்பு, மண்வள ஆராய்ச்சி, சமூக சேவை தொடர்பான படிப்பு மாணவர்கள் சிறந்த கவனத்துடன் செயற்படுவதால் மட்டுமே எதிர்கால வாழ்வை வளமாக அமைத்துக் கொள்ளலாம். ஆடைகள் வடிவமைப்பு, கொதிகலன் இயக்குதல், இயந்திரங்களை கையாளுதல், மின்சாரம், ரசாயன படிப்பு மாணவர்கள் கூடுதல் கவனத்துடன் செயற்படுவதால் அசம்பாவிதம் ஏற்படாத நன்னிலை பெறுவார்கள். படிப்புக்கு தேவையான பணவசதி தாராளமாக கிடைக்கும். தந்தை, மகன் ஒற்றுமை கூடுதலாகும். சக மாணவர்கள் உதவிகரமாக இருப்பர்.

**பரிகாரம்:** விநாயகப் பெருமானுக்கு அருகம்புல் மாலை சாத்தி வழிபட தொடங்கும் நற்செயல்கள் வெற்றியைத் தரும்.

## மீனம்

பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி

**தெட்சிணாமூர்த்தியின் அருள் பெற்ற மீனராசி அன்பர்களே!**

புத்தாண்டில் செப்ரெம்பர், ஒக்ரோபரில் நிகழவிருக்கும் ராகு கேது, குரு பெயர்ச்சி வரை மத்திம பலன்கள் இருக்கும். பின்னர் ஒவ்வொரு செயலுக்கும் நற்பலன்கள் உருவாகும். திட்டமிட்ட செயல்களை ஒழுங்குபடுத்த நல்லவர்களின் துணை கிடைக்கும். பணவரவுகள் தேவைக்கேற்ப கிடைத்து கையிருப்பை உயர்த்தும். பேசும் வார்த்தைகளில் நிதானமும் இனிமையும் கலந்து மற்றவர்களை வசீகரிக்கும். தாயின் அன்பும், ஆசியும் கிடைக்கும் வகையில் உங்களின் செயற்பாடுகள் அமையும். புத்திரர்களின் செயற்பாடுகள் மந்தகதியில் இருந்தாலும் படிப்படியாக சிறந்த முறையில் செயற்பட ஆர்வம் காட்டுவார்கள். பூர்வசொத்து மற்றும் பொருள்களை தகுந்த பாதுகாப்புடன் பராமரிப்பதால் நன்மை உண்டு. குலதெய்வ வழிபாடு நிறைவேற்றும் நிலையில் உள்ளவர்கள் தகுந்த முறையில் வழிபடுவதால் பலவித நன்மைகளைப் பெறலாம். கடன், பிணி போன்ற தொந்தரவு உள்ளவர்களுக்கு படிப்படியாக நிலைமை சீராகும். எதிரித் தனம் செய்தவர்களின் செயற்பாடுகள் குறையும். கணவன் மனைவி ஒற்றுமையில் சலசலப்பு இருந்தாலும் அதிகபட்சமாக இராது. உடல்நலம் ஆரோக்கியம் தரும் வகையில் கிரக நல்லருள் உண்டு. தந்தைவழி உறவினர்கள் உங்கள்மீது பாசத்துடனும் பரிவுடனும் நடந்துகொள்வார்கள். சுக வாழ்க்கை வசதிகள் நல்ல வகையில் கிடைக்கும்.

தொழில், உத்தியோகம், வியாபாரம் போன்றவற்றில் நிதானமாக செயற்படுவதால் இழப்புகள் அணுகாத நன்னிலை பெறலாம். மூத்த சகோதரர்கள் தங்களின் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு உங்களின் ஆலோசனை மற்றும் ஒத்துழைப்பு விரும்புவர். வெளியூர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு விருப்பம் உள்ளவர்களுக்கு நல்ல செய்திகள் விரைவில் வரும். திருமண வாய்ப்பு, புத்திரப்பேறு விரும்புபவர்களுக்கு குருப்பெயர்ச்சி அனுகூலம் தரும்.

நிதிநிறுவனங்கள், பங்குச் சந்தை வர்த்தகம், ஆசிரியர் பயிற்சி, அடகுக்கடை நடத்துபவர்கள் தங்கள் தொழிலில் சிறப்பான சேவை வசதிகளை உருவாக்கி நிறுவன வளர்ச்சியும் பொருளாதார உயர்வும் பெறுவார்கள். இளைய சகோதரர்களிடம் மனத் தாங்கல் எதுவும் வேண்டாம். அளவான பொதுப்பணிகள் நன்மை தரும்.

அரசுப் பணியாளர்கள் கண்ணும் கருத்துமாக செயற்படுவதால் மட்டுமே நிர்வாகத்தின் பார்வையில் நற்பெயர் பெறலாம். தனியார் ஊழியர்களுக்கு ஆண்டின் இறுதியில் தான் முன்னேற்றத்தின் கதவு திறக்கும். சக பணியாளர்களின் மனமறிந்து அவர்களை அணுகுவதால் உங்களின் செயலுக்கு நல் ஒத்துழைப்பு கிடைக்கும். வில்லங்க விஷயங்களில் ஒதுங்கி இருத்தல் நல்லது. பணத் தேவைகள் தகுந்த வகை யில் பூர்த்தியாகும். பூர்வ சொத்துக்களை கவனமுடன் பரா மரிக்கவேண்டும். சுற்றுலாப் பயணங்கள் சந்தோஷ மன நிலையை உருவாக்கும்.

**பெண்கள்:** அரசு மற்றும் தனியார் துறை சார்ந்த பணிபுரியும் பெண்கள் தங்கள் செயற்பாடுகளில் கூடுதல் கவனம் செலுத்தி திட்டங்களை தகுந்த முறையில் பூர்த்திசெய்வார்கள். சக பணியாளர்கள் ஆதரவு மனப்பான்மையுடன் நடந்து கொள்வார்கள். குடும்ப நிர்வாகம் கவனிக்கும் பெண்கள் பொருளாதார செலவுகளை சிக்கனமாக நடைமுறைப்படுத்தி எதிர்கால சேமிப்புக்களுக்கு வலிமை சேர்ப்பார்கள். புத்திரர்களின் செயற்பாடுகளை கவனமுடன் கண்டறிந்து நல்வழிப்படுத்துவீர்கள். கூட்டுத்தொழில் மற்றும் சுயதொழில் புரியும் பெண்கள் நடைமுறை வியாபார நுணுக்கங்களை தொடர்ந்து பின்பற்றி தொழிலில் தகுந்த முன்னேற்றம் பெறுவார்கள். வருமானத்தை பிரதானமாக எண்ணாமல் வாடிக்கையாளர் அதிகரிப்பில் கவனம் கொள்வீர்கள். கணவன் மனைவி ஒற்றுமை சிறப்புபெற கூடுதல் கவனம்வேண்டும். ஆடை ஆபரணச் சேர்க்கை அவசியம் உண்டு. திருமண வாய்ப்பு, புத்திரப்பேறு விரும்புபவர்களுக்கு அனுகூல பலன் உண்டு.

**மாணவர்கள்:** ஆசிரியப் பயிற்சி, வங்கியியல், தொழிற் பயிற்சி, சட்டப் படிப்பு, நிதி நிர்வாகம் தொடர்புடைய பயிற்சி, அரசு நிர்வாகம் தொடர்புடைய பயிற்சி, தற்காப்புக்கலை பயிற்சி, நகை வடிவமைப்பு, விவசாயம், தோட்டக்கலை, வரைகலை, நவீன ஆடை வடிவமைப்பு, ஓவியம் வரைதல் பயிற்சி, தகவல் தொழில்நுட்பம், அறிவியல் தொழில் நுட்பம் போன்ற துறைகளில் பயிற்சிபெறும் மாணவர்கள் தங்கள் படிப்பில் ஒருங்கிணைந்த மனதுடன் திறமைகளை வெளிப்படுத்தி சிறந்த தர தேர்ச்சியும் பாராட்டும் பெறுவார்கள். ஆரம்ப, உயர்நிலை மாணவர்களுக்கு இனிவரும் காலம் ஏற்றமாக இருக்கும். தந்தை மகன் உறவுநிலை நட்பு நிறைந்து இருக்கும். படிப்புக்கு தேவையான பணவசதிகள் தேவைக் கேற்ப கிடைக்கும். சுற்றுலா பயணங்களின்போது தகுந்த பாதுகாப்பு முறைகளை பின்பற்றுவது நலம்.

**பரிகாரம்:** நடராஜர் சன்னதியில் வலப்புறம் இருக்கும் பதஞ்சலி மகரிஷியை வழிபடுவதால் ஞானம் தரும் சிந்தனையும், அதிர்ஷ்ட நலவாய்ப்புகளும் உருவாகும்.

*(நன்றி:தினமலர்)(முற்றும்)*

---

# எரிபொருள் விலை உயர்வு குறித்து அரசு வழங்கிய உத்தரவாதம் எங்கே?

## கேள்வி எழுப்புகிறது ஐ.தே.கட்சி

"இலங்கை வரலாற்றில் முதற் தடவையாக மிகப் பெரியளவில் எரிபொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளன. உலகச் சந்தையில் எரிபொருள் விலை உயர்ந்தாலும் இலங்கையில் எரிபொருள்களின் விலை உயராது என அரசு வழங்கிய வாக்குறுதி என்னவாயிற்று."

- இவ்வாறு அரசைக் கண்டித்து அறிக்கையொன்றை விடுத்துள்ளது ஐ.தே.கட்சி.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஒரு லீற்றர் பெற்றோல் 10 சதவீதத்தினாலும், ஒரு லீற்றர் டீசல் 16 சதவீதத்தினாலும், மண்ணெண்ணெய் ஒரு லீற்றர் 26.2 சதவீதத்தினாலும் உயர்த்தப்பட்டுள்ளன. இவ்வாறானதொரு விலை அதிகரிப்பு இதற்கு முன்னர் ஒருபோதும் ஏற்படவில்லை.

அத்துடன், உலகச் சந்தையில் எரிபொருள் விலை அதிகரிக்கப்படுவது உண்மை. ஆனால், "புதிய ஸ்ரீலங்கா"வைப் படைப்போம் என வசனம் பேசிய அரசு இந்த அளவுக்கு எரிபொருள் விலையை அதிகரித்துள்ளமை ஏற்கக்கூடிய ஒன்றல்ல. இந்த எரிபொருள் விலை அதிகரிப்பினால் குறிப்பாக அதிகமாகப் பயன்படுத்தப்படும் டீசல் விலை அதிகரிப்பினால் போக்குவரத்து உட்பட அனைத்துப் பொருள்களின் விலைகளும் மீண்டும் அதிகரிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இவ்விலை அதிகரிப்பிற்குக் காரணம், உலகச் சந்தையில் எரிபொருளின் விலை அதிகரிப்பே என்று கூறி மக்களை ஏமாற்ற அரசு துணிந்துள்ளது. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

எனவே, எரிபொருள் விலை அதிகரிப்பினால் ஏற்படும் ஏனைய பொருள்களினதும், போக்குவரத்துக் கட்டணங்களினதும் விலை அதிகரிப்பைத் தடுப்பதற்கு உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கடந்த எமது ஆட்சியில் 50 சதத்தால் எரிபொருள் விலை உயர்ந்தபோது மக்களை குழப்பி - நாட்டைக் குழப்பிய மக்கள் விடுதலை முன்னணியினர் இன்று எரிபொருள் விலை உட்பட அனைத்து அத்தியாவசியப் பொருள்களினதும் விலை உயர்ந்துள்ளதைப் பார்த்து மௌனம் சாதிப்பது 'மஹிந்த சிந்தனை'யில் மூழ்கி இவர்கள் மௌனிகளாகிவிட்டனரோ எனக் கேட்கத்தோன்றுகிறது.

எனவே, எரிபொருள் விலை உயர்வால் மக்கள் படும்துயரைத் துடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஐக்கிய தேசியக் கட்சி கேட்டுக்கொள்கிறது. - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க)

# ஹெரோயின் வியாபாரி கட்டுநாயக்கவில் கைது

கட்டுநாயக்க விமானநிலையத்தில் ஹெரொயின் போதைப்பொருளை கடத்தி வந்த நபர் ஒருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பெங்களூரிலிருந்து இலங்கை வந்திறங்கிய இந்த நபர் தாம் கொண்டுவந்த படங்களில் சட்டங்களுக்குள் (பிரேம்) ஹெரோயினை மறைத்து வைத்து எடுத்துவந்தபோதே விமான நிலைய சுங்க அதிகாரிகளின் சோதனையின்போது மாட்டிக்கொண்டார்.

இவ்வாறு கடத்திவரப்பட்ட ஹெரொயினின் மதிப்பு 2 கோடி ரூபா எனவும் - அதன் நிறை 5 கிலோ கிராம் எனவும் சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட நபர் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். பொலீஸ் நடத்திய விசாரணைகளின் போது இவர் இதற்கு முன்னரும் இதுபோன்ற கடத்தல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார் எனத் தெரியவந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

# ஜெயலலிதாவுக்கு ம.ம. முன்னணி பாராட்டு

"ஈழத்தமிழர்கள் தொடர்பாகத் தமிழக ஊடகவியலாளர்களுக்கு தாங்கள் வழங்கிய கருத்து இலங்கைத் தமிழர்களை மட்டுமல்ல உலகத் தமிழ் மக்கள் அனைவரையும் பேருவகை அடையச் செய்துள்ளது."

- இவ்வாறு தெரிவித்துக் கடிதம் ஒன்றை மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ. சந்திரசேகரன், தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

அதில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது -

தமிழகம் ஈழத்தமிழர்களை புறக்கணித்து விட்டதோ என்ற ஏக்கத்திலும் விரக்தியிலும் இருக்கும் தமிழ் மக்களுக்கு தங்களின் நிலைப்பாடு புதிய தெம்பை ஏற்படுத்தியுள்ளது.

தாங்கள் ஈழத்தமிழர்கள் பிரச்சினையில் எடுத்துள்ள நிலைப்பாட்டைப் போல இந்திய வம்சாவளி தமிழ் சமூகத்திற்கும் நன்மை பயக்கும் ஸ்திரமான நிலைப்பாட்டை எடுத்து எமது மக்களின் எதிர்கால விமோசனத்திற்கும் அடித்தளம் இடுமாறு கேட்டுக்கொள்கிறேன். - என்றுள்ளது.

ஈழத் தமிழர்கள் மதிப்போடும் மரியாதையோடும் வாழும் சூழ்நிலையை இலங்கை அரசு ஏற்படுத்த வேண்டும் என்று, தமிழக முதல்வர் ஜெயலலிதா நேர்காணல் ஒன்றில் தெரிவித்திருந்தார்.

(க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகனுடன் மோ.சைக்கிளில் சென்ற பெண் ஒருவரிடம் நகைகள் பறிப்பு

கோண்டாவில்,ஏப்.19

மகனுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் ஒருவரின் தங்க நகைகளை முகமூடி அணிந்த திருடர்கள் அபகரித்துச் சென்றனர். திருடர்களின் தாக்குதலில் தாயும், மகனும் காயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை அதிகாலை 5 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு அருகில் இடம் பெற்றுள்ளது. இச் சம்பவத்தில் சாவகச்சேரியைச் சேர்ந்த பெண்ணே தங்க நகைகளை இழந்தவராவார்.

திருநெல்வேலியில் உள்ள உறவினர் வீட்டில் தங்கிவிட்டு சாவகச்சேரியில் உள்ள தமது வீட்டிற்கு சம்பவதினம் சென்றுகொண்டிருந்தனர். அப்போது செம்மணி இந்து மயானப் பகுதியில் பொல்லுகள், சைக்கிள் செயின்கள் சகிதம் நின்ற முகமூடி அணிந்த திருடர்கள் இவர்களை வழிமறித்தனர். இதனிடையே பெண்ணின் மகன் திருடர்களை திருப்பித் தாக்கினார். இதில் திருடன் ஒருவனும் படுகாயமடைந்தான் என்று கூறப்படுகிறது.

ஏனைய திருடர்கள் பெண்ணின் தாலிக் கொடி, சங்கிலி என்பவற்றை அறுத்துச் சென்றுள்ளனர். (ஒ-49)

## முதலாவது, மூன்றாவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்







குடமியன் வரணியைச் சேர்ந்த

**சிவலோகநாதன்- சசிகலா தம்பதியரின்**

**செல்வப் புதல்வன் அஸ்வின்**

தனது முதலாவது பிறந்தநாளை 09.04.2006 ஞாயிற்றுக்கிழமை அன்றும்

**செல்வப் புதல்வி ஆரணி**

இன்று (19.04.2006) புதன்கிழமை ஜேர்மனியில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்கள்.

இவர்களை அன்பு அப்பா சிவலோகநாதன், அம்மா சசிகலா, அம்மப்பா சின்னத்துரை, அம்மம்மா இராஜேஸ்வரி, மாமாமார்களான கரன் (லண்டன்), துளசி (கொழும்பு), சித்தியான நளாயினி மற்றும் பெரியப்பாமார்களான தேவன் குடும்பம், மகான் குடும்பம், சித்தப்பாவான நாதன் (லண்டன்), சசிமாமா குடும்பம் மயூரன் மாமா (ஜேர்மனி) மற்றும் அம்மப்பாமார், அம்மம்மாமார், பூட்டிமார், மாமாமார், பெரியப்பாமார்,சித்தப்பாமார்,சித்திமார், அத்தைமார், அண்ணாமார்,அக்காமார், மச்சான்மார்,மச்சாள்மார் மற்றும் உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் வரணி சிட்டிபுரம் கண்ணகை அம்மன் [illegible] ருள் பெற்று சீரும் சிறப்புமாக பல்கலையும் பெற்று பல்லாண்டுகாலம் வாழ்கவென மனதார வாழ்த்துகின்றார்கள்.

குடமியன், வரணி. M.S. துளசிகரன் (மாமா).

(இ-48993) (38-11-15)

COMPUTER EXPRESS
Institute of Information Technology
இல.15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.
021-222 8250,0777 222422

முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன் ஒருவாரகால முழுநேர

Diploma in Video Mixing

உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப்பெற, சுயதொழில் ஆரம்பிப்பதற்கு மற்றும் தரம்வாய்ந்த சான்றிதழைப் பெற

Free Study Pack & Photos CD

*Course Contents*
- கணனி தொடர்பான அறிமுகம்
- இயக்க அமைப்பு (Windows XP)
- Internet & e-mail
- Adobe Photoshop
- Adobe Premiere
- Cool 3D Studio
- Pinnacle Studio
- VCD Cutter
- Extra practical

Course fee :- 3000/=

நன்மைகள்:-
- பாடநெறியின் இறுதியில் Video Editing தொடர்பான பூரண அறிவைப் பெற்றுக்கொள்வதற்கான உத்தரவாதம்.
- அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படுவதால் கணனி தொடர்பான முன்னறிவு அவசியமில்லை.
- தராதரமும் நீண்ட அனுபவமும் கொண்ட விரிவுரையாளர்களால் கற்பிக்கப்படுகின்றது.
- 100% செய்முறைப் பயிற்சிகளுடனான விரிவுரைகளிற்கு உத்தரவாதம்.

வகுப்புக்கள் ஆரம்பம்:-
*24/04/2006 :- 08.30*

# மரண அறிவித்தல்



## இராமலிங்கம் சகீலன்

*(மீசாலை, புத்தூர்ச் சந்தி, கபிலன் எலற்றிக்கல் கடை உரிமையாளர்)*

மீசாலை வடக்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் சகீலன் அவர்கள் 17.04.2006 திங்கட்கிழமை அன்று அகால மரணமானார்.

அன்னார் இராமலிங்கம்- சரஸ்வதி தம்பதியரின் அன்புப் புதல்வனும் பாமினி (தாதி உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை) அவர்களின் அன்புக் கணவரும் கபிஷன் அவர்களின் அன்புத் தந்தையும் ராகுலன் (செல்வா- லண்டன்), றஜனி (சூச்சா), அகிலன் (இன்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும் பொ.இராசரத்தினம் (இளைப்பாறிய நிதி உதவியாளர், பிரதேச செயலகம், தென்மராட்சி), கனகம்மா அவர்களின் அன்பு மருமகனும் சுரேஸ் (லண்டன்), காமினி (லண்டன்), ரமேஸ் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.04.2006) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
**ச.பாமினி** *(மனைவி),*
*(தாதி உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை).*

துவாரகை,
மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

(49583) (39-11-15)

COMPUTER EXPRESS
Institute of Information Technology
No 15, Sirambiyadi Lane,Jaffna.
Tel:- 021-2228250, 0777-222422

மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் ~ 2006

80% OFF

| | | |
|---|---|---|
| Diploma in Microsoft Office 750/= Duration :- 3 Months | Diploma in Desktop Publishing ~~6000~~/= 1200/= Duration :- 4 Months | Diploma in Web page Designing ~~7000~~/= 1400/= Duration :- 4 Months |
| Diploma in Graphic Designing ~~7000~~/= 1400/= Duration :- 4 Months | Diploma in Hardware Engineering ~~6000~~/= 1200/= Duration :- 3 Months | Accounting Package ~~7000~~/= 1400/= Duration :- 3 Months |
| Diploma in Computer Science ~~7000~~/= 1400/= Duration :- 4 Months | Honors Diploma in Computer Science ~~9000~~/= 1800/= Duration :- 5Months | Diploma in Auto CAD ~~6000~~/= 1200/= Duration :- 3 Months |

Advances Courses

50% OFF

Diploma in Video Editing ~~6000~~ 3000
Diploma in Multimedia ~~5000~~ 2500

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும். சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ், வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி.

April 30ம் திகதிக்கு முன்னர் பதிவு செய்துகொள்ளவும்.

வகுப்புகள் ஆரம்பம்
Batch I - 21/04/2006
Batch II - 22/04/2006
Batch III - 23/04/2006
Batch IV - 28/04/2006

# ஆரம்ப கணித செயலமர்வு

தென்மராட்சிப் பூாடசாலைகளில் ஆரம்பக் கல்விப் பிரிவில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கான ஆரம்ப கணித செயலமர்வு எதிர்வரும் வெள்ளி மற்றும் சனி ஆகிய இரு தினங்களும் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பங்குபற்றும் ஆசிரியர்கள் உபகரண ஆக்கங்களுக்கான பொருள்களை எடுத்து வரும்படியும்-

செயலமர்வு காலை 9 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை நடைபெறுமெனவும்-

ஆரம்பக் கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் தம்பையா ஸ்ரீஸ்கந்தராஜா அறிவித்துள்ளார். (ஒ)

Swan
சுவான் டீசல் என்ஜின்

- நம்பிக்கையில் தலைசிறந்தது
- 4 ஸ்ரோக் என்ஜின்
- தற்போது 25 H/p சக்திவரை கிடைக்கிறது
- உதிரிப்பாகங்கள் உண்டு



செண்ட் அந்தனிஸ் ஹாட்வெயார் (பிரைவேட்) லிமிட்டெட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோவணம் கட்டி மேளதாளத்துடன் மனுத் தாக்கல் செய்ய வந்த விவசாயி

சென்னை,ஏப்.19

மொடக்குறிச்சி தொகுதியில் போட்டியிடுவதற்காக கோவணம் கட்டி மேளதாளத்துடன் வேட்புமனுத்தாக்கல் செய்யவந்த விவசாயி கைது செய்யப்பட்டதால் ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திடீர் பரபரப்பு ஏற்பட்டது.

ஈரோடு மாவட்டம் கொளாநல்லி அருகே குட்டப்பாளையத்தைச் சேர்ந்தவர் விவசாயி கோவணம் தங்கவேலு (47). கடந்த சட்டப் பேரவைத் தேர்தலில் மொடக்குறிச்சி தொகுதியில் போட்டியிட்ட இவர், சுமார் 2 ஆயிரம் வாக்குகள் பெற்றார்.

இந்நிலையில் இந்த தேர்தலில் போட்டியிடுவதற்காக தமிழக விவசாயிகள் சங்க அலுவலகத்தில் இருந்து கோவணத்துடன் மாட்டு வண்டியில் ஊர்வலமாக வந்தார். மேளதாளங்கள் முழங்க 100 இற்கும் மேற்பட்ட விவசாயிகளுடன் அவர் ஆட்சியர் அலுவலகம் வந்தபோது கூட்டம் அலை மோதியது.

ஆட்சியர் அலுவலகத்துக்குள் செல்ல முயன்ற அவரை பொலீஸார் தடுத்து நிறுத்தினர். கோவணத்தை அவிழ்த்துவிட்டு வேட்டியுடன் மனுத்தாக்கல் செய்யும்படி பொலீஸார் வலியுறுத்தினர். ஆனால், மறுப்புத் தெரிவித்த கோவணம் தங்கவேல், தோட்டத்தில் விவசாயிகள் வேலை செய்யும் போது அணியும் உடையில்தான் வந்திருப்பதாகவும்- எனவே, வேட்டி அணிந்து மனுத்தாக்கல் செய்யமுடியாது என்றும்- அவர் தெரிவித்தார். சுமார் ஒரு மணி நேர போராட்டத்துக்குப்பின் அவரைப் பொலீஸார் கைது செய்தனர். (ஐ-202)


பிரசாரத்தில் விவசாயி...

## சோனியாவின் சொத்து விவரம்

'எனக்குச் சொந்தக் கார் இல்லை; கையில் உள்ள ரொக்கம் 20 ஆயிரம் ரூபா மட்டுமே' என்று காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, வேட்புமனுவுடன் தாக்கல் செய்துள்ள உறுதி மொழிப் பத்திரத்தில் கூறியுள்ளார்.

உத்தரப் பிரதேச மாநிலத்தில் ராய் பரேலி மக்களவைத் தொகுதி இடைத் தேர்தலில் போட்டியிடும் சோனியா காந்தி, கடந்த திங்கட்கிழமை தனது வேட்புமனுவைத் தாக்கல் செய்தார். அதனுடன் தனது சொத்து பற்றிய விவரங்களையும் உறுதி மொழிப் பத்திரத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார். அதன் விவரம் வருமாறு:-

இத்தாலியில் என் முன்னோர்கள் வாழ்ந்த வீடு எனக்குள்ளது. அதன் மதிப்பு 13 லட்சம் ரூபா. நகைகளின் மதிப்பு ரூ 21.66 லட்சம். 2,518 கிராம் தங்க நகைகள் உள்ளன. இவற்றின் மதிப்பு ரூ. 10.49 லட்சம், 88 கிலோ வெள்ளி உள்ளது. இதன் மதிப்பு ரூ. 11.17 லட்சம் (இந்திய ரூபாய்கள்) என்று - சோனியா தனது சொத்து விவரத்தில் தெரிவித்துள்ளார். (ஐ-202)

# தி.மு.கவின் குடும்ப அரசியலால் பலருக்கு பாதிப்பு என்கிறார் சரத்குமார்



'தி.மு.கவில் நடக்கும் குடும்ப அரசியலால் கட்சியில் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். அதனால்தான் அ.தி.மு.கவில் சேர்ந்தேன்.' இவ்வாறு நடிகர் சரத்குமார் கூறியுள்ளார்.

தேனி மாவட்டத்தில் அ.தி.மு.கவில்சேர்ந்த பின்னர் நடிகர் சரத்குமார் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தார்.

அவர் கூறியதாவது:-

தேனியில் முதல்வர் ஜெயலலிதாவின் முன்னிலையில் நான் அ.தி.மு.கவில் இணைந்துள்ளேன். தமிழகத்தில் நல்லாட்சி நடக்க வேண்டும் என்ற தொலைநோக்குப் பார்வையுடன் நான் இணைந்துள்ளேன்,

தி.மு.கவில் குடும்பத்தினரின் சிபாரிசு, தலையீடு அதிகரித்துள்ளது. அங்கு மூத்த தலைவர்கள், உறுப்பினர்கள், முன்னோடிகள் பலர் உள்ளனர். அவர்களுக்கு மதிப்பில்லை. புதிதாகக் கட்சியில் சேர்ந்தவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. தி.மு.கவில் குடும்ப அரசியல் நடக்கிறது. இதனால் கட்சியில் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். விரைவில் அவர்களும் நல்ல முடிவு எடுப்பர்.

என்னைப் போல் பலரும் தி.மு.கவில் மனக்குறையுடன் உள்ளனர். நான் வெளியே சொல்லிவிட்டேன். விரைவில் அவர்களும் சொல்வார்கள். நான் இப்போது எடுத்துள்ள இந்த நல்ல முடிவு என் வாழ்வின் புதிய முடிவு. நிரந்தரமான முடிவும் இதுதான். நிதானமாக சிந்தித்து, நண்பர்களுடன் ஆலோசித்த பின்னரே இந்த முடிவை எடுத்துள்ளேன்.

என் ரசிகர்கள், நண்பர்கள், நலன்விரும்பிகளிடம் இது பற்றிக் கருத்துக் கேட்டு ஆய்வு செய்தேன். அவர்கள் அனைவருமே நான் இருக்க வேண்டிய இடம் அ.தி.மு.க., தான் என்று தெரிவித்தனர். இப்போது தான் சரியான இடத்திற்கு வந்துள்ளேன். - என்றார் சரத்குமார். (ஐ-202)




# ஆசிரியர்களுக்கும் 'செல்போன்' தடை: அண்ணா பல்கலைக்கழகத்தில்

சென்னை,ஏப்.19

வகுப்பறைகளிலும் கூட்டங்களிலும் ஆசிரியர்கள் கைத்தொலைபேசிகளைப் பயன்படுத்துவதைத் தடைசெய்யத் திட்டமிடப்பட்டுள்ளது என்று சென்னை அண்ணா பல்கலைக்கழகத் துணைவேந்தர் டி.விஸ்வநாதன் தெரிவித்துள்ளார்.

வளாகத்தில் மாணவர்கள் கைத்தொலைபேசிகளைப் பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதை அடுத்து மாணவர்களின் படிப்புத் திறன் 25 சதவீதம் அளவுக்கு அதிகரித்துள்ளது என்றார் அவர்.

மாணவர்கள் வாகனங்களில் செல்லும் போது தங்களது பாதுகாப்புக் கருதி ஹெல்மெட் அணிந்து செல்ல வேண்டும்.

சில நாள்களுக்கு முன் கடலில் குளிக்கச் சென்ற அண்ணா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஒரு மாணவர் நீரில் மூழ்கி இறந்தார். இது போன்ற அசம்பாவிதங்களைத் தடுக்கும் வகையில் நீச்சல் தெரியாமல் மாணவர்கள் கடலில் குளிக்கச் செல்லக் கூடாது. மாணவர்களிடம் சுயகட்டுப்பாட்டை வளர்க்க வேண்டும்.

மாணவர்களை வளர்ப்பதில் பெற்றோருக்கும் முக்கிய பங்கு உண்டு. எனவே, ஒவ்வொரு ஆண்டும் மாணவர்களைப் பெற்றோர்களுடன் அழைத்துக் கூட்டம் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. அக்கூட்டத்தில் மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் ஆலோசனைகள் வழங்கப்படும் என்றார் விஸ்வநாதன். (ஐ-202)

# சொத்து விவரங்களைச் சமர்ப்பித்து மனுத் தாக்கல் செய்தார் கருணாநிதி

சென்னை,ஏப்.19

தி.மு.க. தலைவர் கருணாநிதி நேற்று முன்தினம் சேப்பாக்கம் தொகுதியில் வேட்பு மனுத்தாக்கல் செய்தார். எமகண்டம் முடிந்த பின்னர் மனுத் தாக்கல் செய்தார். 22 கோடியே 33 லட்சம் இந்திய ரூபாவுக்கு சொத்து இருப்பதாகக் கணக்குக் காட்டியுள்ளார்.

தி.மு.க., தலைவர் கருணாநிதி கடந்த 10 தேர்தல்களில் போட்டியிட்டு தொடர்ந்து வெற்றி பெற்றுள்ளார். சேப்பாக்கம் தொகுதியில் இரண்டு முறை போட்டியிட்டு வெற்றிபெற்றுள்ளார். அவர் சேப்பாக்கம் தொகுதியில் போட்டியிடுவது மூன்றாவது முறை. தற்போது 11ஆவது முறையாக அவர் தேர்தலை சந்திக்கிறார். சேப்பாக்கம் நில நிர்வாகத்துறை உதவி ஆணையாளர் ஜோசப் கிறிஸ்துதாசனிடம் வேட்பு மனுவை தாக்கல் செய்தார்.

மத்திய அமைச்சர்கள் டி.ஆர்.பாலு, தயாநிதிமாறன், தி.மு.க., பொருளாளர் ஆற்காடு வீராசாமி, ஸ்டாலின் ஆகியோர் உடன் இருந்தனர். வேட்புமனுத் தாக்கல் செய்தபோது தி.மு.கவினர் பலர் கோஷம் எழுப்பினர். கருணாநிதி முற்பகல் 11 மணிக்கு வேட்புமனுத் தாக்கல் செய்வதாக இருந்தது. ஆனால், 12.10 மணிக்குத்தான் வேட்புமனு தாக்கல் செய்தார். 10.30 முதல் 12 மணிவரை எமகண்டம் என்பதால் அந்த நேரத்தைத் தவிர்த்து 12 மணிக்குப் பின்னர் மனுத் தாக்கல் செய்தார். சேப்பாக்கம் தொகுதியில் இதுவரை தி.மு.க., தலைவர் கருணாநிதியை எதிர்த்து ஆறு பேர் மனுத் தாக்கல் செய்துள்ளனர்.

# தி.மு.கவிலிருந்து விலகிய சரத்., ராதிகா வளமோடு வாழ கருணாநிதி வாழ்த்து

சென்னை,ஏப்.19

தி.மு.கவிலிருந்து விலகிய சரத்குமார், ராதிகா இருவரும் வளமோடு வாழ வாழ்த்துவதாக கருணாநிதி கூறியிருக்கிறார்.

சரத்குமார் ராதிகா இருவரும் தி.மு.கவிலிருந்து விலகியது குறித்து கருணாநிதி செய்தியாளர்களுக்கு கருத்து வெளியிட்டார்.

கடந்த காலத்தை அசை போட்டு, நிகழ்காலத்தை நிழற்படமாக்கி, வருங்காலத்தில் வளமோடு வாழ்க என அவரை வாழ்த்துகிறேன்.

அவரது குடும்பமே அ.தி.மு.கவில் இணைந்ததாக கூறுகிறீர்கள். அது உண்மையாக இருந்தால் இந்த வாழ்த்து இருவருக்கும் உரியது - என்றார் கருணாநிதி.

கட்சியின் அடிப்படை உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகுவதாக சரத்குமார் திங்கட்கிழமை கடிதம் அனுப்பியுள்ளார்.

அதற்கான காரணம் பற்றித் தெரியவில்லை. நீங்கள் காரணம் கேட்கிறீர்கள். பக்தி போன்றவை மீது எனக்கு நம்பிக்கை இல்லை. ஆண்டவனுக்குத்தான் தெரியும் - என்றார் கருணாநிதி. (ஐ-202)

# தீர்ப்பை மாற்றிக்கொண்ட 'நாட்டாமை'



'சாகும் வரை தி.மு.கவில் இருப்பேன்' என்று திருச்சி தி.மு.க. மாநாட்டில் முழக்கமிட்ட திரைப்பட நடிகர் சரத்குமார். தி.மு.கவிலிருந்து விலகிய சூட்டோடு ஒரு வழியாக அ.தி.முகவில் தஞ்சமடைந்துவிட்டார்.

'நாட்டாமை' திரைப்படத்துக்கு பின்னர், ஏற்பட்ட பிணக்குக் காரணமாக அ.தி.மு.கவிலிருந்து தனது விசுவாசத்தைத் தி.மு.கவுக்கு மாற்றிக்கொண்ட சரத்குமார், தற்போது மீண்டும் தனது விசுவாசத்தை அ.தி.மு.க. பக்கம் திருப்பியுள்ளார்.

கட்சி மாறி வருகிறவர்கள், முன்னாள் தலைமைக்கு எதிராகப் புகார் மழையைப் பொழிந்து வருகின்றனர். அந்த வரிசையில் தி.மு.க. முகாமிலிருந்து பிரிந்து வந்த இந்த 'ஆக்ஷன்' நடிகர், தி.மு.கவுக்கு எதிராக 'அதிரடி ஆக்ஷனுக்கு'த் தயாராகிவிட்டார்.

தென்பாண்டிச் சீமையிலிருந்து தனது போர்ப் பரணியைத் தொடங்குகிறார். நேற்று வரை 'அப்பா' என்று அழைத்தவர் மீதும் தயங்காமல் 'பாணத்தை' ஏவும் அர்ஜுனனாக இருப்பார் என்று தெரிகிறது.

சரத்குமாருடன் அவரது மனைவி ராதிகாவும் அ.தி.மு.க. பக்கம் சாய்ந்துவிட்டார்.

தேனி மாவட்டத்தில் பிரசாரத்தில் இருந்த முதல்வர் ஜெயலலிதாவை தம்பதி சகிதமாக சந்தித்து சரத்குமாரும் ராதிகாவும் அ.தி.மு.கவில் ஐக்கியமாகிவிட்டனர்.

சரத்குமார் விலகி அ.தி.மு.கவில் சேர்ந்திருப்பது தி.மு.க.வை பாதிக்காது என்று அக் கட்சி வட்டாரங்கள் கூறினாலும் தென் மாவட்டங்களில் தி.மு.கவுக்கு ஓரளவாவது பாதிப்பை ஏற்படுத்தும் என்பது அரசியல் நோக்கர்களின் கணிப்பு.

மத்திய அமைச்சரவையில் தி.மு.க.வுக்கு 7 அமைச்சர்கள் இருந்தாலும் அதில் நாடார் சமூகத்தைச் சேர்ந்த ஒருவருக்குக் கூட அமைச்சர் பதவி தரப்படவில்லை என்ற வருத்தம் இருந்தது. குறிப்பாக சரத்குமாருக்கு அமைச்சர் பதவி வேண்டும் என்று ரசிகர்கள் கோரி வந்தனர்.

தி.மு.க.வில் தாம் புறக்கணிக்கப்படுவதாக எண்ணிய சரத்குமார். கடந்த ஓராண்டாக கட்சி நடவடிக்கைகளிலிருந்து விலகியே இருந்தார். தி.மு.கவின் இரண்டு மாநாடுகளில் அவர் பங்கேற்கவில்லை.

அவரது எண்ண ஓட்டத்தை அறிந்த தி.மு.க தலைமை அவரைச் சமாதானப்படுத்தி திருச்சி மாநாட்டுக்கு அழைத்து வந்தது. அப்போது சாகும்வரை தி.மு.கவில் இருக்கப் போவதாகவும் தமது பூத உடல் மீது தி.மு.க. கொடி தான் போர்த்தப்பட்டிருக்கும் என்றெல்லாம் முழக்கமிட்டார்.

இந்த நிலையில் சட்டப்பேரவைத் தேர்தல் அறிவிக்கப்பட்டு தி.மு.க வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்ட பின்னர் சரத்குமார் ரசிகர் மன்றத்தினர் திடீரென போர்க்கொடி தூக்கினர்.'

சரத்குமார் ஆதரவாளர்களுக்கு ஒரு இடம் கூட கொடுக்கவில்லை என்று அவர்கள் அதிருப்தி தெரிவித்தனர். தி.மு.கவுக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்யமாட்டோம். சரத்குமாரும் போகக்கூடாது என்று ரசிகர் மன்றத்தினர் தீர்மானம் [illegible]னர். இந்த தீர்மானத்தை தி.மு.க. தலைமை பெரிய அளவில் கண்டு கொள்ளவே இல்லை.



ஏற்கனவே அமைச்சர் பதவி கொடுக்கவில்லை என்ற வருத்தம். நடிகர் விஜயை அழைத்துச் சென்று டில்லியில் தபால்தலை வெளியிட்டது என எல்லாம் சேர்ந்துகொண்டது.

இந்த நிலையில் சரத்குமார் தி.மு.கவிலிருந்து வெளியேறினார். அவரை மீண்டும் தி.மு.கவில் சேர்க்க முயற்சி நடைபெறுவதாக கூறப்பட்டது.

ஆனால், மற்றொருபுறம் சரத்குமாரால் ஏற்பட்டிருக்கும் வெற்றிடத்தை சரி செய்ய நடிகர் பாக்யராஜை களம் இறக் கியது தி.மு.க.

இதனால் கோபடைந்த சரத்குமார் அ.தி.மு கவில் சேரும் முடிவை உறுதிப்படுத்திவிட்டார். தி.மு.கவுக்கு ஆதரவான முக்கியப் பிரமுகர்களை ஒவ்வொருவராக அ.தி.மு.கவுக்கு இழுப்பதில் ஜெயலலிதா வெற்றி கண்டுள்ளார் என்றே கூறவேண்டும்.

(நன்றி: தினமணி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் மகிழ்வகம் இன்று திறப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.19

'சீடா' நிறுவனத்தின் நிதி உதவியுடன் அமைக்கப்படும் சிறுவர் மகிழ்வகம் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரி வீதி, ஆசீர்வாதம் ஒழுங்கையில் உள்ள கட்டடத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

விசேட உதவிகள் தேவைப்படும் சிறுவர்களுக்கு உதவும் நோக்கில் அமைக்கப்படும் சிறுவர் வாழ்வகத்தில் சிறுவர் சம்பந்தப்பட்ட நிகழ்வுகளை நடத்தவும் இடமளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இன்றைய திறப்பு விழாவில் யாழ். பிரதேச செயலர், சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள், சமூக சேவை உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கௌரவவிருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள்.

(ஒ)

## மரண அறிவித்தல்

### செல்வி சின்னத்தம்பி தேவமணி(B. Sc.)



(முன்னாள் அதிபர், நாவலப்பிட்டி கதிரேசன் மகாவித்தியாலயம்)

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் நாவலப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சின்னத்தம்பி தேவமணி அவர்கள் நேற்று (18-04-2006) செவ்வாய்க்கிழமை மட்டுவிலில் காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் சி.வீரகத்தி (ஓய்வுபெற்ற முன்னாள் அதிபர்), காலஞ்சென்ற சி. மகாராஜா (முன்னாள் கணித ஆசிரியர்), காலஞ்சென்ற சி.தங்கராசா (வைத்தியர்), திருமதி செபஸ்ரியா நேசம்மா (ஓய்வுபெற்ற அதிபர்), திருமதி நாகராஜா இன்பராணி (ஓய்வுபெற்ற ஆசிரியை), செல்வி சி.ராசமணி (ஓய்வுபெற்ற அதிபர்), திருமதி சுதாகர் யசிந்தா (ஆசிரியை) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19-04-2006) புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காந்தாளம்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பருத்தித்துறை வீதி,*
*மட்டுவில் தெற்கு,*
*சாவகச்சேரி.*

**தகவல்:**
**ம.மகாசிவம் (மகன்).**

(49397)(39-11-16)

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் முன்னாள்
பொதுமுகாமையாளரின் தாய்
திருமதி
**கந்தையா சிங்காரம்**
அவர்கள் இறைபதம் அடைந்த
செய்திகேட்டு ஆழ்ந்த
அதிர்ச்சியும் வேதனையும்
அடைகின்றோம். அவரின்
பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.

**அங்கத்தவர்கள்,**
**பணிப்பாளர்கள்,**
**பணியாளர்கள்,**
**வடமராட்சி கிழக்கு**
**ப.தெ.வ.அ.கூ.சங்கம்,**
**மருதங்கேணி.**

(சி.48997) (39-11-16)


## மாபெரும் இலவச கருத்தரங்கு

வடபிராந்திய சத்திய சாயி சேவா நிறுவனங்களின் இளைஞர் சபையின் ஏற்பாட்டில்
பிரபல ஆசிரியர்களால் க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு

இடம்: பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையம்
166/5 சேர் பொன் இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
நேரம்: காலை 9.00 மணி முதல்

19.04.2006 (இன்று) ஆங்கிலம் திரு.S.ஸ்ரீகுமார் திரு.S.சூரியகுமார்
20.04.2006 (நாளை) இணைந்தகணிதம்
21.04.2006 (வெள்ளி) உயிரியல்
22.04.2006 (சனி) புவியியல்
23.04.2006 (ஞாயிறு) வணிகக்கல்வி

பங்கு பற்றும் அனைத்து மாணவர்களுக்கும் மாதிரி வினாத்தாள், விடைகள்,
முக்கிய பாடக்குறிப்புகள் (hand out) என்பன வழங்கப்படும்.
அனைத்தும் இலவசம்

நடைபெற்று முடிந்த பாடங்களின் (physics, chemistry, ecconomics, accounts) hand outs பெற்றுக்கொள்ளலாம்.


### வடிகால்களை திருத்தியமைக்க கோரிக்கை

குருநகர்,ஏப்.19

குருநகர் பகுதியில் உள்ள வடிகால்களைத் திருத்தியமைக்கும் படி அப்பகுதி மக்கள் கோரி வருகின்றனர். குருநகர்ப் பகுதியில் வடிகால்களில் கழிவுநீர் தேங்கியுள்ளதால், துர்நாற்றம் எழுவதாகப் பொதுமக்கள் தெரிவித்தனர்.

குருநகர் அடம்பன் வீதி, குருநகர் புதுமை மாதா மேற்கு வீதி, ஆகியவற்றில் வீதிகளை ஊடறுத்து வடிகால்கள் அமைந்துள்ளன. இவை சேதமடைந்த நிலையில் உள்ளன. இச் சேதம் பல மாதங்களாக உள்ளபோதிலும் அவற்றைத் திருத்தியமைக்க இதுவரை நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

இதனால், இவ் வீதிகளினூடாகப் பயணிப்போர் மிகுந்த அசௌகரியங்களை அனுபவித்துவருகின்றனர். அத்துடன் வடிகால்களை நாளாந்தம் சுத்திகரிப்புச் செய்யும் யாழ். மாநகரசபையின் பணியாளர்களும் சரிவரத் தமது பணிகளை நிறைவேற்ற முடியாமல் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

எனவே, குருநகரில் சேதமடைந்த நிலையில் காணப்படும் அனைத்து வடிகால்களையும் யாழ். மாநகரசபை செப்பனிட உடன் நடவக்கை மேற்கொள்ள வேண்டும் என பொதுமக்கள் கோருகின்றனர்.

(ஒ-51)


## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6599230 முதல் 6603274 வரை. சீட்டிழுப்பு இல. 228 திகதி 17-04-2006

வெற்றி எண்கள்

1 1 3 8 4 7 சுப்பர் எண் 06

ஜக்பொட் பரிசு ரூ. 12,288,275/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | 0 | 12,288,275/= | - |
| இடது பக்கமிருந்து முதல் 6 எண்கள் | 0 | 1,000,000/= | - |
| இடது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 02 | 50,000/= | 100,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 27 | 5,000/= | 135,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 320 | 500/= | 160,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 3125 | 50/= | 156,250/= |
| இடது பக்கமிருந்து முதல் 1 எண் | 30980 | 10/= | 309,800/= |
| வலது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 07 | 5,000/= | 35,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 27 | 1,000/= | 27,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 312 | 100/= | 31,200/= |
| வலது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 3103 | 20/= | 62,060/= |
| | | மொத்தம் ரூ. | 1,016,310/= |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/= | 602,600/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 1,618,910/-

ரூ. 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கேகாலை | 6599862-0-84 |
| குருணாகல் | 6601199-2-81 |
| நுவரேலியா | 6602206-7-96 |
| காலி | 6601409-2-88 |
| கம்பஹா | 6600377-0-69 |
| இரத்தினபுரி | 6599553-8-71 |
| மட்டக்களப்பு | 6602723-2-45 |
| அநுராதபுரம் | 6600946-4-86 |

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. 12,375,200/-

தொடர் இல. 7563992 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2006 ஏப்ரல் 20 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.



LONDON ENGLISH COLLEGE

English Courses (Classes start on 22.04.06)

| Course | Duration |
|---|---|
| Diploma in English | Duration: 3 Months |
| IELTS | Duration: 3 Months |
| Kids (Age 6-12) | Duration: Annual |
| Spoken English | Duration: 3 Months |
| Literature (10,11,12,13) | Duration: Annual |
| Linguistics G.A.Q, Part I B.A | |

TO LEARN ENGLISH THE BEST WAY IS TO SIGN UP WITH US.

No.105, Arasady Road, Jaffna. T.P: 222 5889


## மரண அறிவித்தல்கள்



### கந்தையா நாகலிங்கம்

புளியம்பொக்கணை, கலவெட்டித்திடலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டு கிளிநொச்சி, இரத்தினபுரத்தில் வசித்து வந்தவருமான கந்தையா நாகலிங்கம் அவர்கள் 16.04.2006 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - சிதம்பரம் ஆகியோரின் அன்பு மகனும் அன்னம்மாவின் அன்புக் கணவரும் நாகேஸ்வரன் (தருமு, கண்டாவளை), சந்திரகுமார் (பரந்தன் தபாலக ஊழியர்), முரசுமோட்டை ரவீந்திரகுமார் (பிரான்ஸ்), நந்தினிதேவி (புளியம்பொக்கணை), நந்தகுமார் (லண்டன்), உதயகுமார் (கனடா), லிங்ககுமார் (லண்டன்), சூரியகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசத் தந்தையும் பெரியமயில்வாகனம் (கலவெட்டித்திடல்), திருமதி சின்னத்தங்கம் (கலவெட்டித்திடல்), வைரமுத்து (இளைப்பாறிய பிரதிக்கல்விப் பணிப்பாளர், புளியம்பொக்கணை) ஆகியோரின் அன்புச் சகோதரரும் திருமதி நாகம்மா, திருமதி மகேஸ்வரி, திருமதி பகவதி, கதிர்காமநாதன், தனலட்சுமி, தர்மலிங்கம் (காந்தி) ஆகியோரின் மைத்துனரும் கமலாதேவி (கண்டாவளை), தயாநிதி (முரசுமோட்டை), சுபாஜினி (பிரான்ஸ்), நந்தகுமார் (நாகேந்திரா வித்தியாலய அதிபர்), சுதர்சினி (லண்டன்), துஸ்யந்தி (கனடா), மாலதி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்ற சுப்பையா-இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் வினித்தா, வினோத், விசிந்தன், விஜிதா, விஜிகலா, நிசாந், நிலானி, நிதுசா, சங்கீர்த்தன், சாருசன், சீதுர்சன், சங்கவி, சௌகார்த்திகா, சௌமித்திரா, கிதுசன், கேதுசா, கேசனா, லக்ஸ்சனா ஆகியோரின் பேரனும் சாரங்கனின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் புளியம்பொக்கணை நாகபூசனி இல்லத்தில் நடைபெறும். இது தொடர்பான விவரம் பின்பு அறியத்தரப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

முரசுமோட்டை.

*தகவல்:*
*நா.சந்திரகுமார் (சந்திரன் -மகன்)*

(சி.48996) (39-11-16)

### திருமதி பத்மலோஜினி நடராசா



கச்சார்வெளி, பளையைச் சேர்ந்த திருமதி பத்மலோஜினி நடராசா அவர்கள் 17.04.2006 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - பராசக்தி தம்பதியரின் அன்புமகளும் அமரர்களான செல்லையா- சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் நடராசா (களஞ்சியப் பொறுப்பாளர், பச்சிலைப்பள்ளி MPCS) அவர்களின் பாசமிகு மனைவியும் திவாகரன் (எவரெஸ் கூ பலஸ், நவீனசந்தை, சாவகச்சேரி, ), கிருஜா, நிறஜா, நமணாகரன் (இத்தாலி), பிரகலாதன் (DSI பணியாளர், யாழ்ப்பாணம்), திலீபன், அருண் (மாணவன், செங்குந்த இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயும் ஜெயந்தன் (ஜெயமங்களாஸ் பான்சி ஹவுஸ், சுன்னாகம்), றஜீந்திரன் (சுகாதாரத் திணைக்களப் பணியாளர், கிளிநொச்சி), தர்சிகா (வர்த்தக சம்மேளனம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியும் சிவசுப்பிரமணியம் (கட்டடத் திணைக்கள நிறைவேற்றுப் பொறியியலாளர், கிளிநொச்சி), சிவபாலன், சிவகாந்தன் (கனடா), சிவநேசன் (சுவிஸ்), சிவகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் நாகமுத்து (கிளிநொச்சி), தியாகராஜா (தபால் அதிபர், கொட்டாஞ்சேனை), தனபாலசிங்கம் (கனடா), சிவராசா, நந்தகுமாரி (ஆசிரியை, இந்து மகளிர் கல்லூரி), லீலா, உமா (கனடா), சுஜி (சுவிஸ்), ஈஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் துரைசிங்கம் (கிளிநொச்சி), பிறேமகுமாரி (இலங்கை வங்கி கொழும்பு), பவானி (கனடா), அமரர் லலிதா, விஜயலட்சுமி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.04.2006) வியாழக்கிழமை பளையிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10 மணிக்கு தம்பலகாமம் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*நி.முகவரி:* கச்சார்வெளி, பளை.
*த.முகவரி:* நெட்டிலிப்பாய்,
கோண்டாவில்.

*தகவல்:*
*குடும்பத்தினர்.*

(49594) (39-11-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.நகரில்
## மனிதநேய அமைப்புக்களின் ஹர்த்தால்

கீழே கையொப்பமிட்டுள்ள, யாழ்.நகரில் பணிபுரியும் அரச சார்பற்ற நிறுவனங்களும் சர்வதேச அமைப்புக்களும், சமீபத்தில் கரித்தாஸ் - கியுடெக் நிறுவன பணியாளர்கள் இருவர் கிளேமோர் கண்ணிவெடித் தாக்குதலில் கொல்லப்பட்டதையும் தற்போது நடைபெற்று வரும் வன்செயல்களையும் எதிர்க்கின்றோம்.

இவற்றில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கு முகமாக நாம் எமது பணிகளை சித்திரை மாதம் 19ஆம் திகதி புதன்கிழமை அன்று இடைநிறுத்தி வைத்துள்ளோம்.

நாம் எமது திட்ட செயல்கள் நடைபெறும் சகல இடங்களுக்கும் சென்று வருவதற்கும் எமது பணியாளர்களின் பாதுகாப்பிற்கும், அவர்கள் சுயமாக சென்று வருவதற்கும் வழிவகுக்குமாறு சம்பந்தப்பட்ட சகல தரப்பினரையும் வேண்டுகின்றோம்.

நாம், சம்பந்தப்பட்ட அனைவரும், சர்வதேச மனிதநேய சட்டங்களுக்கான தமது கடப்பாடுகளை மிகவும் கடுமையாக கடைப்பிடிக்கவும் மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்வும் எதிர்பார்த்து நிற்கின்றோம்.

## Humanitarian Agencies' Hartal in Jaffna

We, undersigned NGOs and international agencies working in Jaffna, protest against the killing of 2 Caritas-Hudec staff members in a Claymore mine explosion and the recent escalation of violence.

We will suspend our movements on the field today Wednesday 19th of April in sign of solidarity with the victims.

We urge all those concerned to allow full access to all project sites and to promote the safety, security and freedom of movement of our staff.

We expect and encourage all parties concerned to comply strictly with their obligations under International Humanitarian Law and to respect Human Rights.

CARITAS · ACTION FAIM · Centre for Peace & Reconciliation · FORUT · COUNCIL OF NGOs, JAFFNA · HUDEC · gtz · PARC Pacific Asia Resource Center · motivation quality of life · movimondo · Nonviolent Peaceforce Sri Lanka

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி ஆராதனை அழைப்பு



பிறப்பு
20 - 04 - 1937

மகிமைக்குள்
20 - 03 - 2006

### அமரர் முருகர் கிருஷ்ணபிள்ளை (ஆபிரகாம்)

20.03.2006 திங்கட்கிழமைஅன்று இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவரது நல்லடக்க ஆராதனையில் கலந்து கொண்டோருக்கும் அனுதாபம் தெரிவித்தோருக்கும்உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, இன்று (19.04.2006) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் இடம்பெறும் நினைவஞ்சலி ஆராதனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

297/9,பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
(49600)
(18-34-12)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### ஜோன் ஜோசப் தேவசகாயம்

(ஓய்வுபெற்ற கிராமிய அபிவிருத்தி உத்தியோகத்தர்)



கோப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும் 814, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தற்போது New zealand இல் வசித்து வந்த ஜோன் ஜோசப் தேவசகாயம் அவர்கள் 17.04.2006 அன்று New zealand இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஜோன் -மேரி சின்ன்ம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்ற மனுவேற்பிள்ளை - றோசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் பிரிஜற் றெஜினாவின் அன்புக் கணவரும் யஸ்ரின் (U.S.A.), றஞ்சனி(U.k.), ஜெறோம்(ஜேர்மனி), சசிகலா(U.k.), கேழி (இந்தியா), தேவநேசன் (New zealand), ஜக்குலின் (U.k.) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான ரூத், மங்களம், அக்னஸ் செல்வமணி மற்றும் மேசிக் கமலம், ஜேம்ஸ்(சிங்கப்பூர்), அனா ஜீவமணி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(20.04.2006) வியாழக்கிழமை New zealand இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி-49003)
(18-34-12)

தகவல்:
A.S. அன்ரனிப்பிள்ளை [டயானி எலக்றிக்கல்ஸ்].

## உகந்த சூழ்நிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செவ்வியின்போது தெரிவித்திருக்கிறார்.

நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் ஜோன் ஹன்ஸன் போவர், நாளை வியாழக் கிழமை கிளிநொச்சி வரும்பொழுது திருகோணமலையில் கட்டவிழ்த்து விடப்பட்ட தமிழர்களுக்கு எதிரான இன ஒழிப்பு, தமிழ் வர்த்தகப் பெருங்குடி மக்கள் மீதான தாக்குதல்கள், கிழக்கு மாகாணத் தளபதிகளுக்கான 'ஹெலி'ப் பயண ஏற்பாடுகள் போன்ற விடயங்களோடு, இன்னமும் ஏராளமான விடயங்கள் குறித்தும் அவருடன் பேசவிருக்கிறோம் என்றும் புலித்தேவன் தமது செவ்வியில் கூறியிருக்கிறார்.

கொழும்பிலிருந்து 'ரொய்ட்டர்' நிருபர் கிளிநொச்சியில் இருந்த புலித்தேவனுடன் தொலைபேசியில் இந்தச் செவ்வியை எடுத்தார்.

"திருகோணமலையில் நடந்தது இனச் சங்காரமே! இலங்கை இராணுவத்தினரும், சிங்களக் காடையர்களும் தமிழர்களைத் தாக்கினார்கள். பேச்சுக்குப் போவதாயிருந்தால் அதற்கான உகந்த சூழ்நிலை ஒன்று இருக்க வேண்டும் என்றே நாங்கள் சொல்ல விளைகிறோம்." - என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். நேற்றிரவு கூட எங்கள் மீது ஒட்டுப்படைத் தாக்குதல் ஒன்று நடந்தி ருக்கிறது என்றும் அவர் கூறினார்.

புலிகளின் தளபதிகளை கிழக்கிலிருந்து வன்னிக்குத் தனியார் 'ஹெலி' மூலம் அழைத்துச் செல்வதற்கான அனுமதியை அரசாங்கம் வழங்கியிருக்கும் இந்தவேளை புலித்தேவன்.

இவ்வாறு 'உகந்த சூழ்நிலை' உருவாக வேண்டும் என்று சொல்லியிருப்பது புதிய நிபந்தனை ஒன்று புலிகளால் முன்வைக்கப்படுகிறது என்றே சொல்ல வேண்டும். - என்று ரொய்ட்டர் குறிப்பிட்டுள்ளது.


## பணிநிலை வேண்டுகை

### புத்தகம் கட்டுனர் (பெண்கள்)
(Book Binders)

விண்ணப்பதாரிகள் தங்கள் சுயவிபரக் கோவையுடன் 25.04.2006 ஆம் திகதிக்கு முன் காலை 11.00 மணி–மாலை 4.00 மணி வரை நேரில் சமுகம் தரவும்

கரிகணன் பிறிண்டேர்ஸ்,
இல:424, காங்கேசன்துறை சாலை, யாழ்ப்பாணம்.

### மெசின் மைண்டர் தேவை

ஓவ் செற் மெசின் மைண்டர்
உடன் தேவை.
நேரில் தொடர்பு:
முற்பகல்10 மணி முதல் மாலை 5 மணி

ஞானம்ஸ் பிறிண்டேஸ்
கந்தர்மடம் சந்தி,
யாழ்ப்பாணம்.
(49601)
(18-34-12)


### திருத்தம்

திருமதி ஆசைப்பிள்ளை பூபதி

கடந்த 17.04.2006 உதயனின் ஆறாம் பக்கத்தில் வெளியாகிய '33 ஆம் நாள் நினைவஞ்சலி - வீட்டுக்கிருத்திய அழைப்பு' விளம்பரத்தில்-

திருமதி ஆசைப்பிள்ளை பூபதி என்பவரின் பெயர் திருமதி சூசைப்பிள்ளை பூபதி எனத் தவறாக அச்சாகிவிட்டது. இதனால் விளம்பரதாரருக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய மன உளைச்சல்களுக்காக வருந்துகிறோம். (ஆ-ர்)


### விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் பஸ் நிலையம் முன்பாக, ஆஸ்பத்திரி வீதியில் சகல வசதிகளும் கொண்ட ஒரு பரப்புக் காணியுடன் ஒரு மாடிக் கடைக்கட்டடம் (முன்புறம், பின்புறம் பாதைகள் கொண் டது) உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு கொள்ள வேண்டிய
தொலைபேசி இலக்கம்
071 3056177
(சி-49000)
(18-34-12).

### ராஜா யாழ்ப்பாணம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
பரத், மல்லிகா கபூர் நடித்த
அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது
10.30,2.30,6.30,9.30 ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

### நாகம்ஸ் சுன்னாகம்

ஜீவா, சந்தியா மற்றும் பலர் நடித்த
டிஸ்யும்
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00, 10.00

### நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

எஸ்.ஜே.சூர்யா, நயன்தாரா, விவேக் நடித்த
கள்வனின் காதலி
காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30


## United Nations
## Office of the Resident Co-ordinator
Colombo, Sri Lanka.

### Statement from the UN Resident/ Humanitarian Co-ordinator in Sri Lanka

The UN Resident/Humanitarian Co-ordinator in Sri Lanka deplores the latest spate of violence which has claimed the lives of a number of Sri Lankans including two humanitarian aid workers.

A third humanitarian aid worker - this time a British national and her family - sustained injuries in Tuesday's incident in Trincomalee district.

Such acts potentially threaten humanitarian operations in the most vulnerable areas affected by the tsunami and the conflict.

### இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் வதிவிடப் பிரதிநிதி/மனிதநேய செயற்பாடுகளுக்கான இணைப்பாளரின் அறிக்கை

இலங்கைக்கான ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி / மனிதநேய செயற்பாடுகளின் இணைப்பாளர் அதிகரித்துவரும் வன்முறைகளின் காரணமாக காவு கொள்ளப்பட்ட இரு மனிதநேய பணியாளர்கள் உட்பட இலங்கைவாழ் மக்களின் உயிரிழப்பிற்கு ஆழ்ந்த மன வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறார்.

இத் தொடர் சம்பவங்களின் வரிசையில் மூன்றாவதாக மனிதநேயப் பணியாளரான பிரித்தானிய பிரஜை ஒருவரும் அவரது குடும்பத்தினரும் கடந்த செவ்வாய்க்கிழமை திருகோணமலை மாவட்டத்தில் நடந்த சம்பவத்தில் காயமடைந்துள்ளனர்.

இத்தகைய சம்பவங்கள் சுனாமியாலும் போராலும் மிகவும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மனிதநேயப் பணிகளை முன்னெடுப்பதற்கு மறைமுக அச்சுறுத்தலாக உள்ளன.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தமேந்திரன் பவுலின் மேரி



நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தமேந்திரன் பவுலின் மேரி அவர்கள் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராயப்பு - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ் சென்ற இரத்தினம் தமேந்திரன் அவர்களின் அன்பு மனைவியும் யசோதா (பிரான்ஸ்), ராஜ்குமார்(லக்ஸ்ஷிகா பன்சி கவுஸ் கல்வியங்காடு), விஜி ஆகியோரின் அன்புத் தாயும் ஜீவானந்தம் (பிரான்ஸ்), நிறோஜினி(நகரசபை சாவகச்சேரி), பிரபாகரன் (புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியும் பிரான்ஸிஸ் (சாறி சென்ரர்), மரியநாயகம் (பிரான்ஸ்), நவரட்ணராஜா பொலின் வயலட், ரஞ்சினி(பிரான்ஸ்) றோசா(ஜேர்மனி), ராஜினி, பிறேமினி(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் விஜயா, குணநாயகம் (R.G. Stores) அவர்களின் அன்பு மைத்துனியும் நிஷாரா, சரண்யா, நிஷோபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் மருதடி லேன் இல. 30/2, இல்லத்திலிருந்து இன்று(19.04.2006) புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு திருப்பலியின் பின்னர் பூதவுடல் நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

30/2, மருதடி லேன்,
நல்லூர்.
(49599)
(18-34-12)

தகவல்:
த.ராஜ்குமார் (மகன்),
விஜயா
குணநாயகம்(மைத்துனி).

### கனிசியஸ் பேசி திலகசூரியர் (சில்லாலை)



சில்லாலையைப் பிறப்பிடமாகவும் பண்டத்தரிப்பை வதிவிடமாகவும் கொண்ட அந்தோனிமுத்து திலகசூரியர் அவர்கள் 17.04.2006 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிமுத்து - பிரகாசியம்மா தம்பதியரின் ஆசை மகனும் ராணி றெபேக்காவின் அன்புக் கணவரும் காலஞ் சென்றவர்களான திரு.திருமதி பிறைசூடியின் அன்பு மருமகனும் வெறோணியா, வெறோஜன், வேஜினியா ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற தியாகநாதன் மற்றும் தேவி, மாலா, சிறி (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் பங்கிராஸ், யூட், ஜெயக்குமார்(கனடா), திரு.திருமதி பூலோகேந்திரன் (பிரான்ஸ்), சேவியர், காலஞ்சென்ற றோஸ் (சுவிஸ்), திரு.திருமதி மனோகரன் (பிரான்ஸ்), திரு.திருமதி ராமநாதன் (பிரான்ஸ்), திரு.திருமதி பகீரதன் (ஆஸ்திரேலியா), திரு.திருமதி மோகன் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஜெகன், சுபதினி, ஆனந்தி, குணம், டெஸ்மன், திலீபன் ஆகியோரின் மாமனும் றோய், ஈசா, றொஷ்ஷிக்கா, மைக்கல், ரஜீவ், அஞ் சலி(பிரான்ஸ்), ரஜோபன், பிரியாந்தி, ரமேஷ், நிஷ்ஷாந்தி, நிஜோபன் (சுவிஸ்) ஆகியோரின் சித்தப்பாவும் மனோஜன், நிரோஜன், றுக்ஷன் , யதுஷன், திவுஷன், றிஷ்ஷிக்கா(பிரான்ஸ்), ஆதித்தன், அகிம்ஷன்(ஆஸ்திரேலியா), ரவாயல், றொட்னி (சுவிஸ்) ஆகியோரின் பெரியப்பாவும் றொஷ்ஷான், கிறிஸ்ரீன், ரயான் (பிரான்ஸ்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை திருப்பலி இன்று (19.04.2006) புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் சில்லாலை கதிரை அன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு, நல்லடக்கத்திற்காக பூதவுடல் சில்லாலை சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'நிரஞ்சனி'
சண்டிலிப்பாய் வீதி, பண்டத்தரிப்பு.
(49604)
(18-34-12)

தகவல்:
மனைவி,பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்னேஸ்வரனின் படுகொலையை ஆஸி. அரசு கண்டித்து அறிக்கை

கொழும்பு,ஏப்.19

திருகோணமலையில் மாமனிதர் விக்னேஸ்வரன் படுகொலை செய்யப்பட்டமைக்கு ஆஸ்திரேலிய அரசு கண்டனம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் உள்ள ஆஸ்திரேலிய தூதரகம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் இப்படி தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையின் வடக்கு - கிழக்கில் ஸ்ரீலங்கா அரச படைகள் மற்றும் பொதுமக்கள் மீதான அண்மைய வன்முறைகளை ஆஸ்திரேலிய அரசு வன்மையாகக் கண்டனம் செய்கிறது.

அதே நேரத்தில் திருகோணமலையில் தமிழ் அரசியல் பிரமுகர் வி.விக்னேஸ்வரன் கடந்த ஏப்ரல் 7 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டதையும் ஆஸ்திரேலிய அரசு கண்டிக்கிறது.

அரச படைகள் மற்றும் பொதுமக்களுக்கு எதிரான வன்முறைகளை நிறுத்துமாறு தமிழீழ விடுதலைப் புலிகளை ஆஸ்திரேலிய அரசு கேட்டுக்கொள்கிறது.

ஸ்ரீலங்கா அரசு பதில் தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் பேச்சுகள் மூலமான தீர்வுகாண தொடர்ந்தும் முயற்சிகள் மேற்கொள்ளவேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுகளில் ஸ்ரீலங்கா அரசு அர்ப்பணிப்புடன் உள்ளதை ஆஸ்திரேலிய அரசு வரவேற்கிறது.ஆத்திரம் ஊட்டும் நடவடிக்கைகளை தொடராமல் பேச்சுகளில் பங்கேற்கவேண்டும் என்று விடுதலைப் புலிகளை கேட்டுக்கொள்கிறோம்.

ஜெனீவாவில் பெப்ரவரி 23, 24 ஆகிய நாள்களில் நடத்தப்பட்ட பேச்சுகளின் முடிவில் எட்டப்பட்ட உடன்பாட்டை ஸ்ரீலங்கா அரசும் விடுதலைப் புலிகளும் மதித்து யுத்த நிறுத்தத்தை பலப்படுத்தி அனைத்து தரப்பு நம்பிக்கையை கட்டியெழுப்ப வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3)

# வவுனியாவில் கைக்குண்டு வீச்சு பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பலி

வவுனியா, ஏப்.19

வவுனியா பூந்தோட்டம் பகுதியில் இனந்தெரியாதவர்களால் தொடுக்கப்பட்ட கைக்குண்டு வீச்சில் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பலியானதுடன் பொலீஸ் கான்ஸ்டபிள்கள் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் கடந்த திங்களன்று இரவு 9 மணியளவில் நடைபெற்றுள்ளது என வவுனியா பொலீஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தையடுத்து இப்பகுதியிலுள்ள அனைத்துப் போக்குவரத்து வீதிகளும் மூடப்பட்டு சோதனை நடைபெற்றதுடன், பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொண்டனர். எனினும் தாக்குதலுடன் தொடர்புபட்டவர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை எனத் தெரியவருகிறது.

# வவுனியாவில் நேற்று ஒருவர் வெட்டிக்கொலை

வவுனியா மூன்றுமுறிப்பு மதகு வைத்தகுளம் பகுதியில் வெட்டிக்கொலை செய்யப்பட்ட நிலையில் நேற்றுக்காலை ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

32 வயது மதிக்கத்தக்க இச்சடலத்தின் கை, கால் கட்டப்பட்ட நிலையில், தலையிலும், கழுத்திலும் வெட்டுக் காயங்களும் காணப்பட்டன என வவுனியாப் பொலீஸார் தெரிவித்தனர்.

இச்சடலத்தின் அருகில் தேசியபடை என்ற துண்டுப் பிரசுரம் ஒன்றும் கண்டெடுக்கப்பட்டது எனவும் - இக்கொலை தொடர்பாக மேலதிக விசாரணைகளை தாம் மேற்கொண்டுள்ளனர் என பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

சடலம் இருந்த இடத்தை நேற்று வவுனியா மாவட்ட நீதிமன்ற நீதிவான் இளஞ்செழியன் நேரில் சென்று பார்வையிட்டார். (க - 3)

## வந்தார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரிகைகள் சிலவற்றின் ஆசிரியர்களையும் சந்தித்துப் பேசவுள்ள ஹன்ஸன் போவர், நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வரை இலங்கையில் தங்கியிருப்பாரெனத் தெரிவிக்கப்படுகிறது. (க-3)

## யாழ்.நகரில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பார்த்துக் கொண்டிருந்த சமயம் மோட்டார் சைக்கிளில் வந்த ஆயுததாரிகள் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்தை நேரில் பார்வையிட்ட யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் பின்னர் யாழ். ஆஸ்பத்திரியில் மரண விசாரணைகளை நடத்தினார். (க-3-7-13-15-78)

# கருணா குழுவினரால் ஒருவர் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு சந்திவெளியில் கருணா கும்பலினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்றது.

இவ்வாறு உயிரிழந்தவர் சந்தி வெளி ஆற்றங்கரை வீதியில் வசிக்கும் ஈசன் என்பவராவார். மோட்டார் சைக்கிளில் சென்ற ஆயுததாரிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்த பின்னர் தப்பிச் செல்வதற்கு பொலீஸார் பாதுகாப்பு அளித்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## கிளைமோர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி).

தாம் கருதுகிறாரென்றும், பல கிளைமோர் தாக்குதல்களை விடுதலைப் புலிகளே நடத்தியிருக்கிறார்கள் என்றும் ஹென்றிக்ஸன் இந்தப் பேட்டியில் மேலும் தெரிவித்திருக்கிறார்.

வடக்கு - கிழக்கில் கண்காணிப்புப் பணிகள் கிரமமாக மேற்கொள்ளப்பட வேண்டுமாயின் கண்காணிப்புக் குழுவின் ஆளணி வசதி கள் உட்பட இதர தேவைகள் பூர்த்தி செய்யப்படவேண்டுமெனக் குறிப்பிட்டுள்ள கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவர் இப்போதுள்ள - குறைந்த எண்ணிக்கையுடைய - குழுவை வைத்துக்கொண்டு சீரான சேவையை மேற்கொள்ள முடியாத சூழ்நிலை இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். (க-3)

# தனியார் ஹெலி வசதியை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட வட்டாரங்கள் மூலம் அறியமுடிந்தது.

இலங்கையில் பயன்படுத்தப்படும் தனியார் ஹெலிகள் மிக உயரத்தில் பறக்கக் கூடியவையோ, அல்லது அதிக வலுவுடன் தாக்குப் பிடிக்கக் கூடியவையோ அல்ல என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

நிலத்திலிருந்து சாதாரண இலகு இயந்திரத் துப்பாக்கிகளினால் நடத்தப்படும் தாக்குதலுக்குக் கூட இவை நின்று பிடிக்குமா என்பது சந்தேகமே.

கிழக்குக் காடுகளுக்கு மேலாக புலிகளின் தளபதிகள் இந்த ரக ஹெலி ஒன்றில் பயணிப்பது மிகமிக ஆபத்தானது என்று புலிகளின் தலைமை கருதுவதாகத் தெரிகின்றது.

இக்காடுகளுக்கு மேலாக புலிகளின் தளபதிகள் சாதாரண - தனியாருக்குச் சொந்தமான - ஹெலிகொப்டர்களில் பயணித்தால் அதை வசமான சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி, அவர்களின் உயிருக்கு உலைவைக்கும் திட்டத்தை ஒட்டுப்படைகள் சார்ந்த நாசகார சக்திகள் இலகுவாக நிறைவேற்றி விடலாம் என்று புலனாய்வுத் தகவல்கள் புலிகளின் தலைமைக்கு எடுத்துரைத்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

அத்தோடு, வன்னியிலிருந்து சுமார் நாற்பது போராளிகளும், இரு தளபதிகளும் கிழக்குக்குச் செல்லும் அதேசமயம் கிழக்கிலிருந்து சுமார் நாற்பது போராளிகளும் இரு பதில் தளபதிகளும் வன்னிக்குச் செல்ல வேண்டிய தேவை உள்ளது. அதன்பின்னர் வன்னியில் விடுதலைப் புலிகளின் தலைமையோடு பேச்சுகளை முடித்துக்கொண்டு தளபதிகள் இருவரும் கிழக்கே திரும்ப, அதுவரை அங்கு கடமையாற்றிய தளபதிகள் வன்னிக்கு மீளவேண்டும். மேலும் இப்பயணங்களின்போது பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்கவும், பயண ஒழுங்குகளைக் கவனித்து உறுதிப்படுத்தவும் கண்காணிப்புக் குழு மற்றும் நோர்வே அனுசரணைத் தரப்புப் பிரதிநிதிகளும் அவர்களுடன் சேர்ந்து பயணஞ்செய்ய வேண்டியிருக்கும்.

ஆகையினால், இத்தகைய பெரிய பயண ஏற்பாடுகளுக்கு ஓரிருவரே பயணம் செய்யக்கூடிய சிறிய ரகத் தனியார் ஹெலிகள் பயனற்றவை என்று விடுதலைப் புலிகளின் தலைமை கருதுவதாகத் தெரிகின்றது.

நாளை கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் உயர்மட்டத் தலைவர்களை நோர்வே அனுசரணைக்குப் பொறுப்பான விசேட தூதுவர் ஜான் ஹன்ஸன் போவர் சந்திக்கும்போது இந்த விடயங்களை விடுதலைப்புலிகள் அவருக்கு விலாவாரியாக விளக்குவர் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேசமயம்-

இடைநிறுத்தப்பட்டு, ஒத்திவைக்கப்பட்டிருக்கும் அமைதிப் பேச்சுகள் விரைவில் ஆரம்பமாவதற்கான சாத்தியங்களும் மிக மிகக் குறைவு என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### பேச்சுக் குறித்து புலிகளின் கருத்து

இவ்விவகாரம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் உயர்வட்டாரங்கள் நேற்றுக் கருத்து வெளியிட்டன.

''புலிகளின் கிழக்கு மாகாணத் தளபதிகள் வன்னிக்கு வந்து திரும்பிச் செல்லும் பயண ஏற்பாடு செய்யப்படாதமை மாத்திரம்தான் பேச்சு நடைபெறுவதற்கான தடைக்கல் என்பதல்ல. அதற்கு அப்பாலும் பல விடயங்கள் உள்ளன.

''அமைதிப் பேச்சு நடப்பதற்கு அதற்கான புறச்சூழல் ஏற்பட வேண்டும். எமது அரசியல் போராளிகள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் சென்று அரசியல் பணியாற்றுவதற்கான களச்சூழல் உருவாக்கப்பட வேண்டும். அப்படியான களச்சூழ்நிலை ஏற்படுவதாயின் கடந்த ஜெனீவாப் பேச்சுகளின்போது இணக்கம் காணப்பட்ட தீர்மானத்தின்படி ஒட்டுப்படைகளின் ஆயுதங்களைக் களைந்து அவற்றின் வன்முறைகளை முடிவுக்குக் கொண்டு வரும் நடவடிக்கைகள் களத்தில் மேற்கொள்ளப்படவேண்டும்.

''பேச்சு மேசைக்குப் போயிருந்து இரு தரப்பும் பேசுவதற்கான புறச்சூழல் ஏற்படுவதாயின் தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைகள் நிறுத்தப்பட வேண்டும். களத்தில் மக்களை அடித்தும், கொன்றும், அவர்களின் உடைமைகளைச் சூறையாடியும், எரித்தும், கொள்ளையடித்தும் அட்டகாசம் புரியும் சமயத்தில் அத்தகைய தரப்புடன் போயிருந்து நாங்கள் ஒரு மேசையில் அமர்ந்து பேச முடியுமா?

''திருமலை இன வன்முறைகளில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உரிய நஷ்ட ஈடு, நிவாரணம் வழங்கப்பட வேண்டும். இந்த வன்முறைகளால் இடம்பெயர்ந்தோர் தமது இடங்களுக்கு மீளத் திரும்புவதற்கு உரிய ஏற்பாடுகள் செய்யப்படுவதோடு அவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவும் வேண்டும்.

''இவையெல்லாம் செய்யப்படாமல் மீண்டும் ஒரு தடவை பேச்சு மேசைக்குச் செல்வது அர்த்தமற்றது; அபத்தமானது.

''எமது தளபதிகளின் பயண ஒழுங்கு விடயத்தில் பகையுறவுப்போக்கையும், விரோத நிலைப்பாட்டையும் எடுத்ததன் மூலம் நிலைமையை அரசுத் தரப்புக் குழப்பி இந்தச் சிக்கலை பூதாகரப்படுத்தி விட்டது.

''மீண்டும் நிழல் யுத்தம்ஒன்று ஆரம்பித்து நீடிக்கும் நிலையில் பேச்சு மேசைக்குச் செல்வது என்பது அவ்வளவு இலகுவாகவும் விரைவாகவும் நடக்கப் போவதில்லை.'' - என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (உ-3 )

## யாழ்ப்பாண..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

பிறவுண் வீதி, நாவலர் வீதி, தட்டாதெருச் சந்தி ஆகியவை உட்பட நகரின் பல வீதிகளிலும் இத்தகைய வேகத்தடைக் குழிகளை இராணுவத்தினர் வெட்டி அமைத்துள்ளனர்.

இக் குழிகளால் இருசக்கர வாகனங்களில் செல்வோர் அதிக சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

நவீன ரக வாகனங்களின் அடிச்சட்டப் பகுதி தரையிலிருந்து சிறிது உயரத்திலேயே அமைந்திருப்பதால் வேகத்தடைக் குழிக்குள் அத்தகைய வாகனங்கள் இறங்கி ஏறும்போது வாகனத்தின் அடிப்பகுதி தரையில் மோதி சேதமாவதாகவும் சாரதிகள் கூறுகின்றனர்.

யாழ்ப்பாண நகரை உயர் பாதுகாப்புப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தும் நோக்கில் இராணுவம் மேற்கொண்டு வரும் இம்முயற்சிகளால் மக்கள் மத்தியில் கடும் விசனமும் அச்சநிலையும் தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (க-3-13)

## ஊடுருவ முயன்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இந்தத் தாக்குதலின்போது கிளைமோர்க் குண்டுகளும், கைக்குண்டுகள் மற்றும் தன்னியக்கத் துப்பாக்கிகளும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தாக்குதலின்போது கொல்லப்பட்ட மூவரின் சடலங்களும் அவர்களது உறவினர்களிடம் கையளிக்கப்பட்டன எனவும், இவர்கள் கோரக்கல்லிமடு, பெண்டுகள்சேனை, கிரான் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த வர்களென்றும் விடுதலைப் புலிகளின் குடும்பிமலைப் பிரதேச இணைப்பாளர் ஒலியன் நேற்றுத் தெரிவித்திருக்கிறார்.

கடந்த வியாழக்கிழமை வாகனேரியில் இடம்பெற்ற ஆழ ஊடுருவித் தாக்குதல் சம்பவமொன்றிலும் இவர்கள் தொடர்புபட்டிருப்பது தெரியவந்துள்ளதாக ஒலியன் மேலும் தெரிவித்துள்ளார். (க-3)

மிக விரைவில்
QUICK STAMP
தரமான பொலிமர், பிளீஇங்
இறப்பர் சீல்கள் ,
3மணி நேரத்தில்....
விவரங்கள் அடுத்த வாரம்

EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...

தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.04.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, 2006 மே

வெளியீடு 02

# மாதிரி வினாப்பத்திரம்

## இரசாயனவியல் - I

திரு. சி. சுதாகரன்.B.Sc. திருகோணமலை.

(இரசாயனவியல் -I இன் வினாத்தாள் 05.04.2006ஆம் திகதிய கல்விச்சுடரில் வெளியாகியிருந்தது. அதன் அமைப்புக் கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.)

### அமைப்புக் கட்டுரை வினாக்கள்

### பகுதி - A

1. a) பின்வரும் பட்டியலிலிருந்து எடுக்கப்படும் மூலகம் மூலகங்களினால் அல்லது சேர்வைகளைப் பயன்படுத்திக் கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.
Cr, ZnO, HI, $H_2O$, P, CuO, $BF_3$, C, $NH_3$, N, Si, $TiO_2$
i. சேர்வை நிலையில் கறுப்பு நிற ஒட்சைட்டைத் தருவது ?
ii. அதிகூடிய பரகாந்த இயல்பைக் காண்பிக்கும் மூலகம் / மூலகங்கள்?
iii. மும்மைப்பிணைப்பை உருவாக்கக் கூடிய மூலகம் / மூலகங்கள்?
iv. பிற திருப்பத்தைக் காட்டும் மூலகம் / மூலகங்கள்?
v. லூயிமூலகமாக தொழிற்படக் கூடியவை / கூடியது?
vi. இராட்சத பங்கீட்டு வலுப்பிணைப்பை உருவாக்கக் கூடியவை / கூடியது?
b) m என்பது தாண்டல் மூலகம் அன்று, எனினும் நீருடனோ அல்லது நீராவியுடனோ தாக்கம் புரியாது. இதன் ஒட்சைட்டை ஈரியல்பைக் காண்பிக்கும் எனினும் m ஆனது (+2) ஒட்சியேற்ற நிலையில் ஒட்சைட்டை உறுதியாகக் கொண்டது.
i. மூலகம் m ஐ இனங்காண்க?
ii. m இன் ஒட்சைட் ஆனது ஈரியல்பு என்பதை எவ்வாறுகாட்டுவீர்?
c) A,B,C,D ஆகியன முறையே $Z, Z^{+1}, Z^{+2}, Z^{+3}$ ஆகிய அணு எண்களை உடைய நான்கு தாண்டலற்ற ஒரே ஆவர்த்தன மூலகங்களாகும். C யிலும் பார்க்க B ஆனது மின்நேர் தன்மை கூடியது. ஆனால் D ஆனது மற்றைய மூலகங்களைப் பார்க்க அதிகூடிய மின்நேர் தன்மை உடையமூலகமாகும்.
i. அதிகூடிய அயனாக்கற்சக்தியை உடைய மூலகம் அடங்கியிருக்கும் கூட்டம்/ கூட்டங்கள்?
ii. B ஆனது அடங்கியிருக்கும் கூட்டம்/கூட்டங்கள்?


2. a) NaOH முன்னிலையில் NaBr இன் மூலம் $Cr(OH)_3$ ஒட்சியேற்றப்படுகிறது. இதன்போது நடைபெறும் தாக்கங்களைத் தருக.
I) ஒட்சியேற்றல் தாக்கம் :-
II) தாழ்த்தல் தாக்கம் :-
III) நிகர தாக்கம் :-
b) கல்சியமானது சிலவேளைகளில் CaO ஐ தூய்மையற்ற நிலையில் கொண்டுள்ளது. இது Hcl உடன் தாக்கம்புரிந்து விளைவைத் தருகிறது. தூய்மையற்ற நிலையில் CaO வாயு வெளியேற்றம் தருவதில்லை. இந்த நிலையில் 70.1$cm^3$ $H_2$ வாயு வெளிவந்தது, ஆனால் 0.122g கல்சியம் மாத்திரம் 1.23$moldm^{-1}$ Hcl இன் 25$cm^3$ அறை வெப்ப அமுக்கத்தில் தாக்கமுற்று $H_2$ வாயுவை வெளிப்படுத்துகிறது Ca இன் தூய்மை நூற்றுவீதம் யாது? (S.T.P 1 mol வாயு அடைக்கும் கனவளவு -2400$cm^3$)
c) 0.16$moldm^{-3}$ $Na_2S_2O_3$ இன் நீர்க்கரைசல்களுடனும் 3$moldm^{-3}$ Hcl உடனும் 300K இல் தாக்கிக் கலவைகளின் தொடையொன்று தரப்பட்டுள்ளது. தாக்கதின் வீதம் $Na_2S_2O_3$, Hcl ஆகியவற்றின் செறிவுகளின் தாக்கவீத படிகளில் தங்கியிருக்கும். தாக்கத்தின் தாக்கவீதம் α ஐ $Na_2S_2O_3]^m [Hcl]^n$ என்பதில் தரப்படுகிறது.


| | தாக்கக் கலவை | Na2S2O3இன் கனவளவு (ml) | Hcl இன் கனவளவு (ml) | நீரின் கனவளவு (ml) | நேரம் (s) |
|---|---|---|---|---|---|
| மாணவன் P | 1 | 13.0 | 5.0 | 12.0 | 21.0 |
| | 2 | 15.0 | 5.0 | 10.0 | 16.7 |
| | 3 | 20.0 | 5.0 | 5.0 | 12.5 |
| மாணவன் Q | 4 | 25.0 | 4.0 | 1.0 | 10.1 |
| | 5 | 25.0 | 3.0 | 2.0 | 10.2 |
| | 6 | 25.0 | 2.0 | 2.0 | 10.1 |

i. மாணவர்கள் P,Q என்பவர்கள் ஏன் வெவ்வேறு தொகுதிகளை உடைய பரிசோதனையை நடத்தினார்கள்?
ii. இங்கு தாக்கத்தின் வீதம் எவ்வாறு அளக்கப்படுகிறது?
iii. இங்கு ஏன் மொத்தக்கனவளவு மாறாது பேணப்படுகிறது?
iv. $Na_2S_2O_3$ Hcl ஆகியவற்றுக்கு இடையிலுள்ள தாக்கத்திற்குரிய சமன் செய்த சமன்பாட்டை எழுதுக?
v. மேலுள்ள பரிசோதனை, கூடிய வெப்பநிலையொன்றில் செய்யப்படின் ஒரேயளவு கந்தகத்தைப் பெறுவதற்கு ஒத்த நேரங்கள் நீண்டவையாகவா அல்லது குறுகியன்வாகவா இருக்கும்? காரணங்களைத் தருக?

3. a) X எனும் சேதனச்சேர்வையானது இரண்டு கேத்திரகணித சமபகுதி இயல்பைக் காட்டுகிறது. இச்சேதனச்சேர்வையானது திணிவுப்படி C= 47.1% H=6.5% அத்துடன் cl = 46.4% கொண்டுள்ளது. (C=12 ,H=1,cl=35.5)
a. சேதனச்சேர்வையின் மூலக்கூற்று சூத்திரம் யாது?
b. X எனும் சேதனச்சேர்வையின் இரண்டு கேத்திரகணித சமபகுதியத்தையும் வரைக.
c. X எனும் சேதனச்சேர்வையின் சக்கரமல்லாத சமபகுதியங்கள் இரண்டு வரைக.
d. X எனும் சேதனச்சேர்வையானது NaOH சேர்த்து வெப்பமேற்றும்போது பெறப்படும் விளைவானது ஒளியியல் சமபகுதியத்தைக் காட்டுகிறதா? காரணம் தருக?

b) X எனும் $C_4H_7N0$ என்னும் மூலக்கூற்று சுத்திரமுடைய சேதனச்சேர்வை
a. 2,4 Dinitro phenyl hydrazine உடன் மஞ்சள் நிறவீழ்படிவை தருகிறது.
b. $NaNO_2$/ Hcl உடன் தாக்கம்புரிந்து நிறமும் மணமற்ற வாயு Y தருகிறது.
c. அமிலப்படுத்திய $K_2Cr_2O_7$ நீர்க்கரைசலின் நிறத்தை மாற்றுவதோடு தொலலின் சேதனைப் பொருளுடன் தாக்கம்முறுகிறது.
i சேதனைச்சேர்வை X இனை இனங்காண்க.
ii வாயு Y யை அடையாளப்படுத்துக.
iii 2,4 DNPH உடன் உருவாகும் விளைவின் கட்டமைப்பை வரைக.
c) பின்வரும் தாக்கங்கள் (I-V) கருதுக.

I. 


II) 


III. $CH_3-CH=CH_2 \xrightarrow{Br_2/ccl_4} C$

IV. $CH_3CH_2CHO \xrightarrow{dil\ NaOH\ (aq)} D$
அன்றய வெப்பநிலை


V. $CH_3\overset{\|O}{C}-CH_3 \xrightarrow{CH_3MgBr} E$

a. மேலுள்ள I – V பிரதான விளைவுகள் A B C D E என்பவற்றின் கட்டமைப்புகளை வரைக.
b. மேலுள்ள தாக்கங்கள் ஒவ்வொன்றினதும் பொறிமுறை வகையை கீழுள்ள அட்டவணையில் (AE ) மின்நாட்டக் கூட்டல் மின்நாட்டப் பிரதியீடு (SE) கருநாட்டக் கூட்டல் (AN) கரு நாட்ட பிரதியீடு (SN) மற்றைய பொறிமுறை (MO) என எழுதுக.

| தாக்கத்தின் எண் | பொறிமுறை வகை | மின் நாடி | கரு நாடி |
|---|---|---|---|
| I | | | |
| II | | | |
| III | | | |
| IV | | | |
| V | | | |

c. தாக்கம் I , III இடைநிலையின் கட்டமைப்பை எழுதுக.
d. தாக்கம் V இல் ஆரம்ப சேர்வையிலிருந்து இறுதிச் சேர்வைக்கு மாறும்போது என்ன கலப்புமாற்றம் நடைபெற்றுள்ளது?

4. பின்வரும் பட்டியலிலிருந்து மாத்திரம் பொருத்தமான சோதனைப் பொருள்களையும் கரைப்பான்களையும் மாத்திரம் பயன்படுத்தி பின்வரும் மாற்றீடுகளை எவ்வாறு நிகழ்த்துவீர்?
$C_6H_5CHO$, Mg dust , Fe/$Br_2$ , con Hcl ,$H_2O$ ,வெப்பம் , செறி $HNO_3$ , செறி $H_2SO_4$ ,Sn , $CH_3$- CH – $CH_2$MgBr , Cu , ஐதான NaOH , $Al_2O_3$




### பகுதி "B"

5. I. a) PV =1\3 $MNC^2$ எனும் சமன்பாட்டில் உள்ள உறுப்புகளை இனங்காண்க
b) PV= 1\3 $MNC^2$ இலிருந்து இலட்சிய வாயுச் சமன்பாட்டை எவ்வாறு பெறுவீர்
c) 27° C வெப்பநிலையில் A B ஆகிய இருகுடுவைகள் உள்ளன. அவற்றின் கனவளவுகள் முறையே 2:1 எனும் விகிதத்தில் உள்ளது. அவற்றில் உள்ள வாயுக்களின் அமுக்கம் முறையே 1:4 எனும் விகிதத்தில் அமைந்துள்ளது அவற்றிலுள்ள வாயுக்கள் $O_2$, $N_2$ ஆகும். அவ்வாயுக்களின் மொத்தத்திணிவு 17.6g ஆகும். இவ்விரு குடுவைகளும் புறக்கணிக்கத்தக்க கனவளவுடைய குழாயினால் இணைக்கப்பட்டது அதன் பின் அத்தொகுதியில் மொத்த அமுக்கம் இருமடங்காகும். வரை 18g X எனும் வாயு செலுத்தப்பட்டது.
i) இலட்சிய வாயுச் சமன்பாட்டிலிருந்து செறிவு அமுக்கம் என்பவற்றுடன் தொடர்புறும் சமன்பாடு ஒன்று பெறுக.
ii) செலுத்தப்பட்ட X இன் சார்மூலக் கூற்றுத்திணிவு யாது?
iii) இங்கு நீர் பயன்படுத்தும் எடுகோள்கள் எவை?
II. a) நியம மூலர் நடுநிலையாக்கல் வெப்ப உள்ளுறை எனும் பதத்தில் நீர் விளங்குவது யாது?
b) 30°C 4g NaOH திண்மமானது 1M Hcl கரைசலின் 50$cm^3$ இற்கு சேர்க்கப்பட்டது. அப்பொழுது கலோரிமானியினதும் கரைசலினதும் வெப்பநிலை 316K இற்கு மாறியது. பெறப்பட்ட கரைசலின் தன்வெப்பக் கொள்ளளவு 4200$JKg^{-1}K^{-1}$ அதன் அடர்த்தி 1000 $Kgm^{-3}$ எனின் கலோரிமானியின் வெப்பக் கொள்ளளவு 400 $JKg^{-1}K^{-1}$ ஆகவும் காணப்பட்டது எனக் கொண்டு
1) தாக்கம் நடைபெறுகையில் வெளியேறிய வெப்பத்தைக் காண்க
2) Hcl இன் மூலர் நடுநிலையாக்கல் வெப்ப உள்ளுறை யாது?
3) மேலே கூறிய கணிப்பீடுகளைச் செய்வதற்குப் பயன்படும் எடுகோள்களைக் குறிப்பிடுக.
4) வெப்ப இழப்பைத் தடுக்க மேற்கொள்ளும் நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

6. a) 25°C $CaF_2$ இனதும $CaCO_3$ இனதும் கரைதிறன் பெருக்கங்கள் முறையே 3.92 x $10^{-11}mol^3l^{-3}$ உம் 8.70 X $10^{-9}mol^2l^{-2}$ உம் ஆகும். NaF ஐ பொறுத்தவரை 0.1M ஆகவும் $Na_2CO_3$ பொறுத்தவரை 0.1M ஆகவும் உள்ள ஒரு கரைசலின் 25ml இற்குப் படிப்படியாக 0.1M $Cacl_2$ சேர்க்கப்பட்டால் முதலாவது வீழ்படிவின் தன்மை என்னவாக இருக்கும்? $CaF_2$ உம் $CaCO_3$ உம் ஒருங்கே படிவு வீழ்த்த முன்னர் இந்த வீழ்படிவின் எத்தனை மூல்கள் வேறாகும்?
b) அ. $I_2$ திண்மமானது $CHcl_3$ , $H_2O$ இடையே கரைந்து சமநிலை ஒன்றை ஏற்படுத்துகிறது. இச்சமநிலை நீர்படையின் 50ml உடன் முற்றாகத் தாக்கமுற தரப்பட்ட $Na_2S_2O_3$ இன் 10ml தேவைப்பட்டது. $CHcl_3$ படையின் 5ml உடன் முற்றாக தாக்கமுற தரப்பட்ட அதே $Na_2S_2O_3$ இன் 100ml தேவைப்பட்டது. இவ்வெப்பநிலையில் $I_2$ ஆனது $H_2O$ CHcl இடையே உள்ள பங்கீட்டுக்குணகத்தைக் காண்க
ஆ. 0.01M KI-நீர்க்கரைசல் குளோரோபோமுடன் கலக்கப்பட்டு அயடின் அயன்கள் முழுவதும் முற்றாக தாக்கமுற வேண்டியபோதியளவு மேலதிக $I_2$ உடன் பின் குலுக்கப் பட்டது. அறைவெப்பநிலையில் தொகுதி சமநிலையை அடைந்தபோது திண்ம அயடீன் மீதியாக இருக்கவில்லை. இச்சமநிலை கலவையிலுள்ள நீர்ப்படையின் 5ml முற்றாகத் தாக்கமுற 2m $Na_2S_2O_3$ இன் 50ml தேவைப்பட்டது எனின் KI+$I_2$ '! $KI_3$ எனக் காட்டுக.
மு.க:- இத்தொகுதியிலுள்ள அயனிப்பதார்த்தங்கள் குளோரோபோமில் கரையாது எனக் கொள்க. நீர்படையிலுள்ள அயடீன் சுயாதீன நிலையிலும் சிக்கல் நிலையிலும் உள்ளது எனக் கொள்க.

(இரசாயனவியல் - I இன் அமைப்புக்கட்டுரையின் தொடர்ச்சி 26.04.2006 ஆம் திகதிய கல்விச்சுடரில் வெளிவரும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடைக் குறிப்புகள்

## இணைந்த கணிதம் II

வெளியீடு 01

திரு S.S. செந்தில்ராஜ். B.Sc. யாழ்.

(இணைந்த கணிதம் II இன் விடைக்குறிப்புகள் 05.04.2006ஆம் திகதிய கல்விச்சுடரில் வெளியாகியிருந்தன. அதன் தொடர்ச்சி இங்கு பிரசுரமாகின்றன.)

(a) $\bar{x} = \sum_{i=1}^{n} \frac{x_i}{n}$

$V_{(x)} = \sum_{i=1}^{n} \frac{(x_i - \bar{x})^2}{n}$

$= \frac{1}{n}\{ \sum_{i=1}^{n} x_i^2 - 2\bar{x}\sum_{i=1}^{n} x_i + \sum_{i=1}^{n} \bar{x}^2 \}$ 05

$= \frac{1}{n}\sum_{i=1}^{n} x_i^2 - 2\frac{\bar{x}}{n}\sum_{i=1}^{n} x_i + \frac{1}{n}\sum_{i=1}^{n} \bar{x}^2$ 05

$= \frac{1}{n}\sum_{i=1}^{n} x_i^2 - 2\bar{x}^2 + \frac{1}{n}n\bar{x}^2$ 05

$= \frac{1}{n}\sum_{i=1}^{n} x_i^2 - \bar{x}^2$ 15

$x_1, x_2, \ldots \ldots x_n$ $y_1, y_2, \ldots \ldots y_n$ $x_1, x_2, \ldots \ldots x_n$ $y_1, y_2 \ldots y_n$

05

x y z

x y z

$6_x^2$ $6_y^2$ $6_z^2$

$n_1 + n_2$ $n_1 + n_2$

$(n_1 + n_2)\ 6z^2 = n_1 6x^2 + n_2\sigma_y^2 + n_1 n_2 (\bar{x} - \bar{y})^2$ [10]

[50]

(b) இடை $= \frac{13 \times 15 + 12 \times 12}{25}$ [10]

$= \frac{195 + 144}{25} = \frac{339}{25}$ [05]

$(13 + 126^2 = 13 \times 3 + 12 \times 2 + \frac{13 \times 12}{25}(15 - 12)^2$ [10]

$256^2 = 39 + 24 + \frac{156 \times 9}{25}$

$256^2 = 63 + \frac{1404}{25}$

$6^2 = \frac{1575 + 1404}{625}$

$= \frac{2979}{625}$

$6 = \sqrt{\frac{2979}{25}}$ [10]

[35]

(முற்றும்)

விடைக் குறிப்புகள்

## இரசாயனவியல் II


வெளியீடு 01

திரு. V.C. அன்பழகன் B.Sc.

(இரசாயனவியல் - II, பகுதி A இன் விடைக்குறிப்புகள் 29.03.2006ஆம் திகதி வெளியாகியிருந்தன. அதன் தொடர்ச்சி இங்கு பிரசுரமாகிறது.)

D) I) $H_2O$ - $SP^3$ II) $SO_2$ - $SP^2$ III) $SO_3$ - $SP^2$
IV) ICl - $SP^3$ V) HCN - SP

4) 1) $CH_3COCH_3$ உடன் HCN தாக்கப்பொறிநுட்பம்
2) $CH_3COCL$ உடன் $CH_3NH_2$ தாக்கப்பொறிநுட்பம்
3)




### பகுதி - B

1) a) $Ag(CN)_2^- \rightleftharpoons Ag^+ + 2CN^-$

$0.03(1-x)$ x $0.04+x$

$4 \times 10^{-19} = \frac{(Ag^+)(CN^-)^2}{(Ag(CN)_2^-)}$

$= \frac{X \cdot (0.04)^2}{0.03}$

$(Ag^+) = 7.5 \times 10^{-18}$ mole $l^{-1}$

b) $(NH_4)_2SO_4 + 2NaOH \longrightarrow Na_2SO_4 + 2NH_4OH$

$(NH_4)_2SO_4$ உடன் தாக்கப்பொதுமான NaOH எடுக்கப்பட வில்லை. எனவே $(NH_4)_2SO_4$ உம் $NH_4OH$ அமைவதால் தாங்கல் தொழில்பாட்டை காண்பிக்கும்.

சிறிது $OH^-$ சேர்ப்பின்

$NH_4^+ + OH^- \rightleftharpoons NH_4OH$

சிறிது H+ சேர்ப்பின்

$NH_4OH + H^+ \longrightarrow NH_4^+ + H_2O$

c) $AgI_{(S)} + H_2O \xrightarrow{\Delta H} Ag^+_{(aq)} + I^-_{(aq)}$

-876 (from $Ag^+_{(g)} + I^-_{(g)}$ to $AgI_{(S)}$); -464, -293 (from $Ag^+_{(g)} + I^-_{(g)}$ to $Ag^+_{(aq)} + I^-_{(aq)}$)

$-876 + \Delta H = -464 + C - 293)$

$\Delta H = 876 - 757KJ = 119KJ$

சாலசக்தி > நீரேற்றல் சக்தி, எனவே நீரில் கரையாது.

2) a) $H_2C{=}CH_{2(g)} + 3\,O{=}O_{(g)} \xrightarrow{\Delta H} 2O{=}C{=}O_{(g)} + 2H{-}O{-}H_{(g)}$

$414 \times 4 + 619$; $499 \times 3$; $724 \times 4$; $460 \times 4$

$2C_{(g)} + 4H_{(g)} + 6O_{(g)}$

$\Delta H + 724 \times 4 + 460 \times 4 = 499 \times 3 + 414 \times 4 + 619$

b) $SO_{2(g)} + NO_{2(g)} \rightleftharpoons SO_{3(g)} + NO_{(g)}$

சமனிலை மூல் 2-x 2-x 2+x 2+x

$KC = \frac{[SO_3][NO]}{[SO_2][NO_2]}$

$25 = \frac{(2+x)(2+x)}{(2-x)(2-x)}$

x = 8/6 = 1 1/3

$[NO] = 3.33$ Mol $l^{-1}$

$[NO_2] = 0.66$ Mol $l^{-1}$

c) I $H_2S \rightleftharpoons H^+ + HS^-$

$0.4(1-\alpha_2)$ $0.4\alpha_1$ $0.4\alpha_1$

II) $HS^- \rightleftharpoons H^+ + S^{2-}$

$0.4\alpha_1(1-\alpha_2)$ $0.4\alpha_1\alpha_2$ $0.4\alpha_1\alpha_1$

III) $1 \times 10^{-7} = \frac{[H^+]^2}{0.4}$

IV) $4 \times 10^{-8} = [H^+]^2$

$[H^+] = 2 \times 10^{-4}$ mol $l^{-1}$

2 ஆம் அயனாக்கத்தில் இருந்து கிடைக்கும் $H^+$ அயன் செறிவு மிக அற்பம் எனவே புறக்கணிக்கத்தக்கது.

V). $[HS^-] = 2 \times 10^{-4}$

VI). $K_2 = \frac{[H^+][S^{2-}]}{[45]} = \frac{2 \times 10^{-4} \times [S^{2-}]}{2 \times 10^{-4}}$

$[S^{2-}] = 1 \times 10^{-4}$ mol $l^{-1}$

$PH = \log_{10} Z \times 10^{-4}$

$= 4 - 0.3010 = 3.7$

3. a) I. $PN_2 = \frac{1 \times 720}{4} = 180$ KPa

$PH_2 = 3 \times 720 = 540$ KPa

II. $Kp = \frac{80^2}{180 \times 540^3} = 2.26 \times 10^{-7}$ $KPa^{-2}$

III. 1. புறவெப்பத் தாக்கமாதலால் $K_p$ அதிகரிக்கும்.
2. புறவெப்பத் தாக்கமாதலால் விளைவு கூடும்.

(இரசாயனவியல் -II இன் விடைக்குறிப்புகளின் தொடர்ச்சி 26.04.2006ஆம் திகதிய கல்விச்சுடரில் வெளிவரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org